Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 52 • 24.07.2016

மங்கள நிகழ்வுகளுக்கு
உங்கள் இல்லங்களில் இருக்க வேண்டியது.




தீபம்
நெய் விளக்கு

எல்லா கடைகளிலும்
பேற்று கொள்ளலாம்
077 632 2244



# ஏன் யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் அடிதடி நடக்கிறது?

யாழ்ப்பாண பல்கலைகழகம் பற்றிய அலசல் ரிப்போர்ட்




கிளிநொச்சியின் ரேகையழிக்கும் கொலைகாரர்கள் 4



வவுனியாவில் பேய்கள் உலாவும் ஐந்து வீதிகள் 10



குரு பகவான் பற்றிய முக்கிய தகவல்கள் 18



துருக்கியில் ராணுவப் புரட்சிக்குக் காரணம் என்ன? 23



2ம் ஆண்டில் கால்பதிக்கும் தமிழின் முதல்தர தீபம் வாரமலருக்கு எமது வாழ்த்துக்கள்...

முகாமைத்துவ பணிப்பாளர்
இ.பிரகாஷ் மற்றும் நிறுவன உத்தியோகத்தர்கள்

லண்டனிலிருந்து கப்பல் மற்றும் விமானம் மூலமாக பொதிகளை மிகக் குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பாகவும், நம்பிக்கையான முறையிலும் துரித கதியில் உங்கள் இல்ல வாசலில் பெற்றிடவும், இலங்கையிலிருந்து அனைத்து நாடுகளுக்கும் பொதிகளை அனுப்பிடவும்...

JPN SHIPPING LTD

0044 - 2086680252 | 0044 - 2086465222

Viber : 0044 - 7436261912

E-mail : info@jpnshippingltd.co.uk | Web : www.jpnshippingltd.co.uk

www.facebook.com/senthuran.selvam




www.facebook.com/kiruththigan.kukendran




மங்கள நிகழ்வுகளுக்கும் மற்றும் சுற்றுலா பயணங்களிற்கு ஏற்ற சகல வசதிகளும் பொருந்திய கார் மற்றும் வேன் வாடகைக்கு பெற்றிட ஒரே ஒரு இடம்!

GLOBAL RENT A CAR



077 071 2317

தீபம்
வார இதழ் விளம்பர தொடர்புக்கு
0768255567 sales@deepam.lk

## க்ளிக் பக்கம்

புத்தளத்தின் நீர்ப்பரப்பொன்றில் மிதக்கும் மரமும் பறவைகளும். மரத்தில் பூத்தது பறவைகளா?
**என்னைப்பற்றி:** நான் சியா. யாழ் பல்கலைகழக உடகவளத்துறை மாணவி.



படம்: பி.சியா
இடம்: புத்தளம்



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk

உடனடியாக சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் தேவை...
தகைமை உடையவர்களுக்கு தகுந்த சன்மானத்துடன் கொமிஷன் வழங்கப்படும்....
ஆண் பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்




உடன் தொடர்புகளிற்கு....
076 825 5567 | 021 492 7561
No. 197, Arasdy Road, Jaffna. | Web : www.deepam.lk தீபம்











வவுனியாவில்
சகல வசதிகளுடன் கூடிய அறைகளை பெற்றிடவும் உங்கள் சுபகாரியங்களை அனைத்து வசதிகளுடன் பொருந்திய மண்டபத்தில் நடாத்திடவும் மற்றும் சைனிஸ் உணவு வகைகளை சுவைத்திடவும்..
HOTEL PRINCESS ROSE
இல. 15, 4வது ஒழுங்கை, குருமன்காடு, வவுனியா.
தொ.பே : 024 2228000 / 077 3955551
E-mail : hotelprincessrose@aol.com Web : www.hotelprincessrose.com

2ம் ஆண்டில் கால்பதிக்கும் தமிழின் முதல்தர தீபம் வாரமலருக்கு எமது வாழ்த்துக்கள்...

# தடம் மாறுகிறதா தமிழ் தேசியம்?

செல்வம்

மன்னார்மாவட்டபொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த வாரம் மன்னாரில் கருத்தறியும் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் தலைவர், செயலாளர்கள், பொது அமைப்புக்கள் சிலவற்றின் பிரதிநிதிகள், மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் றோயல் இம்மானுவேல் உள்ளிட்ட பல கிறிஸ்தவ மதகுருமார்கள், அரசியல் விமர்சகர்கள் என மட்டுப்படுத்தப்பட்டளவிலானவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன் முதலான தலைவர்களும் அந்த கட்சிகளின் செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்தேசிய அரசியலின் பயணம் பற்றிய ஓரளவு பகிரங்க விவாதம் இதற்கு முன் நடந்ததில்லை. அதுவும் கட்சி தலைவர்களை உட்கார வைத்துக் கொண்டு, சிவில் சமூகத்தினர் கடும் விமர்சனம் வைப்பதெல்லாம் இதுவரை கற்பனையே பண்ண முடியாதது. ஆனால் ஒரு ஆச்சரிய சங்கதியாக அது நடந்துள்ளது. புதிய அரசியல் பயணத்தில் மக்களின் கருத்தறியும் ஆவல் கூட்டமைப்பின் தலைவர்களிடம் இருந்திருக்கலாம். அதனால் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கலாம். கடந்த 17ம் திகதி மன்னார் ஞானோதய மண்டபத்தில் நிகழ்வு நடந்தது. காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அரசியல் ஆய்வாளர்கள் நிலாந்தன், கே.ரீ.கணேசலிங்கம், ராதேயன், யதீந்திரா, உள்ளிட்டவர்கள் முதலில் உரையாற்றினார்கள்.

நிலாந்தன் உரையாற்றியபோது 'தற்போதைய அரசு மேற்கின் குழந்தை. இந்த

**ஆரம்பத்தில் அகிம்சை என்ற தடத்தில் பயணித்தோம். பின்னர் ஆயதப் போராட்டமாக பரிணமித்தது. இப்பொழுது ஜனநாயம், அகிம்சை என்ற தடத்திற்கு வந்துள்ளோம். தமிழ்தேசியம் தடம் மாறலாம். ஆனால் தடுமாறக்கூடாது.**

குழந்தை பிறப்பதற்கு தமிழர்கள் மருத்துவிச்சிகளாகத்தான் செயற்பட்டார்கள். குழந்தையா, மருத்துவிச்சியா என்ற நிலையேற்பட்டால் மேற்கு குழந்தைதான் வேண்டும் என்றும். தமிழர்களின் பேரம்பேசும் சக்தி தற்போது தாழ்ந்துவிட்டது' என்றார்.

மூத்த பத்திரிகையாளர் ராதேயன் உரையாற்றியபோது, 'எப்போதும் இல்லாத அளவுக்கு தமிழ்த் தேசியம் மிக மோசமான அழுத்தங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறது. சண்டை அரசியலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிற இலங்கை அரசு, நிவாரண அரசியல் பேசிக் கொண்டிருக்கிற இந்திய அரசு, பொருளாதார அரசியல் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிற அமெரிக்க அரசு இவர்கள் எல்லோரும் சேர்ந்து எங்களது தேசியத்தை என்ன செய்யப் போகிறார்கள் என்பது பெரிய கேள்வி. சுயமாக முடிவெடுக்கக் கூடிய தலைமை இருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்' என்றார்.


கே.ரீ.கணேசலிங்கம் உரையாற்றியபோது, 'புலம்பெயர்ந்த தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், ஈழத்தமிழர்கள் என்ற மூன்றும் ஒரே அணியில் கையாளக் கூடிய திறன் எங்களிடம் அவசியமாக எழுச்சி பெற வேண்டும். அதற்குரிய வாய்ப்புகள் இப்போதும் எங்களிடம் இல்லாமல் இல்லை. நிலம், மொழி, பண்பாடு ஆக்கிரமிக்கப் படுவதைத் தடுக்க நாங்கள் சட்டாறிதியாகவும் அல்லது பாராளுமன்றம் சார்ந்தோ எடுக்கின்ற அளவுக்கு முக்கியத்துவம் ஒரு திரளாக மக்கள் கூட்டமாக தேசிய பணி எங்களிடம் அருகிப்போய் இருக்கிறது. சமூக முன்னோடியாக மாற்றும் திட்டமிடல் எங்களிடம் போதாமல் இருக்கிறது. அந்த திட்டமிடலுக்குரிய கல்விச் சூழல்களை நாங்கள் ஏற்படுத்தத் தவறிவிட்டோம்' என்றார்.

இதன் பின்னர் பல்வேறு பிரமுகர்களும் கருத்து தெரிவித்தனர். தமிழ்தேசிய கூட்டமைப்பு புதிய அரசியல்சூழலில் எப்படியான உபாயங்களை கையாள வேண்டுமென்பது பற்றி அவர்கள் பேசினார்கள்.

பின்னர் அரசியல்கட்சிகளின் தலைவர்கள் கருத்து தெரிவித்தனர்.







### புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன்

ஆரம்பத்தில் அகிம்சை என்ற தடத்தில் பயணித்தோம். பின்னர் ஆயதப் போராட்டமாக பரிணமித்தது. இப்பொழுது ஜனநாயம், அகிம்சை என்ற தடத்திற்கு வந்துள்ளோம். தமிழ்தேசியம் தடம் மாறலாம். ஆனால் தடுமாறக்கூடாது.

தமிழ்தேசியம் அறுபது வருடங்களாக தாய் குழந்தைக்கு பாலூட்டுவதை போல எமக்கு ஊட்டி வளர்க்கப்பட்ட விடயம். தேசிய உணர்வு ஒவ்வொரு மனிதனுக்கும் தானாக உருவாகுவது. ஆகவே அது தடுமாற மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். நாமும் தடுமாற மாட்டோம்.

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

இப்பொழுது உள்ள அரசு வேறு கிரகத்தில் இருந்து வந்தவர்களா? சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை கைவிட்டவர்களா? என்ன அடிப்படையில் நாம் அவர்களில் நம்பிக்கை வைக்கிறோம்?

சாம்பல்தீவில் இப்பொழுது புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ளது. அரசு என்ன செய்திருக்க வேண்டும்? ஆனால் அதனை பாதுகாக்கிறது. தமிழ்மக்களின் கலாசாரம், சம்பிரதாயத்துடன் தொடர்புபட்ட நயினாதீவிற்கு செல்பவர்கள் இனி முதலில் புத்தர் சிலையைத்தான் வழிபட வேண்டிய நிலை.

இந்த அரசில் தமிழ் தேசிய கூட்டமைப்பை என்ன செய்ய வேண்டுமென்றால், இப்படி நடப்பவற்றை நிறுத்துவதுதான்.

### இரா.சம்பந்தன்

சிங்கள அரசு எமக்கு எதையும் தராதென கூற முடியாது. அப்படியானால் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டிய அவசியமில்லை. நாங்கள் மக்களின் உரிமைகளை பொறுத்தவரை உறுதியாகவும், அவதானமாகவும் இருக்க வேண்டும். நிதானமாக நடக்க வேண்டும். குழப்புவதற்கு சிலர் முயற்சிக்கிறார்கள். திருகோணமலையில், முல்லைத்தீவில் நடப்பவற்றை வேறு சிலர் செய்கிறார்கள். அரசு மாறியதே தவிர, இராணுவம் மாறவில்லை. இன்றும், பழைய அரசுக்கு விசுவாசமாக பல இராணுவ, அரச அலுவலர்கள் உள்ளனர். ஆகவே நிதானமாகவும், பக்குவாகவும் நடந்தே காரியங்களை முடிக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும். சமஷ்டி அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும். மக்களின் இறைமையின் அடிப்படையில் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றக்கூடிய வகையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென கேட்டுள்ளோம். மத்திய அரசின் அல்லது மத்திய அரசின் பிரதிநிதியான ஆளனரின் தலையீடின்றி மாகாணசபை இயங்க வேண்டுமென கேட்டுள்ளோம். உள்நாட்டு கடன், நன்கொடை, வெளிநாட்டு நிதியுதவிகளை பெற அதிகாரமிருக்க வேண்டும் என கேட்டுள்ளோம்.

உலகத்தில் பல்வேறுவிதமான சமஷ்டி முறைகள் உள்ளன. இப்பொழுது ஒஸ்ரியாவில் ஒற்றையாட்சிக்குள் சமஷ்டியென்ற புதிய முறை உள்ளது.

எந்த தீர்வானாலும், நாம் கட்சிக்குள் முடிவெடுத்து மக்கள் முன் வருவோம். தீர்வு பற்றி மக்களிற்கு விளக்கி, அவர்களின் சம்மதத்துடன்தான் அதனை பெற்றுக்கொள்வோம் என்ற வாக்குறுதியை நான் தருகிறேன்' என்றார்.

நமது தலைவர்களை பகிரங்க மேடைக்கு அழைத்து, அரசியல் பயணம் தொடர்பாக பகிரங்க கலந்துரையாடல் செய்வது தமிழ் ஜனநாயகவெளி அகன்று செல்வதன் நல்ல அறிகுறிதான். துமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு அப்பால் எல்லா கட்சிகளையும் பொது மேடையில் அமரச்செய்யும் முயற்சிகளையும் இனி ஆரம்பிக்கலாம். அப்படியான முயற்சி சில தலைவர்களை சுயவிமர்சனம் செய்து கொள்ளவாவது உதவலாம்! ●

# பல்கலைகழக போராளிகள்

ஹிருத்திக் போஸ் நிஹாலே

இலங்கை உயர்கல்வி நிறுவனங்கள் எப்பொழுதும் உணர்ச்சிக் கொந்தளிப்பாகத்தான் இருக்கும். பெரும் சமூக அசைவியக்ககருத்துருவாக்கங்கள் எல்லாம் பல்கலைகழகங்களில்த்தான் பெருமளவில் முதலில் வேரூன்றின. தென்னிலங்கை பல்கலைகழகங்களில் இன்றும் இடதுசாரித்துவ கருத்தால் ஈர்க்கப்பட்ட மாணவர்களின் செல்வாக்குத்தான் அதிகம். யாழ்ப்பாண பல்கலைகழகம் நீண்டகாலமாகவே தமிழ்தேசிய பாசறையாக இருந்தது என்றும் சொல்லலாம்.

தமிழீழ சிந்தனை யாழ்ப்பாண பல்கலைகழத்தில் கற்பிக்கப்படாத கல்வியாக வளர்ந்து வந்த காலமொன்றிருந்தது. பல்கலைகழகம் விடுதலைப்போராட்டத்துடன் நெருங்கிய பிணைப்பை கொண்டிருந்தது. தமிழர்களின் அரசியலில் அழுத்தங்கள் எல்லாவற்றிற்கும் யாழ்ப்பாண பல்கலைகழகம் எதிர்வினையாற்றியிருந்தது.


பல்கலைகழகங்கள் உணர்திறன்மிக்கவையென்பதற்கு இவையெல்லாம் நீண்ட, வெளிப்படையான உதாரணங்கள்.

இப்படியான பாரம்பரியம்மிக்க யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் பெரும் களேபரம் நடந்து, அனைத்து பீடங்களும் இழுத்து மூடப்பட்டு, மீளவும் இப்பொழுது கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞானபீட புதுமுக மாணவர்கள் வரவேற்பில் தோன்றிய சர்ச்சை அடிதடியில் முடிந்துள்ளது. பல்கலைகழகத்தில் நடக்கும் எண்ணற்ற மோதல்களை போல இதுவும் ஒரு மோதல்தான்.இப்படியான மோதல்களை பல தடவை யாழ் பல்கலைகழகம் சந்தித்துள்ளது. ஆனால் இம்முறை மோதல் சற்று வித்தியாசமான பரிமாணத்தை எட்டியுள்ளது. இதற்கு காரணம், மோதிக் கொண்டது தமிழ், சிங்கள மாணவர்கள்.

இந்த மோதல் விவகாரம் விஸ்பரூபம் எடுத்ததிற்கு காரணம் செய்தி ஊடங்களும், சமூக வலைத்தளங்களுமே. என்னதான் நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் இனங்களிற்கிடையிலான பகை அவ்வளவு விரைவில் மறைந்து போகாதென்பதற்கு இந்த சம்பவம் ஒரு நல்ல உதாரணம். செய்தி ஊடகங்கள், சமூக ஊடகங்களில் மோதல் பற்றிய வெளியான எதிர்வினைகள் அச்சம் தருவதாக இருந்தது. ஒரு இனமோதலாகவே பெருமளவிற்கு அது சித்தரிக்கப்பட்டது.

உண்மையில் பல்கலைகழகத்தில் நடந்தது, இரண்டு மாணவகுழுக்களிற்கிடையிலான மோதல். எல்லாகாலத்திலும் பல்கலைகழகத்தில் மோதல் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அது யாருக்கிடையிலானது என்பதுதான் விவகாரம். ஒன்றில் மாகாண ரீதியில், அல்லது யாழ்ப்பாணம் வன்னி என, அல்லது பிரபல பாடசாலைகளை மையப்படுத்தி மோதிக் கொள்கிறார்கள். பல்கலைகழகத்தின் அன்றாட செயற்பாடுகளிலொன்றாகவே இந்த மோதல் அமைந்துவிட்டது. இப்பொழுது இரண்டு இன மாணவர்களிற்கிடையிலான மோதல்.



பல்கலைகழகத்தில் எல்லா சட்டங்களிற்கும் போக்குகாட்டியபடி பகிடிவதை செய்பவர்கள்தான் இந்த மாணவர்கள். பல்கலைகழக மாணவர்களிடம் பகிடிவதை, மோதல் சாதாரணமாகிவிட்டது.

இதுவரையான எல்லா மோதலும் ரௌடித்தனமாக இருந்ததைபோல, இதுவும் ரௌடித்தனம்தான். அந்த மோதலிற்கு இனச்சாயம் பூசி, மோதல் போக்கை தூண்டுவது உண்மையில் அருவருக்கத்தக்கது. பெரும்பாலான சமூக ஊடகவாசிகள் மோதலிற்கு தேசிய சாயம் பூசினார்கள். குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் சமூக ஊடகவாசிகள்தான் அதிகம் உணர்ச்சிவசப்பட்டார்கள்.

இந்தவகையான மோதல்களிற்கு தேசிய சாயம் பூசுவது ஆபத்தானது. பல்கலைகழகத்தில் கல்வி கற்கவரும் சிங்கள மாணவர்கள் மீது தாக்குதல் நடத்துவதை தமிழ்தேசியத்துடன் முடிச்சுப்போடுவது உண்மையில் தமிழ்தேசியத்தை இழிவுசெய்வது.

யாழ்ப்பாண பல்லைகழகத்தில் தமிழ் கலாசாரத்திற்கு ஊறு விளைவிக்கப்படுகிறதென மாணவர்கள் உணர்ந்தால், அதற்கு எதிராக போராட நிறைய வழிகள் உள்ளன. கலாசார தடம்மாறலிற்கு பல்கலைகழக நிர்வாகம்தான் காரணம். அவர்களிற்கு அழுத்தம் கொடுக்கும் போராட்டங்கள்தான் செய்யப்பட வேண்டும்.

பல்கலைகழகத்தில் தமிழ் கலாசாரம் பாதிக்கப்படுவதாக மாணவர்கள் குமுறுவதில் சில தர்க்க முரண்களும் உள்ளன. இனங்களிற்கிடையிலான இப்படியான பதட்டங்கள் இனத்திற்கு நன்மை செய்யும் விடயமல்ல என்பதை மாணவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். பல்கலைகழகத்தில் கலாசாரம் பாதிக்கப்படுவதாக மாணவர்கள் உண்மையாகவே குமுறுவார்களாக இருந்தால், யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் பகிடிவதை சீரழிவு இருக்காது. யாழ் பல்கலைகழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் சிலர் மீது காலம்காலமாக சுமத்தப்பட்டு வரும் 'பாலியல் இலஞ்ச' குற்றச்சாட்டுக்களிற்கு இடமிருக்காது.


பல்கலைகழகத்தில் கண்டிய நடனம் ஆடப்படுவதை தடுப்பதற்கு முன்னர் அவசியமாக தடுக்க வேண்டியவை அவை. இலங்கை பல்லினநாடு என்ற அடையாளத்தை நோக்கி நகர்வதுதான் புதிய இலங்கையை கட்டியெழுப்ப வழி. இனநல்லிணக்கமென்பது பெரும்பான்மையின அடையாளங்களை ஏற்றுக் கொள்வதல்ல. நமது அடையாளங்களை பேணி, சக இனங்களின் அடையாளங்களை ஏற்றுக் கொள்வதுதான்.

தற்போதைய சூழலில் இந்தவகையான வன்முறை மோதல்கள் எதற்கும் உதவாது. மாறாக தேவையற்ற நெருக்கடிகளைத்தான் மாணவர்களிற்கு ஏற்படுத்தும். அன்று மோதலில் ஈடுபட்ட எந்த மாணவனும் நிச்சயம் அறிந்திருக்கமாட்டான் அதற்கு தேசிய சாயம் பூசப்படுமென. துலீன் ஒரு 'தேசிய காரியத்தில்' ஈடுபடுவதாக. மோதலில் ஈடுபட்டவர்களை இப்பொழுது சமூகவலைத்தளவாசிகள் தேசியவீரர்களாக்கிவிட்டனர்.

மோதலில் ஈடுபட்டார்கள் என மாணவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டால், சமூகவலைத்தள போராளிகள் என்ன செய்வார்கள்? இரண்டுநாள் அந்த மாணவனிற்காக வலைத்தளங்களில் எழுதிவிட்டு, அடுத்தவிடயத்திற்குதாவிவிடுவார்கள். மாணவனின் கதி?

ஏதோ காரணத்தால் மோதலில் ஈடுபட்டு, பின்னர் யாரோ சிலரால் தேசியவாதியாக்கப்பட்டு, அனைத்திற்கும் சேர்த்து அந்த மாணவர்களே விலையும் செலுத்த வேண்டியதாக முடியும். தமிழ் சூழலில் இதற்கு ஏராளம் உதாரணங்கள் உள்ளன. தேசத்திற்காக, இனத்திற்காக வாழ்வை அர்ப்பணிப்பது ஒரு மாபெரும் தியாகம். ஆனால், மாணவப்பருவத்து உணர்ச்சிகளையெல்லாம் தேசிய எழுச்சிகளாக சமூகப்வலைத்தள பாவனையாளர்கள் மாற்ற முனைவது ஆபத்தானது. ஏனெனில் ஒவ்வொரு சமூக வலைத்தள பாவனையாளரும் தனது பாதுகாப்பை உறுதிசெய்து கொண்டு, வேறு யாரையோவையெல்லாம் களத்திற்கு அனுப்ப முயற்சிக்கிறார்கள்.

போராளிகள் உருவாகலாமே தவிர, உருவாக்கப்பட முடியாது.





## தீபத்திற்கு ஒரு வயது

தீபம் வார இதழிற்கு ஒரு வயது பூர்த்தியாகியுள்ளது. கடந்த வருடம் யூலை மாதம் 20ம் திகதி தீபத்தின் முதலாவது இதழ் வெளியாகியது. அன்றிலிருந்து இன்றுவரை எண்ணற்ற தடைகள், சவால்களை கடந்து தீபம் இரண்டாவது ஆண்டில் காலடி பதிக்கிறது.

ஐரோப்பாவை தளமாக கொண்டியங்கும் தீபம் ஊடகக்குழுமம் ஊடக உலகின் மிகப்பிரபலமானது. 16 வருட தொலைக்காட்சி வரலாற்றை கொண்டது. தாயகத்துடன் வேர் அறுபடாத தீபம் ஊடகக்குழுமம் இலங்கையில் பத்திரிகையொன்றை வெளியிட திட்டமிட்ட சமயமும், பாராளுமன்ற தேர்தலும் கிட்டவாக அமைந்து விட்டன.

கடந்த பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்திருந்த சமயத்தில் தீபத்தின் முதலாவது இதழ் வெளியாகியது. அன்றிலிருந்து இன்றுவரை வாராந்தம் தீபம் வெளியாகிக் கொண்டிருக்கிறது.

வெளியான சமயத்தில் தீபம் சந்தித்த முதலாவது சவால் அது ஒரு தேர்தல் பிரச்சார சஞ்சிகையென்பது. ஏதோ ஒரு அரசியல்கட்சியின் பிரசார பீரங்கியென்றும் கருத்துக்கள் பரப்பப்பட்டன. பரவலான வாசகர்கள், விளம்பரதாரர்களை கட்டியெழுப்ப இந்த கருத்து தடையாயிருக்கும். எனினும், அந்த சவாலை தீபம் கடந்தது. தேர்தல் சமயத்தில் தீபத்தை கட்சிப்பத்திரிகையாக்கி, போட்டிக்களத்திலிருந்து சுலபமாக விலக்கி வைக்க பரவலான முயற்சிகள் நடந்தன. அவற்றையெல்லாம் கடந்தோம்.

இணையப்பாவனை பரவலடைதல், வாழ்க்கைமுறை மாற்றம் முதலான பல்வேறு காரணங்களினால் பத்திரிகைகளின் ஆயுள் குறைந்து கொண்டு செல்லும் சவாலான காலத்தில் வாழ்கிறோம். இலங்கையில் பதிதாக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை முயற்சிகள் பெருமளவிற்கு தோல்வியடைந்து கொண்டு செல்லும் காலத்தில் தீபம் நம்பிக்கையுடன் களமிறங்கியது.

தமிழ் ஊடகப்பரப்பில் தரமான ஊடகங்களிற்கு வரவேற்பிருக்கும், மக்களின் நாடித்துடிப்பை பிரதிபலிக்கும் ஊடகங்களை மக்கள் கைவிடமாட்டார்கள் என்ற நமது நம்பிக்கை மெய்யானதன் சாட்சியே இந்த ஒரு வருட பூர்த்தி!

இந்த ஒரு வருடத்தில் தீபம் புதிய பல நம்பிக்கைகளை கட்டியெழுப்பியுள்ளது. ஊடக ஒழுக்கம், செய்தி சொல்லும்முறை என்பவற்றில் புதியபோக்கை இலங்கைத்தமிழ் ஊடகப்பரப்பில் அறிமுகப்படுத்தியுள்ளது. பேச்சு அரசியலுக்கு அப்பாலுள்ள மக்கள் பிரச்சனைகளை தமிழ் ஊடகங்கள் கண்டுகொள்ளாத நிலையில் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தது தீபத்தை மக்கள் ஊடகமாக்கியுள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் தீபம் இதழ்களை தொடர்பவர்கள் தீபத்தின் ஊடகநடுநிலையை புரிந்திருப்பார்கள். தீபம் எந்த சமயத்திலும் தன்னை நடுநிலையானதென கூறியது கிடையாது. அது நீதியின் பக்கம் நின்றது. மக்களின் பக்கம் நின்றது.

எல்லாவகையான அநீதிகளையும் தீபம் துணிச்சலுடன் சுட்டிக்காட்டியது. கட்சிகள் பாராமல் மக்கள் பிரதிநிதிகளின் பிழைகளை, குறைகளை சுட்டிக்காட்டியது. உண்மையும், நீதியும் மட்டுமே தன்னிரு கண்களாக கொண்டிருந்தது.

அச்சுஊடகங்களின் தேய்மான காலத்தில் பத்திரிகையொன்று ஒரு வருடத்தை நிறைவு செய்வது சாதாரண விடயமல்ல. அந்த நெருப்பாற்றை தீபம் நீந்திக்கடந்தது. அதற்கு துணிச்சலும், பாதுகாப்பும் கொடுத்தது வாசகர்களான நீங்கள். உங்கள் ஒவ்வொருவரின் ஆதரவுமே எமது நம்பிக்கை. உங்கள் ஒவ்வொருவரிடமும் உள்ள தீபத்தின் மீதான நம்பிக்கைதான் எமது கவசம். அவற்றை தொடர்ந்து காப்பது எமது கடமை.

தீபத்தின் இந்த ஒருவருட பயணத்தில் எம்முடன் உறுதுணையாக இருந்தவர்கள் பலர். அவர்கள் ஒவ்வொருவரையும் நன்றியுடன் நெஞ்சிலிருத்திக் கொள்கிறோம். செய்தியாளர்களில் தொடங்கி விநியோகஸ்தர்கள் ஊடாக வாசகர்களில் முடியும் பயணமல்ல இது.

இது ஒரு வரலாற்று பயணம். எம்முடன் இணைந்திருந்த எல்லோருக்கும் நன்றிகள்.


மக்களின் நம்பிக்கையை காப்பதுதான் நமது கடன்!

**தீபம்**
197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இதுவரை இயங்கி வந்த தீபம் ஊடககுழுமம் இம்மாதம் முதல் புதிய முகவரிக்கு இடம்மாறியுள்ளது. 197, அரசடிவீதி, யாழ்ப்பாணம் என்ற புதிய முகவரியில் இயங்கிக் கொண்டிருக்கிறதென்பதை அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகிறோம்.

# சொன்னார்கள்



**ரெஜினோல்ட் கூரே – வடக்கு ஆளுனர்**

பல்கலைகழக மோதல் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராயாமல் அதனை குழப்புவது எப்படி என்று வடக்கு கிழக்கிலுள்ள அரசியல்வாதிகள் சிலர் ஆராய்கிறார்கள். சட்டம், அமைதிக்கு புறம்பாக நடப்பவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட நாட்டிற்குள் இருக்க முடியாது. இந்த சம்பவம் நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.



**உதய கம்மன்பில – பாராளுமன்ற உறுப்பினர்**

நீஷா பிஷ்வால் இலங்கைக்கு 20 மாதங்களில் 6 தடவைகள் இலங்கைக்கு வந்து சென்றதாக குறிப்பிட்டார். அவர் ஏன் இங்குவந்தார்? தனது திருமணத்திற்கு மாப்பிள்ளை பார்க்கவா? இல்லை. சிலாபம் பக்கம் தென்னம் தோப்பை வாங்கி, பின்னர் அந்தபக்கம் போகும் போது அதனை பார்த்துக் கொள்ளும் கங்கானி ஒழுங்காக செயற்படுகின்றாரா என்பதை கண்காணிக்கும் வழக்கம் எமது செல்வந்தர்கள் மத்தியில் உள்ளது. இதேபோன்று நிலைமையில்தான் இன்று இலங்கை உள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கங்காணியின் வேலையைதான் செய்கின்றார். அமெரிக்காவின் தோட்டமாக இலங்கை உள்ளது.



**சிவசக்தி ஆனந்தன் – பாராளுமன்ற உறுப்பினர்**

ஓமந்தை பிரதேசம் பேய்கள் உலாவும் இடம். அந்த இடத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்க முடியாதென அமைச்சர் ஹரிசன் குறிப்பிட்டிருந்தார். அந்த மக்கள் தான் ஆட்சி மாற்றத்துக்கு வாக்களித்து ஹரிசனும் ஒரு அமைச்சராக இருப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் என்பதை அமைச்சர் ஹரிசன் மறந்துவிடக்கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கிடையில் தேவையற்ற முரண்பாடுகளை உருவாக்கிஇ வடக்கு மாகாணத்திற்கென ஒதுக்கப்பட்ட இந்த அபிவிருத்தித் திட்டத்தை வேறு எங்காவது கொண்டுசெல்ல முயற்சிக்கின்றார்களா? என்ற கேள்வியும் எழுகின்றது.




**துரைரெட்ணசிங்கம் – பாராளுமன்ற உறுப்பினர்**

திருகோணமலை சாம்பல்தீவு சந்தியில் வைக்கப்பட்ட புத்தர் சிலை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். நீண்டகாலத்திற்குப் பின்னர் இந்தநாட்டில் சிறுபான்மைமக்களும் இணைந்து நாட்டின் வளர்ச்சிக்கு பங்களித்துவரும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது வேதனையான விடயமாகும்.



**மாவை சேனாதிராசா – தமிழரசுக்கட்சி தலைவர்**

இப்போது தமிழர்களும் முஸ்லீம்களும் துருவப்பட்டு நிற்கிறார்கள். புலிகளின் காலத்தில் இமாமை முஸ்லீம்கள் சார்பில் நாடடாளுமன்ற உறுப்பினராக்கினோம். இப்பொழுது அஸ்மினை மாகாணசபை உறுப்பினராக்கியுள்ளோம். ஆனால் இது போதாது. முஸ்லீம்களுடன் இன்னும் நெருக்கமாக பணியாற்ற வேண்டும்.



**மொகான் டி சில்வா – பேராசிரியர்**

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட மோதலுக்கு தூண்டுதலே காரணமாகும். இதுபோன்ற சம்பவங்கள், ஏனைய பல்கலைக்கழகங்களிலும் ஏற்படலாம். கலைப்பீட மாணவர்கள் தான் மோதலை ஆரம்பித்துள்ளனர். நிலைமையைக் கட்டுப்படுத்த யாழ். படைகளின் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவும், பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு உதவினார் யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கள தமிழ் மாணவர்களுக்கிடையில் பிரச்சினை இல்லை. ஆனால், இதுபோன்ற தூண்டுதல் சம்பவங்கள் சில உள்ளன. இதனால் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் இதுபோன்ற நிலைமை ஏற்படுமோ என்ற கவலைகள் உள்ளன.

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
editor@deepam.lk





# ஏன் யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் அடிதடி நடக்கிறது?

எஸ்.என்.நிக்ஷன்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இரண்டு மாணவ குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் இன்றைக்கு தேசிய அளவில் மிகப் பெரும் சலசலப்பை ஏற்படுத்தும் விடயமாக மாறியிருக்கின்றது. இந்த விடயத்தை வைத்து இனவாதத்தை கிளப்பி தமிழ் சிங்கள மக்களிடையே மீண்டும் ஒரு முறுகல் நிலையைத் தோற்றுவிக்க பல்வேறு தரப்புக்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. ஆனால் உண்மையில் யாழ்ப்பாண பல்கலைக்கழககத்தில் இடம்பெற்ற மோதல் இரண்டு இனங்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் அல்ல.இரண்டு மாணவ குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலென்பதே சரி.

ஆனால் இந்தமோதலிற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய பல்கலைக்கழக நிர்வாகம் அதிலிருந்து தப்பித்து மாணவர்களை மாட்டிவிட்டுள்ளது. ஊடகங்களும், சமூக வலைத்தள கருத்தாளர்களும் அதைப்பற்றி பேசவில்லை. பல்கலைகழக நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயற்பாடுதான் இந்த மோதல்களின் பின்னணியென்பதை புலமையாளர்கள் மெதுவாகவேனும் இப்பொழுது பேச ஆரம்பித்துள்ளது மகிழ்ச்சி.

பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளின் நிகழ்ச்சி நிரல்கள் முன்னரே தயாரிக்கப்படுவது வழமை. அந்த நிகழ்ச்சி நிரல்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தின் ஒப்புதலுடன்தான் நடைமுறைப்படுத்தப்படுவது வழக்கம்.

ஆனால் மோதல் நடந்த அன்று இது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. விஞ்ஞானபீட புதுமுக மாணவர் வரவேற்பு நிகழ்வில் சர்ச்சையை ஏற்படுத்தியது கண்டிய நடனம். அது நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. பல்கலைகழக நிகழ்வுகள் தமிழர் பண்பாட்டின் அடிப்படையிலேயே நடத்தப்படுவது வழக்கம். இம்முறை சிங்கள கலாசாரம் இடையில் புகுந்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சும்பவ தினத்தில் திடிரென எங்கிருந்தோ அழைத்துவரப்பட்ட கண்டிய நடனக் குழுவினரை நிகழ்வின் இறுதி இடத்திலே நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு சிங்களமாணவர்கள் நிர்ப்பந்தித்துள்ளனர். இதனையடுத்து சர்ச்சை வெடித்துள்ளது. நிகழ்சிநிரலில் உள்வாங்கப்படாத கண்டிய நடனத்தை அனுமதிக்க முடியாதென அங்கிருந்த தமிழ் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். பின்னர், சிங்களதமிழ் மாணவ குழுக்களுக்கிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு எங்கிருந்தோ வந்தவர்களினால் திடிரென தமிழ் மாணவர்கள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தப்பட்டது. பின்னர் தமிழ் மாணவர்களும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். எண்ணிக்கையில் தமிழ் மாணவர்கள் குறைவாக இருந்ததால், அவர்கள் அங்கிருந்து தப்பியோடி, அருகிலிருந்து இன்னொரு மாணவர் குழுவிடம் உதவி கோரியுள்ளனர். இவர்களும் தாக்குதலில் பங்கேற்க, சிங்கள மாணவர்கள் மீது பலமுனை தாக்குதல் நடத்தப்பட்டது. சிறிதுநேரத்தில் சிங்கள மாணவர்கள் தலைதெறிக்க தப்பியோடி விட்டனர்.

இதுதான் சம்பவ இடத்தில் நடந்தது. இந்த விவகாரம் ஊடகங்களில் செய்தியாக, காயமடைந்த சிங்கள மாணவர்களின் படங்கள் முன்பக்கத்தில் இடம்பிடித்தன. அதிலும் மாணவிகள் இரத்தக்கட்டுடன் இருந்த படங்கள் கூடுதல் அனுதாபத்தை சம்பாதித்தன. இது தமிழ் சமூகவலைத்தளவாசிகளை இரண்டு பிரிவாக்கியது. தமிழன்டா, கிழக்கு பல்கலைகழக மாணவர்கள் என நினைத்தாயா, சிங்களவன் கொட்டம் அடக்கிய மறத்தமிழர் என ஒரு வகையானவர்கள் புல்லரித்தார்கள். இன்னொரு வகையானவர்கள் ஓவராக அசௌகரியப்பட்டனர். இது பச்சை தமிழ் இனவாதம் என வரிந்து கட்டினார்கள்.

ஆனால், விடயமென்னவெனில் இது இரண்டுமேயல்ல.

பல்கலைகழக மாணவர்களிற்கிடையில் காலம்காலமாக நடக்கும் மோதல். இம்முறை இரண்டு இன மாணவர்கள் மோதிக்கொண்டார்கள் அவ்வளவுதான்.

இதற்கு பல்கலைழக பொறுப்பில் இருப்பவர்கள் காரணமாக அமைந்து விட்டார்கள் என்பதுதான் உள்ளக தகவல்கள். விஞ்ஞானபீடத்தின் முக்கிய பொறுப்பில் இருக்கும் போசிரியர்கள் சிலர், பதவிகளை குறிவைத்து சிங்கள மாணவர்களுடன் நெருக்கம் பேணுகிறார்கள் என்ற முணுமுணுப்பை கடந்த சில காலமாகவே அங்கு பரவலாக கேட்க முடிகிறது. சிங்கள மாணவர்களுடனான நெருக்கம் தென்னிலங்கை அரசியல்வாதிகளிடம் நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தும் என்பது அவர்கள் போட்ட கணக்கு என்கிறார்கள்.

இதை மெய்ப்பிப்பதாகவே அன்றைய



**ராஜா ரெமீஜியஸ் கனகராஜா**
தலைவர்
யாழ் அரசகுடும்பம்

யாழ்ப்பாண பல்கலைகழக மோதல்களிற்கு காரணம் பல்கலைகழக அமைப்பில் பிழையுள்ளது. மாணவர்களை வழிப்படுத்தஇ மாணவர்களிற்கு கல்வியில் கவனத்தை குவிக்க முறையான செயற்திட்டமில்லை.

யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் கற்பதற்காக வெளியிலிருந்து வருபவர்கள் எமது கலாசாரத்தை மாற்ற முடியாது. நமது கலாசாரத்தின்படியே நடக்க வேண்டும். யாழ்ப்பாண பல்கலைகழகமென்பது தமிழ் கலாசாரத்தின் கண்ணாடி. அதைதான் பிரதிபலிக்க வேண்டும். சிங்கள பல்கலகழகங்களிற்கு செல்லும் தமிழ் மாணவர்கள்இ அந்த சூழலுடன் இணைந்து கல்வி கற்று வரவில்லையா? அதுபோலத்தான் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்க வருபவர்களும் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த நெருக்கடிக்கு காரணம் பல்கலைகழக நிர்வாக சீரின்மை. அவர்கள் நிகழ்வை முறைப்படி ஒழுங்கமைத்திருக்க வேண்டும். இற்த குழப்பத்திற்கு தார்மீக பொறுப்பேற்று துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் பதவி விலக வேண்டும். அவரது காலத்தில்த்தான் பல்கலைகழகத்தில் நிறைய குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன

**பேராசிரியர்**
**பொ.பாலசுந்தரம்பிள்ளை**
முன்னாள் துணைவேந்தர்



யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தைப் பெரிதுபடுத்தக் கூடாது. பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இவ்வாறான பிரச்சனைகள் வருவது வழக்கம். இதனைப் பெரிதுபடுத்தி ஊதிப் பெருப்பிப்பதை தவிர்க்க வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சனைகள் வராமலிருப்பதற்கு மாணவர்களையே சுயமாகச் சிந்திக்க விட்டாலே போதும். அவர்கள் சுயமாகச் சிந்தித்து ஒற்றுமையாக ஒன்றாகச் செயற்படுவார்கள். அதேநேரம் வெளியாட்கள் உற்சாகப்படுத்துவதோ உள் நுழைவதோ கூடாது.

நான் கடந்த 55 வருட காலமாக பல்கலைக்கழகத்தில் இருக்கின்றேன். எத்தனையோ சண்டை சச்சரவுகளைப் பார்த்திருக்கிறேன். பல்கலைக்கழகத்திற்கு சோல்கள், வரவேற்புகள் என இப்படி எத்தனையோ நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. அதில் பல பிரச்சனைகளும் வந்திருக்கின்றன. இது வழமையாக நடைபெறுகின்ற நிகழ்வுகள்தான். அதேநேரம் மாணவர்களுக்குள்ளும் சண்டைகள் வருவது தான்.


இதற்குப் பெரியளவில் ஆய்வுகள் எல்லாம் செய்யத் தேவையில்லை. பக்குவமாக நடந்து கொள்ளுமாறு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினாலே போதும். ஏனெனில் மோதிக் கொண்ட மாணவர்களே தேவையில்லாமல் சண்டை பிடித்துவிட்டோம் என்ற நினைக்கின்ற நிலைமையிலையே இருக்கின்றனர். சண்டை படித்தவர்கள் நண்பர்காளவது வழமைதானே. அதேபோன்று இவர்களும் நண்பர்களாகுவார்கள். ஆகவே இதில் வெளியாட்கள், அரசியல்வாதிகள், பொலிஸ் இதற்குள் நுழைந்தால் பிரச்சானைகள் பெரிதாகுமே தவிர இதனை தீர்த்து வைக்க முடியாது என்பதை அனைவரும் விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டும்.

சம்பவமும் நடந்துள்ளது. நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்படாத சிங்கள மாணவர்களின் கண்டிய நடனத்தை அரங்கேற்றுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தில் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவர் உத்தியோபூர்வமற்ற வகையில் தன்னிச்சையாக அனுமதி வழங்கியுள்ளதாகவே பல்கலைக்கழக உள்ளக தகவல்கள் கூறுகின்றன. விஞ்ஞானபீடத்தில் முக்கிய பொறுப்பில் இருக்கும் அந்தப் பேராசிரியருடன் வாய்மூலம் பேசப்பட்டு, அவரால் வழங்கப்பட்ட வாய் மூலமான உறுதியின்படியே கண்டிய நடனம் புகுத்தப் பட்டுள்ளது. இது தமிழ் மாணவர்களுக்கோ, பல்கலைக்கழக முக்கிய நிர்வாக பொறுப்பிலே இருப்பவர்களுக்கோ விடயம் தெரியாது.

மொத்தத்தில் பல்கலைகழக நிர்வாகத்திலுள்ள சிலரின் தவறு மாணவர் மோதலை தோற்றுவித்துள்ளது. செய்தி, சமூக வலைத்தளவாசிகளின் செயற்பாடு அதனை இனமோதலாக்கியுள்ளது.

பல்கலக்கழக நிர்வாகம் தற்போது ஒரு விசாரணைக் குழவை அமைத்திருக்கின்றது. அதில் தமிழ், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த மூவர் உள்ளடங்கப்பட்டிருக்கின்றார்கள். இந்தக் குழவின் விசாரணைகளின் பிரகாரம் குற்றமிழைத்த மாணவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அறிவித்திருக்கின்றார்.

இப்பொழுது அவசியமாக உள்ளது,யார்



உருட்டுக்கட்டையெடுத்து அடிபட்டது, யார் கல்லெறிந்தது என்பதை அறிவதல்ல. அதற்கு முதல் இந்த மோதல் ஏன்.ஏற்பட்டதென்பதை அறிவதே. அப்படி அறிய முயன்றால் அங்கு மாணவர்கள் மட்டும் குற்றவாளி கூண்டில் நிற்க மாட்டார்கள் என்பது நிச்சயம். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அப்படியான எதிர்பார்ப்பு மிகையானது.

இலங்கை பல்கலைக்கழக சூழலில் எப்போதும் எல்லா தவறுகளும் மாணவர்களினதே. மாணவர்கள் தண்டனை பெறவும், ஆசிரியர்கள் தண்டனை வழங்கவும் படைக்கப்பட்ட ஜீவன்கள் என்பதையொத்த நடைமுறையே உள்ளது.

இந்த விசாரணைக்குழு என்ன செய்யும்? ஊடகங்களில் வெளியான ஒளிப்பட காட்சிகளை ஆராயும். யார் கை ஓங்கினார்? யார் மட்டை தூக்கினார்? என்பதை கண்டுபிடிக்கும். பிரச்சனையின் வேர் அதுவல்ல. வேரை கண்டறியாதவரை இந்த பிரச்சனைகளை தீர்க்க முடியாது. ஏனெனில், இலங்கை பல்கலைகழகங்கள் அனைத்திலுமே மோதல் என்பது சர்வசாதாரணம். யாழ்ப்பாண பல்கலைகழகமும் அதற்கு விதிவிலக்கல்ல. பல்கலைகழகத்தில் ஏனிந்த மோதல் கலாசாரம் தொடர்கிறது?

இதனை தடுக்க என்ன செய்யலாம்? எங்கே தவறுள்ளது? மாணவர்களில் தவறுள்ளதா அல்லது உயர்கல்வி நிறுவனங்களின் அமைப்பில் தவறுள்ளதா?

இதைத்தான் அவசரமாக நாம் கண்டறிய வேண்டும். ●



**த.ரிசிதரன்**
தலைவர்
யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

பல்கலைக் கழகத்திற்குள் எதிர்பாராத விதமாகவே அன்றையதினம் மாணவர்களுக்குள் மோதல் ஏற்பட்டிருந்தது. அதனைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை. ஆகவே பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பித்து மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் சேரந்து கற்பதிலோ நிகழ்களிலோ கலந்து கொள்வதற்கோ எமக்குப் பிரச்சனையில்லை. நாம் மாணவர்கள் என்ற அடிப்படையில் ஒன்றாகச் செயற்படுவோம். ஆனால் அதற்காக காலாச்சாரப் பாரம்பரியங்களைக் கைவிடுவதற்கோ அல்லது மாற்றியமைப்பதற்கோ தயாராக இல்லை.

# படைப்பாளிகள் கொண்டாட்ட திருவிழா

## வெற்றியாளர் விபரங்கள்



தீபம் வாரஇதழின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மாபெரும் சிறுகதை, கவிதை, கட்டுரை போட்டிகள் பற்றி அறிவிப்பை வெளியிட்டிருந்தோம். இலங்கை முழுவதிலிருந்தும் பெருமளவான படைப்புக்கள் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அனுப்பப்பட்ட படைப்புக்களில் முதற்சுற்று தேர்வுக்கு உள்ளாக்கி, அதில் தேர்வு செய்யப்பட்டவற்றை நடுவர்களிடம் கொடுத்து வெற்றியாளர்களை தேர்வு செய்துள்ளோம். இதில் வவுனியா கோமரசன்குளம் மகாவித்தியாலய மாணவர்களின் திறன் வெளிப்பாடு அசாத்தியமானதாக இருந்தது. இலங்கையின் பல பிரதேசங்களிலிருந்தும் மாணவர்கள் கலந்து கொண்ட கட்டுரை போட்டியில் முதல் மூன்று இடங்களையும் அவர்கள் வென்றிருப்பது, பாராட்டப்பட வேண்டியது.

**நடுவர்கள்**

● **சிறுகதை** ந.சத்தியபாலன் ● **கவிதை** த.ஜெயசீலன் ● **கட்டுரை** எமில்

### சிறுகதை

1ம் இடம்
நான் வேக்கறிக்கு போறன்
ப.உதயகுமார்
தேரிட்டி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி

2ம் இடம்
தேய்பிறை
த.பரமலிங்கம்
45/மவுண்மேல் வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

3ம் இடம்
அவள் அப்படியானவள் அல்ல
ப.உதயகுமார்
தேரிட்டி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி

### கவிதை

1ம் இடம்
வீதிக்கு ஒரு வீதி செய்வோம்
ஜெ.கந்தவேல்
இல.61, ஆடியபாதம் வீதி, கொக்குவில்
கிழக்கு, கொக்குவில்

2ம் இடம்
மாவீரன் மனைவி
ச.சுகர்ணன்
யா/ நெல்லியடி மத்திய கல்லூரி

3ம் இடம்
கற்றதன் வழி உயர்வு காண்போம்
ந.பவித்திரா
மூங்கிலாறு வடக்கு, உடையார்கட்டு

### கட்டுரை

1ம் இடம்
தொழில்நுட்பத்தால் ஏற்பட்ட கலாச்சார சீர்கேடு
செ.லகூஷிக்கா
வ/பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம்

2ம் இடம்
புகைத்தல், போதைப்பொருட்களில் இருந்து விடுபட்டு
நாட்டை முன்னேற்றுவோம்
நி.விஞ்சிதா
வ/பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம்

3ம் இடம்
இயற்கை அனர்த்தம்
த.ரெபேக்கா
வ/பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம்

பரிசில்களின் விபரம், பரிசளிப்பு நிகழ்வு பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.



# கிளிநொச்சியின் மணற்கொள்ளை
# மண் ரேகையழிக்கும் கொலைகாரர்கள்

கருணாகரன்

அதிகாலை நான்கு மணி. கிளிநொச்சி மேற்கில் முறிப்புக் குளத்துக்குக்கிட்டவாக உள்ள காடு. அதற்குக் கிழக்குப் பக்கமாக, பொன்னகர், கிருஸ்ணபுரம், மலையாளபுரம், செல்வாநகர் விளிம்புகளில், காட்டோரமாகப் படையினர் சுற்றிவளைத்து நிற்கின்றனர்.

இந்தப் பகுதிகளுக்கு முதலில் சில மோட்டார் சைக்கிள்கள் வருகின்றன. அவற்றைப் படையினர் தடுத்து நிறுத்துகிறார்கள். காட்டுப்பகுதிக்கு அந்த நேரத்தில் எதற்காக மோட்டார் சைக்கிள்கள் வரவேணும்? மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்களிடம் படையினர் விசாரணையைத் தொடங்குகிறார்கள்.

"எதுக்கு இங்க வந்தது? எங்க போறது"

"மாட்டைக் காணவில்லை. அதுதான் தேடிப்பாக்கிறம்"

"ஏய், நீ பொய் சொல்லிறது. இங்க மாடு எப்பிடி வரும்? நீ பிரச்சினை பண்ற ஆள்தானே?"

"இல்லை. நான் சொல்றது உண்மை. ரண்டு நாளா தேடித்திரியிறம்"

"அடேய்.. நமக்கு பொய் வேணாம். நீ நம்மள ஏமாத்திறதுதானே! இந்தா, இது நமக்குப் புடிக்காது.. தெரியுமா? "கொஞ்சம் மிரட்டலாக படையினரில் ஒருவர் சொல்கிறார். மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சற்று அமைதியடைந்து மௌனமாகின்றனர். அடையாள அட்டைகளை வாங்கிப் பார்க்கிறார்கள், படையினர்.

இதொன்றும் யுத்தகால நிலவரம் அல்ல. இப்பொழுது, 2016 யுலையில்தான். ஆமாம், இதோ இந்த மாதத்தில், இந்தக் கிழமையில்





நடந்த, நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சி.

அப்படியென்றால் என்ன, மீண்டும் புலிவேட்டையா? என்று நீங்கள் கேட்கக்கூடும்.

அதுதான் இல்லை.

இல்லையென்றால், மான் வேட்டையா நடக்கிறது? என்று அடுத்த கேள்வியை நீங்கள் கேட்கலாம்.

இது மான் வேட்டை அல்ல, மண் வேட்டை, மரவேட்டை. கிளிநொச்சி மேற்குப் பகுதிக் காட்டில் மண், மணல் வேட்டை, மரவேட்டை, கிறவல் வேட்டை எல்லாம் அமோகமாக நடக்கிறது.

அங்கிருக்கும் காட்டாறுகளில் சட்ட விரோதமாக மண்ணை அகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் ட்ரக்ரர்காரர். இவர்கள் மண்ணையும் மணலையும் கிறவலையும் எடுத்து டிப்பர்காரர்களுக்குக் கொடுக்கிறார்கள்.

டிப்பர்காரர்கள் அதை வெளியே கொண்டு போகிறார்கள். இதை விட உள்ளூரிலும் விற்கிறார்கள் ட்ரக்ரர்காரர். இதில் தென்னிலங்கைச் சக்திகளும் உண்டு.

உள்ளூர் சக்திகளும் உண்டு. லாபம் என்று வரும்போது தமிழ் சிங்களம் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. அவரவருக்கு ஏற்றமாதிரிப் பங்கைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

காட்டிலுள்ள ஆறுகளில் மண்ணை அகழும் ட்ரக்ரர்களை பொலிஸோ, கனியவளப்பிரிவினரோ பிடித்து விடக் கூடாது என்பதைக் கண்காணிப்பதற்காகவே இந்த மோட்டார் சைக்கிள்கார்கள் காட்டோரமாகத் திரிகிறார்கள். இவர்கள் பொலிஸைக் கண்டால் கைத்தொலை பேசியில் ரகசியமாக காட்டில் நிற்கும் ட்ரர்களுக்குதகவல் சொல்லிவிடுகிறார்கள். இதை விட காட்டுப்பாதைகளில் அங்கங்கே கண்காணிப்பதற்கு என்று ஆட்கள் வேறு உண்டு.இதையெல்லாம் அறிந்து, இதைத் தடுப்பதற்கே இப்பொழுது இவர்களை வழிமறித்துச்சோதனையிடுகின்றனர் படையினர். இதில் மண்ணெடுப்போரும் சிக்குகின்றனர். மரம் வெட்டுவோரும் சிக்குகின்றனர்.

பெரிய மண் கொள்ளையும் மரக்கொள்ளையும் நடக்கிறது. அது கிளிநொச்சியில் மட்டுமில்லை, வன்னிக் காடெங்கும். மண் வியாபாரிகள் காடுகளில் மண்களஞ்சியங்களை (மண் ஜாட்களை) உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இதற்கு நூற்றுக்கணக்கான ட்ரக்ரர்கள் இரவு பகலாக இயங்குகின்றன. ஆறுகளிலிருந்து இந்த ட்ரக்ரர்கள்தான் மண்ணை எடுத்து வந்து களஞ்சியங்களில் நிரப்புகின்றன. ஆறுகள் காடுகளில் இருப்பதால், அங்கே வெளியே யாருக்கும் தெரியாமல் ரகசியமாக எல்லாம் நடக்கிறது. இந்த ரகசியம் சட்டவிரோதமானது. களவாக சட்ட விரோதமாக மண் எடுப்பதால், அவரவர் தமக்கு வாய்ப்பான, வசதியான இடங்களில் அகழ்கிறார்கள். வழிப்படுத்துனர்கள் கிடையாது. கேள்வி கேட்பவர்கள் கிடையாது.

சட்டரீதியாக மண் எடுத்தால் அதற்குரிய அனுமதியை கனிய வளப்பாதுகாப்புப் பிரிவு வழங்கும். அது ஒரு இடத்தில் அல்லது ஒரு ஆற்றில் எந்தெந்த இடங்களில் மண்ணை அகழ முடியும் என்று சொல்லும். அதற்குரிய அறிவு கொண்ட உத்தியோகத்தர்கள் அதை ஆராய்ந்து அடையாளப்படுத்துவார்கள். மட்டுமல்ல, அந்த இடங்களில் எவ்வளவு "கீப்" மண்ணை அகழ முடியும் என்பதையும் சொல்வார்கள்.

அதற்கு ஏற்றமாதிரித்தான் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்படும். இதையெல்லாம் கவனிப்பதற்கு ஆள் வேறு இருப்பார்கள். ஆகவே அனுமதி வழங்கப்பட்ட அந்த இடங்களில்தான் மண்ணை அகழ முடியும். இப்படிச் செய்தால், முறைப்படி மண்ணும் கிடைக்கும். ஆறுகளும் பராமரிக்கப்படும். சூழலும் கெடாது. ஆனால், நடந்து கொண்டிருப்பதோ வேறு.இங்கே நானே ராஜா, நானே மந்திரி என்ற விளையாட்டுத்தான்.

கனிய வளப்பிரிவுக்கு "மண்ணோடிகள்" தண்ணி காட்டி விடுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் ரகசியக் கையுட்டுகளையும் வழங்கி விடுகிறார்கள். எனக்குப் பாதி உனக்குப்பாதி என்ற மாதிரி. கள்வனும் காவலாளியும் இணைந்தால்ஞ்.? நாடும் காலி வீடும் காலி.

இதனால் ஆறுகள் சிதைகின்றன. ஆறுகள் சிதைந்தால்ஞ் காடு அழிந்து விடும். காடும் ஆறுகளும் அழிந்தால், ஊர் சிதைந்து விடும். வயலும் குளங்களும்கூட சிதைந்தே போகும். எல்லாம் சிதைந்தால்..???

ஆறுகள் உயிருக்கு நிகரானவை. உங்கள் கைகளில் உள்ள ரேகைகள் உங்கள் வாழ்க்கையையும் தலைவிதியையும் எப்படித் தீர்மானிக்கின்றனவோ, அப்படித்தான் ஆறுகளும். நிலத்தின் ரேகைகள் அவை. நீர் ரேகைகள். நீர் என்பது உயிர். அதனால்தான் "நீரின்றி அமையாது உலகு" என்கிறார்கள். நீர் இருப்பதால்தான் பூமிக்கு மதிப்பு. பிரபஞ்சத்தில் எத்தனையோ பென்னாம் பெரிய கோள்கள் எல்லாம் இருக்கின்றன. புமியை விடப் பல மடங்கில் எவ்வளவுதான் பெரிய கோள்களாக இருந்தாலும் அவற்றுக்கு மதிப்பில்லை. நீரில்லா விட்டால் மதிப்பும் இல்லை. பெறுமதியுமில்லை.

ஆகவே, நீரோடும் ஆறுகளை நாங்கள் பாதுகாப்பது அவசியம். அது வேறொன்றுமில்லை, நம்மை நாமே பாதுகாப்பதாகும். இதற்கு வழி சட்டவிரோத மண் அகழ்வைக் கட்டுப்படுத்துவதுதான். இதைச் செய்ய வேண்டியது கனிய வளப்பிரிவு. அது கண்ணை மூடிக்கொண்டிருக்க முடியாது. அப்படிக் கண்ணை மூடிக் கொண்டிருந்தால், அது கையுட்டுப்பெற்றுக் கொண்டிருப்பதாகவே உறுதிப்படுத்தப்படும். கையை நீட்டுகிறதோ இல்லையோ, அப்படித்தான் கருதப்படும்.கனய வளப் பிரிவை இயங்க வைக்கும் பொறுப்பு மாவட்டச் செயலகங்களுக்குண்டு.மணலுக்கான அதிகாரம் ஒவ்வொரு மாவட்டங்களிலுமுள்ள அரசாங்க அதிபர்களுக்கே இருக்கிறது. அவர்கள்தான் கனிய வளப் பிரிவுக்கு அதிகார ரீதியாக வழிகாட்டுகின்றவர்களும் அனுமதியை அளிப்பவர்களும். ஆகவே இந்த விடயத்தில் அவர்கள்தான் தங்கள் மாவட்ட எல்லைக்குள் எல்லாவற்றையும் தீர்மானிப்பவர்கள்.

மணல் அகழ்வில் இன்னொரு முக்கியமான விசயமும் உண்டு. அது அரசியல். இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலும் மண்ணில் அரசியல் தாராளமாக விளையாடுகிறது. பெரும்பாலான அரசியற் புள்ளிகள் மணலோடு விளையாடுகிறார்கள். பெரிய பெரிய மணல் களஞ்சியங்கள் இந்த முதலைகளுக்குண்டு. இவை மணலில் விளையாடும் முதலைகள். மணலில் மட்டுமல்ல, இயற்கை வளங்கள் அத்தனையிலும் விளையாடுகின்றன.

இங்கே நமது சூழலில் மண் அகழ்வில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் விளையாடினார்கள். போருக்குப் பிந்திய வன்னியில், மண்ணையும் மரங்களையும் தென்னிலங்கை அரசியற் செல்வாக்கில் பெரிய பெரிய முதலாளிகள் தாராளமாக அள்ளி அனுபவித்தார்கள். நெடுங்கேணி, முத்தையன்கட்டுப் போன்ற சில இடங்களில் கற்களும் இப்படி அகழப்பட்டதுண்டு. வடக்கிலும் பலகைகள் மண்ணில் விளையாடின. இப்பொழுதும் அப்படி விளையாடிக் கொண்டிருக்கின்றன. கேட்பதற்கு யார் இருக்கிறார்கள்? என்ற நெஞ்சுத்திமிர்தான். அரசியல் அதிகாரத்தை எதற்கெல்லாம்

பயன்படுத்துவது என்று இவர்களுக்கு சரியாகத்தான் தெரிந்திருக்கிறது. மக்கள் நலனுக்காகவா தங்கள் நலனுக்காகவா என்று.

ஆனால், இந்த இடங்களில் எல்லாம் (காடுகளிலும் ஆறுகளிலும் கற்பீடங்களிலும் குளங்களிலும்) ஒரு காலம் எங்கள் புதல்வர்களும் புதல்விகளும் இரத்தம் சிந்தினார்கள். இதையெல்லாம் பாதுகாக்க வேணும். இவையெல்லாம் நம் கண்கள் என்ற உணர்வோடு, இவற்றுக்காக அவர்கள் தங்கள் உயிர்களை ஈந்தனர். தாய் மண்ணின் மீதான பிடிப்பு அது. இது எப்பவோ பல யுகங்களுக்கு முன் நடந்த விசயங்களோ கற்பனைக் கதைகளோ அல்ல. நம் கண்ணுக்கு முன்னே, நாம் சாட்சியாக இருக்கும்போதே, நாங்கள் பெற்ற பிள்ளைகளும் நம்முடைய சகோதர சகோதரிகளும் செய்த செயல்.

ஆனால், இன்று?

கண்போலக் காத்து வளர்த்த பயிரைக் காட்டெருமை அழித்ததைப்போலஞ் நம் கண்முன்னே, நம் காலத்திலேயே இப்படி மாறியிருக்கும் நிலைமை..!? கொடுமைதான்.

மண்ணை சட்டவிரோதமாக எடுப்பதைப் போலத்தான் மரத்தையும் வெட்டுகிறார்கள். சட்டவிரோத மரம் வெட்டுதல். சந்தனக் கடத்தல் வீரப்பன் இங்குமா? என்று நீங்கள் கேட்கலாம்.

இரும்பன் பாலசிங்கம், 55 பொன்னம்பலம், முறிகண்டித் துரைச்சாமி, மாட்டுச் சந்திரன், மீசை ரத்தினம், ஆறடிப் பவுண், அலம்பில் ரத்தினம் என்று அங்கங்கே புகழ்பெற்ற மரப்புலிகளும் சிங்கங்களும் இருக்கிறார்கள். பழமிருக்கச் சுழை பிடுங்கும் ஆசாமிகள். என்னதான் கட்டுப்பாடுகள், காவல்கள் என்றாலும் அதுக்கெல்லாம் தண்ணி



காட்டுவதில் வல்லவர்கள்.

இவர்கள் மரங்களைக் கீரை பிடுங்கு வதைப்போல, சத்தம் சந்தடியில்லாமல் காட்டில் வெட்டி, கடத்திவிடுவார்கள். முதிரை, பாலை, தேக்கு, சமண்டலை, கருங்காலி, யாவறணை என்று விதம் விதமாகப் பதம் பதமாக காலைகளுக்கு மரத்தை அனுப்பி வைப்பதில் பெரிய கில்லாடிகள்.

இவர்களைக் கட்டுப்படுத்தி, சட்டவிரோத (கள்ள) மரம் வெட்டுதலை தடுத்து நிறுத்திக் காட்டைப் பராமரிக்க வேண்டியது வனவளப்பாதுகாப்புப் பிரிவு.

ஆனால்?

வனவளப்பாதுகாப்புப் பிரிவுடன் வனஜீவ ராசிகள் பாதுகாப்புப் பிரிவுக்கும் பொறுப்புண்டு. காடிருந்தால்தானே வனவாழ் உயிர்களான மிருகங்களும் பாதுகாப்பாக இருக்க முடியும்! ஆனால்? கனியவளப் பாதுகாப்புப் பிரிவு, வளவளப்பாதுகாப்புப் பிரிவு, வனஜீவராசிகள்

பாதுகாப்புப் பிரிவு என ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அலுவலகங்களும் உத்தியோகத்தர்களும் அதிகாரங்களும் வண்டி, வாகன வசதிகளும் இருக்கின்றன.

ஆனால்?

இவையெல்லாவற்றுக்கும் சட்டரீதியான அனுசரணையையும் உதவியையும் நடவடிக்கையையும் எடுப்பதற்குப் பொலிஸ் உண்டு. ஆனால்?

இதையெல்லாம் அவதானித்து உரிய முறையில் செயற்படுத்தி காட்டையும் ஆற்றையும் பாதுகாத்து, ஊர்களையும் சனங்களுயும் வாழ வைக்கும் பொறுப்பு அரசியற் தலைமைகளுக்குண்டு. ஆனால்?

இந்தப் பிரிவுகளுக்குத் தண்ணி காட்டி விட்டு காட்டிலும் ஆற்றிலும் விளையாடும் கைகளைக் கட்டுப்படுத்தவே, இப்பொழுது இவர்களையெல்லாம் மடக்கிப்பிடிப்பதற்கே இந்தப்படை நடவடிக்கை என்று கருதப் படுகிறது?

பொலிஸில் நம்பிக்கையில்லை என்றா இது? பொலிஸினால் கட்டுப்படுத்த முடியாது என்றா இது? அல்லது, வனவளப்பாதுகாப்புப் பிரிவுடன் வனஜீவராசிகள் பாதுகாப்புப் பிரிவு போன்வற்றினால் முடியாதென்றா படையினர் களத்தில் இறங்கியிருப்பது?

அப்படிப் படையினர் இதைத் தடுப்பதற்காக இறங்கினால், அவர்களோடு வனவளப்பாதுகாப்புப் பிரிவுடன் வனஜீவ ராசிகள் பாதுகாப்புப் பிரிவு போன்றவையும் பொலிசாரும் கூட்டாக இணைந்து இறங்கியிருப்பரே... என்னமோ நடக்குது... ஒண்ணுமே புரியல்லே...

இந்த நிலைமையில்தான் வடக்கு மாகாணசபையில் கொதிப்பும் கொந்தளிப்புமாக நம் தலைவர்களும் பிரதிநிதிகளும் தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். கொழும்புக்கும் வடக்குக் கிழக்குத்தமிழர் தாயகத்துக்கும் ஜெனிவாவுக்கும் உலகின் பல நாடுகளுக்கும் என்று பறந்தோடித்திரிகிறார்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள். நாடும் நாமும் உருப்பட்ட மாதிரித்தான். ●





# ஊடக சுதந்திரத்திற்கான பயணம் இவ்வளவு தானா?

சியா

வடக்குஊடகவியலாளர்கள் அண்மையில் தெற்கிற்கு ஊடக சுதந்திரத்திற்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இதற்கு முன்னர் தெற்கு ஊடகவியலாளர்கள் வடக்கு நோக்கி இப்படியொரு பயணத்தை செய்திருந்தனர். அதன் தொடர்ச்சியாக வடக்கு ஊடகவியலாளர்களின் பயணம் அமைந்தது. ஊடக அமைச்சுத்தான் இந்த பயணங்களை ஏற்பாடு செய்திருந்தது.

மொத்தம் 55 ஊடகவியலாளர்கள். யாழ் ஊடக மையம் பயண ஒழுங்குகளை செய்திருந்தது.

ஊடக சுதந்திரத்திற்கான பயணம் என்பது வெறுமனே பஸ்ஸிற்கு முன்னால் பனர் கட்டி கொண்டு சென்று வந்ததோடு முடிந்துவிட்டதா என்ற சந்தேகத்தை இந்த பயணம் எழுப்பியது. குறூப் படங்கள், செல்பி எடுப்பதும், ஜனாதிபதி மாளிகையை சுற்றிப்பார்ப்பதும்தானா ஊடகவியலாளர்களின் தலையாய பிரச்சனை? கதைக்க வேண்டிய, தீர்வு காண வேண்டிய எத்தனை பிரச்சனைகள் உள்ளன? வந்தவர்கள் எங்களை காணாமல் போய் விட்டார்கள் என்ற அமைச்சர்களின் குறை வேறு.

தெற்கிற்குசென்ற அன்று ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் ஊடகவியலாளர்களை சந்தித்தனர். இருவரும் சரளமாக பேசினார்கள். வடக்கு தெற்கு ஊடகவியலாளர்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படுத்த வேண்டுமென்பதே அவர்களின் நோக்கம். அதன்படி, தெற்கு ஊடக நிறுவனங்களிற்கு ஊடகவயலாளர்கள் கிரமமாக அழைத்து செல்லப்பட்டனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து நிறைய விடயங்களை கதைக்க வேண்டும். ஒவ்வொரு ஊடகவியலாளரும் சில வார்த்தைகளாவது பேச வேண்டும். அல்லது அனைவரும் சேர்ந்து 30 நிமிடங்களாவது பேச வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக இருந்தது. இதற்கு குறைந்த நேரத்தில் எதை நம்மால் புரிய வைக்க முடியும்? அவர்களாலும் எதை புரிய முடியும்?

ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்திக்கலாம், உங்கள் பிரச்சனைகளை பேசலாம் என்றுதான் ஊடகவியலாளர்களிற்கு சொல்லப்பட்டிருந்தது. பலரும் நிறைய பேச வேண்டுமென்று தான் சென்றார்கள். ஆனால் நடந்தது வேறு.

பாராளுமன்றத்திற்கு ஊடகவியலாளர்கள் அழைத்து செல்லப்பட்ட பின்னர்தான் ஜனாதிபதி சந்திக்கவிருக்கும் விடயம் அறிவிக்கப்பட்டது. ஊடகவியலாளர்கள் உட்கார வைக்கப்பட்ட இடத்திற்கு ஜனாதிபதி, பிரதமர் வந்து செலவிட்டது வெறும் பதினைந்து நிமிடங்கள்தான். ஊடகவியலாளர்கள் மத்தியில் இருவரும் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. ஒரேயொரு சிரிப்புத்தான் வெளியிட்டார்கள்.

இந்த பதினைந்து நிமிடத்தில் அதிக நேரம் குறூப் படம் எடுக்கத்தான் செலவானது. ஒரு வார்த்தை பேசாத தலைவர்கள் வடக்கு ஊடகவியலாளர்களின் பிரச்சனையை புரிந்து கொண்டிருப்பார்கள் என எப்படி நம்புவது?

பாராளுமன்றத்தை விட்டு வெளியே வந்ததும் மூத்த ஊடகவியலாளர்கள் குழு கூடி நின்று கொந்தளித்து கொண்டு நின்றார்கள். வடக்கு ஊடகவியலாளர்களிற்கு உரிய மரியாதை கொடுக்கப்படவில்லையென்பதே அவர்களின் குமுறல். தெற்கு ஊடகவியலாளர்கள் வடக்கிற்கு வந்தால், வடக்கிலுள்ள அரசியல் பிரமுகர்கள் கொடுக்கும் மரியாதை உயரியதாக இருக்கும். ஆனால் தெற்கு சென்றவர்களிற்கு உரிய மரியாதை கிடைத்ததா என்பது கேள்விக்குறியே.

பாராளுமன்றில் ஊடகவியலாளர்களுடன் பேச ஜனாதிபதிக்கு நேரம் இல்லாவிட்டால் மறுநாள் ஜனாதிபதி மாளிகையிலாவது பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கலாம். எதுவும் நடக்கவில்லை.

பாராளுமன்றத்தை சுற்றி பார்க்கவோ, ஜனாதிபதி மாளிகையை பார்க்கவோ, கதிர்காமம் செல்லவோ ஒருவர் ஊடகவியலாளராக இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. வடக்கு ஊடகவியலாளர்களின் பயணத்தில் இவைகளைத்தான் ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டிருந்தார்கள் எனில், வடக்கு ஊடகவியலாளர்களை பற்றிய ஏற்பாட்டாளர்களின் கணிப்புத்தான் என்ன? ●



# வவுனியாவில் பேய்கள் உலாவும் ஐந்து வீதிகள்

வன்னிமது

இப்படியொரு தலைப்பை பார்த்ததும், 'இந்தக்காலத்திலும்பேய் அது.இது என்று கிட்டு. சந்திரமுகி படத்தை விட்டு வெளியில வாங்க பாஸ்' என சிலர் சொல்லக்கூடும். அவசரப்படாதீர்கள் பாஸ். சுற்று பொறுமையாக படியுங்கள்.

பேயோட்டிய சாமியார்... பேய் பிடித்தால் பரிகாரம்... கமராவில் சிக்கிய பேய் என வெளியாகும் டுபாக்கூர் செய்திகளையெல்லாம் நம்புபவர்கள்தான் பெரும்பாலானவர்கள். நீங்களே மனச்சாட்சியை தொட்டு சொல்லுங்கள்... 'சிசிரிவி கமராவில் சிக்கிய பேய்: இதயம் பலவீனமானவர்கள் பார்க்காதீர்கள்' என பேஸ்புக்கில் வரும் லிங்கை கிளிக் செய்தவர்தானே நீங்கள். ஆகவே, தொடர்ந்து படியுங்கள்.

பேய் இருக்கிறதா இல்லையா என்ற விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சிக்கெல்லாம் நாம் செல்லவில்லை. ஆனால் இரவில் தனியாக செல்லும்போது... ஆளற்ற இடத்தில் இருக்கும்போது... சுடுகாட்டை கடந்து செல்லும் போது நம்மில் பலருக்கு வயிற்றுக்கும் தொண்டைக்குமிடையில் ஏதோ உருளுமே... அதுதான் விடயம்.

சைக்கிள் கரியரில் பேய் இருந்தது, பின்னால் நடந்து வந்தது என மூத்தவர்கள் சொல்லி வளர்த்த பரம்பரைக்கும் பேய் பயம் இன்றும் இருக்கிறது. அதனால்த்தான் தமிழ் சினிமாவில் பேய் ரென்டிங் இன்றுமிருக்கிறது.

ஒவ்வொரு ஊரிலும் பேய் நடமாடும் இடங்கள் என சில இடங்கள் இருக்கும்..அதற்கு பின்னால் சில காரணங்களும் இருக்கும். ஏதாவது மரணங்கள்... அசம்பாவிதங்கள் இருக்கும். காத்து கறுப்பு அடித்தோ, திடுதிப் சம்பவங்கள் நடந்தோ ஒவ்வொரு இடங்களிலும் நம்மவர்களிற்கு பேய் பயம் ஏற்பட்டிருக்கும். குறிப்பிட்ட வீதிகள், இடங்களில் முன்னர் நடந்த சம்பவம் ஒன்றை வைத்து இன்றுவரை வயிற்றை கலக்கும் கதைகள் இருந்து கொண்டிருக்கும். அப்படியான கதைகளுடன், கதிகலங்க வைக்கும் வவுனியா பிரதேச வீதிகள் பற்றிய விபரம் இது...

## குறிசுட்டகுளம் வீதி

ஏ9 வீதியால் செல்லும்போது வவுனியா கடந்து புளியங்குளத்திலிருந்து நெடுங்கேணி செல்லும் வீதியில் அமைந்துள்ளது குறிசுட்டகுளம் பகுதி. இந்த வீதியால் முல்லைத்தீவு நகரிற்கும் செல்ல முடியும். நீளமான இந்த வீதி பல சிறிய கிராமங்களை ஊடறுத்து சென்றாலும், பெரும்பாலும் காட்டுபகுதியின் ஊடாகவே செல்கிறது. பெரும்பாலும் சனநடமாட்டமில்லாத பகுதிகளை சந்திக்க வேண்டும்.

இந்த வீதியின் பிரதான விளைவு அபாயகரமானதாக உள்ளது. காட்டு விலங்குகள் இந்த பகுதியால் கடந்து செல்வதாலும் விபத்துக்கள் ஏற்படுவதாக கூறப்பட்டாலும், விபத்தில் சிக்கியவர்கள் சொல்லும் கதைகள் திகில் கதைகள்தான்.

'காத்து கறுப்பு வந்து அடித்தது' என்ற பாணி கதைகளைதான் பெரும்பாலானவர்கள் சொல்கிறார்கள். என்ன நடந்தது, ஏது நடந்ததென தெரியாமல் விழிப்பவர்கள் பலர். மிருகத்தை போல வந்து ஒன்று மோதிவிட்டு, காட்டுக்குள் பாய்ந்துவிட்டதென கூறி திகிலை கிளப்புபவர்களும் உள்ளனர்.

அந்தபகுதிக்கு அண்மையாக உள்ளவர்களுடன் பேசியபோது அவர்கள் சொன்னது வேறு 'பேய்க்கதை'.

1987ம் ஆண்டு விடுதலைப்புலிகள் அங்கு ஒரு தாக்குதலை செய்திருக்கிறார்கள். உழவு இயந்திரத்தில் சென்ற இந்திய இராணுவத்தின் மீது சந்திரன் என்பவர் தலைமையில் நடந்த தாக்குதலில் 12 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதன் பின்னரே இந்த பகுதியில் காத்து கறுப்பு அடிக்கத் தொடங்கியதென்பது அவர்களின் கருத்து.

## தாண்டிக்குளம் ஏ9 வீதி (சந்தி)

வவுனியாவின் மத்தியில் அமைந்துள்ள இச்சந்தியிலும் அதிக விபத்துக்கள் அடிக்கடி நிகழ்வது வழமையாக உள்ளது. 2000ம் ஆண்டளவில் இந்த பகுதியில் ஒரு சம்பவம் நடந்ததாக கூறுகிறார்கள். சந்திக்கு அருகில் அமைந்துள்ள கடைத்தொகுதியில் உள்ள இரண்டு கடைகளில் கசிப்பு காய்ச்சல் கொடிகட்டி பறந்துள்ளது.

ஒருநாள் கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்த போது திடிரென ஏற்பட்ட தீவிபத்தில் அந்த பெண்மணி மரணமாகியுள்ளார். அதற்கு சிறிதுகாலம் கழித்து, அந்தகடையின் பக்கமாக வீதியோர அன்னாசிப்பழ வியாபாரியொருவர் மரணமாகியுள்ளார். இரவுநேரம், எஞ்சிய பழங்களை வீதியோரமாக அடுக்கி வைத்துவிட்டு அருகில் படுத்துறங்கியுள்ளார். வாகனமொன்று வழிதடுமாறி அவரின் மேல் ஏறி கொன்றுவிட்டது.

இரண்டு அகோர இறப்புக்களின் பின்னர் அந்தபகுதியில் இரவுவேளையில் நடமாடுபவர்கள் அச்சப்படுகிறார்கள்.

## தாண்டிக்குளம் குளக்கட்டு வீதி எல்லை

இதுவும் தாண்டிக்குளத்தில்தான் உள்ளது. தாண்டிக்குளம் குளக்கட்டால் செல்லும் இந்த வீதியின் ஒருபுறம் குளம். மறுபுறம் பற்றைகள். இரவுவேளைகளில் இந்தவீதியை பெரும்பாலும் இரவில் யாரும் பயன்படுத்துவதில்லை. மீறி செல்பவர்கள், விபி எகிறாமல் பயணத்தை முடித்தது கிடையாது என்கிறார்கள். இந்தவீதியும், பெரியார் குளம் மற்றும் சாந்தசோலைவீதிகளும் இணையும் முச்சந்தியில் இறந்தவர்களின் எட்டுச்செலவு, கழிப்புக்கள் செய்யப்படுவதால், அந்த வீதியில் 'சம்திங்' இருப்பதாக ஊரில் நம்பிக்கை உள்ளது.

## தச்சனமருதங்குளம் வீதி

இந்த வீதியும் மக்களை 'பேய்'க்காட்டும் வீதிதான். இந்த வீதியிலுள்ள மயானம்தான் எல்லோரது அடிவயிற்றையும் பிசைய வைக்கிறது. மன்னார் வீதியிலிருந்து இந்த வீதிக்கு நுழைந்த சிறிது தூரத்தில் வரும் வளைவும், மயான வாசலும் பயணிகளை குழப்பத்தில் ஆழ்த்திவிடும் சந்தர்ப்பமும் உள்ளது. பாதையென நினைத்து மயானத்திற்குள் நுழைந்து வெலவெலெத்து கதிகலங்கியவர்களை அடிக்கடி காண முடியும்.


## நெளுக்குளம் கூமாங்குளம் வீதி

நெளுக்குளத்தையும் கூமாங்குளத்தையும் இணைக்கும் பிரதான வீதி. இந்தவீதியில் இரவுவேளையில் பயணம் செய்ய பெண்கள், சிறுவர்கள் தயங்குகிறார்கள். காரணம், இந்த வீதி மயானங்கள் நிறைந்து காணப்படுகிறது.

இந்துக்களின் மயானங்கள், கிறிஸ்தவர்களின் மயானங்கள் அருகருகாக காணப்படுகின்றன. இந்த வீதியால் சென்றவர்கள் பலர் பீதியூட்டும் கதைகள் சொல்கிறார்கள். அண்மையில்ஒருவர் சொன்னதிகில்கதையிது. 'எனது மோட்டார்சைக்கிள் பழுதாகி உருட்டிக் கொண்டு வந்தேன். இரவு 12 மணி கடந்திருக்கும். மயானத்தை கடக்கும்போது ஒரு பனையளவு உயரத்தில் உருவமொன்று மரங்களை முறித்துக் கொண்டு வந்தது. நான் வாகனத்துடன் தப்பியோடி வந்துவிட்டேன். கல் பிள்ளையாருக்கு கிட்டவாக வரும்போது பெருமரம் விழுவதுபோல சத்தம் கேட்டது. இப்பொழுது இரவானால் அந்தப்பக்கம் தலைவைத்தும் படுப்பதில்லை' என்றார்.


வவுனியாவில் வயிற்றைக்கலங்க வைக்கும் முக்கிய வீதிகள் இவைகள்தான். இந்த வீதிகளில் பலவற்றில் மக்கள் செல்ல பயப்படும் முக்கிய காரணம், பேய். நன்றாக பார்த்தால் பேய் பயமென்பது சும்மா பயமல்ல. ஒருவித முன்னெச்சரிக்கையாகவும் எடுக்கலாம். ஒரு ஆபத்து நடந்த இடத்தில் எச்சரிக்கையாக இருக்கும் தயார்படுத்தல். வளைவான வீதியில், விபத்துக்கள் நடக்கும் இடங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்ற முன்னெச்சரிக்கை.

அது சரி.. இந்தக்காலத்திலும் பேய்க்கதையா? இதற்கெல்லாம் விஞ்ஞானபூர்வ ஆதாரமுள்ளதா என்பவர்களிற்கு 'சிலவற்றை ஆராயக்கூடாது. அனுபவிக்கனும்' என கமல் பாணியில் சொல்லிவிட்டு எஸ்கேப் ஆகிறோம்!










# தேசிய மட்டத்தில் வவுனியா நகர பாடசாலை மாணவிகள் சாதனை

வன்னிமது

வவுனியா மாணவர்களால் கடந்த காலங்களில் தமிழ் தின போட்டிகளில் தேசிய அளவில் பெரியளவில் சாதிக்க முடியாமல் இருந்த நிலை மாறி தற்போது கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ்த் தினப்போட்டியில், பிரிவு ஒன்றுக்கான இசையும் அசைவும் போட்டி நிகழ்வில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்தில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் செல்வி. கவிநயா அரவிந்தன் முதலிடம் பெற்றுள்ளதோடு கட்டுரைப்போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளீர் கல்லூரியில் தரம் 11ல் கல்விகற்கும் செல்வி சங்கவி கனகரட்ணம் முதல் இடத்தையும் கைப்பற்றி வவுனியா மண்ணிற்கு பெருமையை சேர்த்துள்ளனர்.

இவ் மண்ணின் மைந்தர்களை தேடி அவர்களின் பாடசாலைக்கு சென்ற எமது தீபம் செய்திக்குழு அவர்களிடம் மேற்கொன்ட சிறு நேர்காணல்.

**கேள்வி: இப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதல் இடத்தை பெறுவீர்கள் என்று நினைத்தீர்களா.**

***அ.கவிநயா:*** வெற்றி பெறுவேன் என்று நம்பினேன்.

***க.சங்கவி:*** மாவட்ட மட்டத்தில் தயார்படுத்தி சென்ற கட்டுரை தான் வந்ததால் இலகுவாக வெற்றி பெற்றேன். ஆனால் தேசிய மட்டபோட்டியில் நான் தயார்படுத்தி சென்ற கட்டுரை வரவில்லை, அதனால் நம்பிக்கை இல்லாமல் இருந்தேன்.

**கேள்வி: இப்பிரிவனை தாங்கள் தெரிவு செய்ததன் நோக்கம்**

***அ.கவிநயா:*** இசையில் எனக்கு அதிக நாட்டம் இருந்தமையால்

***க.சங்கவி:*** எனது அம்மா எனக்கு சிறு வயது முதல் கட்டுரை புத்தகங்கள் வாங்கி தந்து என்னை படிக்க ஊக்கப்படுத்துவார், அதனால் எனக்கு இது மிகவும் பிடித்தவிடயமாக மாறிவிட்டது.

**கேள்வி: இதில் உங்களுக்கு ஏதும் தடைகள் இருக்கின்றதா.**

***அ.கவிநயா:*** எனக்கு எந்த தடங்களும் இல்லை

***க.சங்கவி:*** காபொத சாதாரண தரம் கற்று வருவதால் தடங்கலாக இருந்தாலும் எனக்கு பக்க பலமாக ஆசிரியர்கள் என் அம்மா மற்றும் முக்கியமாக எனது பாடசாலை அதிபர் ஆகியோர் பக்க பலமாக இருந்தமையால் தடைகள் பெரிதாக தெரிவில்லை.

**கேள்வி தங்களின் எதிர்கால இலட்சியம் என்ன**

***அ.கவிநயா:***

***க.சங்கவி:*** கட்டுரை சார்பான நூல்களை எழுதி வெளியிட ஆசை

**கேள்வி: இந்த வெற்றிக்கு யாருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றீர்கள்.**

***அ.கவிநயா:*** அம்மா, அப்பா, ஆசிரியர்கள், அதிபர்

***க.சங்கவி:*** என்னை வழிநடத்திய என் பெற்றோர், ஆசிரியர்கள் குறிப்பாக எமது பாடசாலை அதிபருக்கு நன்றி சொல்ல பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். ஏன் என்றால் அவர்களால் தான் நான் இந்த நிலையை எட்ட முடிந்தது. ●



## மக்கள் குரல்

நெடுங்கேணி ஒலுமடு கிராமசேவகர் பிரிவில் உள்ளூர் வீதிகள் அனைத்தும் பற்றை மூடிக் காணப்படுவதால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நெருக்கடியில் சிக்கியுள்ளனர்.

ஒலுமடு, வேலடி, முதிரம்பிட்டி, ஓடைவெளி, பாலமோட்டை, தீவுகாடு ஆகிய கிராமங்களிலுள்ள உள்ளூர் வீதிகள் அனைத்தும் இரண்டுபக்கங்களும் பற்றை மூடி வாகனப்போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளன. இந்தவீதிகளால் மக்கள் பயணிக்கவும் அச்சப்படும் நிலை உருவாகியுள்ளது.

அனைத்து வீதிகளும் நெடுங்கேணி பிரதேசசபைக்கு சொந்தமான போதிலும் இவ் வீதிகளை சுத்தப்படுத்துவதோ பராமரிப்பதோ இல்லை. இதனால் பாடசாலை மாணவர்களும் முதியோர்களும் அதிக விபத்துக்களை சந்திக்க நேரிடுகின்றது. அண்மையில் ஒலுமடு பாடசாலை மாணவன் விபத்தில் சிக்கி அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பிரதேசசபைகளில் அதிகவளங்களுடன் இயங்கும் நெடுங்கேணி பிரதேசசபை தமக்குச் சொந்தமான வீதிகள் பற்றைக்காடுகளாக உள்ளதை கண்டும் காணாமலும் உள்ளது. இப்பிரதேசசபையிடம் வீதிதுப்புரவு செய்வதற்கான இயந்திரங்களான ஜே.சி.பீ, உழவு இயந்திரங்கள், ஆளணிகள் இருந்தபோதிலும் வீதிகள் அனைத்தும் மக்கள் பாவனைக்கும் வாகனப் போக்குவரத்திற்கும் பொருத்தமின்றியே உள்ளன.


மக்களிற்கு சேவையாற்ற வேண்டிய அதிகாரிகள் திரும்பிப் பார்ப்பார்களா?

# மனித இனம் கடந்து வந்த வரலாறு

கே.என்.ராமசந்திரன்

தொலைத்தொடர்புச் சாதனங்கள், ஆகாய விமானங்கள், இன்டர்நெட், வீடு நிறைய மின்னணுக் கருவிகள் ஆகியவையெல்லாம் இன்றைய மக்களுக்கு மிகச் சாதாரணமாகிவிட்டன. யாரும் அவற்றைக் கண்டு வியப்படைவதில்லை. அலட்சியமாகக்கூடப் பார்ப்பது உண்டு. ஆனாலும், ஆழ்ந்து சிந்தித்தால் மனிதனின் சாதனைகள் உண்மையில் மகத்தானவை என்ற உண்மை புலப்படாமல் போகாது.

காடுகளிலும் குகைகளிலும் வசித்துவந்த மனித இனம், கடந்து வந்திருக்கிற பாதை மெய்யாகவே அற்புதமானது. உயிர் பிழைத்திருப்பதற்கான போராட்டம் என்ற கட்டத்தையெல்லாம் தாண்டி, உலகத்தை உயிர் வாழப் பாதுகாப்பான இடமாக மாற்றியிருக்கிறோம். 60 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாலில்லாக் குரங்கு இனத்திலிருந்து மனித இனம் 'ஹோமோ' என்ற சிற்றினமாகப் பிரிந்தது. 28 லட்சம் ஆண்டுகளுக்கு முன் அதிலிருந்து இன்றைய மனித இனம் பரிணமித்தது. அது வாலில்லாக் குரங்கினத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முன் 'ஹோமோ சேப்பியன்' என்ற மதிநிறை மனிதர்கள் உருவானார்கள். அந்தக் காலகட்டத்தில் பூமியில் ஆறு விதமான மனித இனங்கள் தோன்றின. அவை எல்லாமே இன்றைய மனிதர்களுடன் பல வகைகளில் ஒத்திருந்தன. ஆனாலும், அந்த இனங்களுக்குள் உருவத்திலும் மதிநுட்பத்திலும் வேறுபாடுகள் இருந்தன. அந்த இனங்களில் 'நிமிர்நிலை' மனித இனம் மட்டுமே இன்று வரை 20 லட்சம் ஆண்டுகளாகத் தப்பிப் பிழைத்திருக்கிறது. மற்ற மனித இனங்கள் யாவும் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் முற்றாயழிந்துவிட்டன. அவை அவ்வாறு அழிந்துபோனதற்கு என்ன காரணம் என்பதை இன்று வரை ஆய்வர்களால் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை.



## மனித இன வாழ்வியல்

ஒன்று, பூமியின் கால நிலையிலும் மேற்பரப்பிலும் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் சூழ்நிலைகளைத் தாக்குப்பிடிக்க முடியாமல், மனித இனங்கள் அழிந்திருக்கலாம். அல்லது வெவ்வேறு மனித இனங்கள் ஒன்றோடொன்று போரிட்டு அழிந்திருக்கலாம் என்று ஆய்வர்கள் ஊகிக்கிறார்கள். அக்காலத்தில் நடந்திருக்கக் கூடிய போர்கள், இன்றைய கோஷ்டிச் சண்டைகளின் அளவில் நூற்றுக் கணக்கான மனிதர்கள் மட்டுமே பங்கு கொண்டவையாக இருந்தன. ஆண், பெண், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி எல்லாரும் கோஷ்டிச் சண்டைகளில் பங்கேற்றனர். வெற்றிபெற்ற கோஷ்டி, தோற்ற கோஷ்டியிலிருந்த ஆண்கள் எல்லாரையும் கொன்றுவிட்டுப் பெண்களையும் குழந்தைகளையும் கவர்ந்து சென்றுவிடும். இதன் மூலம் இனக்கலப்பு பரவலாக ஏற்பட்டாலும் ஒவ்வொரு கோஷ்டியும் தனக்கென்று ஒரு நிலப் பரப்பை வைத்துக் கொண்டு, பிற கோஷ்டிகள் உள்ளே நுழையாமல் பார்த்துக்கொண்டது.

மூன்று லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனித சமூகங்கள் கூட்டங்களாக வாழ்ந்து வந்தன. ஒவ்வொரு கூட்டமும் தனக்கென்று ஒரு மொழியை உருவாக்கிக் கொண்டு பேசியது. சேர்ந்து வேட்டையாடுவது, கருவிகளை உருவாக்குவது, குழந்தைகளைப் பாதுகாப்புடன் வளர்ப்பது, குடிசைகள் அமைப்பது போன்ற பணிகளில் குழு உறுப்பினர்கள் எல்லோரும் பங்கேற்றனர். இறந்தவர்களைக் குழிதோண்டிப் புதைத்தனர்.

## அடுத்த தலைமுறைக்கு செய்தி

அடுத்த கட்டத்தில் எண்ணங்களை வாய் மூலமாக மட்டுமின்றி, கோட்டுப் படங்கள் மூலமாகப் பரிமாறிக்கொள்ளும் முறை உருவானது. குகைகளின் சுவர்களில் எழுதப்பட்ட படங்களும் குறிகளும் ஒருவருக்கொருவர் மட்டுமின்றி, அடுத்த தலைமுறையினருக்கும் செய்திகளைத் தெரிவிப்பனவாக அமைந்தன. இதுதான் விலங்குகளிடமிருந்து மனிதர்களை வேறுபடுத்திக் காட்டுகிற அம்சம். விலங்குகள் தமது குட்டிகளுக்கு இரை தேடவும், வேட்டையாடவும் கற்றுக் கொடுக்கின்றன. ஆனால், சித்திர வடிவில் அவற்றைக் கற்பிக்கும் முறையைக் கண்டுபிடித்தது மனிதன்தான். பல குகைகளில் 'மம்மத்' யானையைக் கொல்ல பல மனிதர்கள் கையாண்ட உத்திகள் படமாக வரையப்பட்டிருக்கின்றன.

வேட்டையாடுவதைப் பற்றி மட்டுமல்லாது, தரையில் குடிசைகள் அமைப்பதைப் பற்றியும் குகைச் சுவர்களிலும் பாறைகளிலும் விளக்கப் படங்கள் வரையப்பட்டன. நான்கு குச்சிகளை நட்டு, அவற்றின் மேல் முனைகளில் விலங்குகளின் தோல்களையும் இலைகளையும் மாட்டி கூரைகளும் சுவர்களும் அமைக்கப்படுவது சித்திரமாகப் பதிவு செய்யப்பட்டது. அது அடுத்த தலைமுறையினருக்கு வழிகாட்டிக் கையேடுபோல உதவியது. ஒவ்வொரு தலைமுறையும் வீடு கட்டும் கலையில் சிறுசிறு அபிவிருத்திகளையும் புதுப் புனைவுகளையும் அறிமுகப்படுத்தியது. இதுபோன்ற படிப்படியான திறன் வளர்ச்சி காரணமாக, இன்று உறுதியும் பாதுகாப்பும் வசதியும் மிக்க வானுயரக் கட்டிடங்களை அமைக்கும் திறமை ஏற்பட்டது.

50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மனித இனத்தின் அறிவிலும் திறனிலும் ஒரு திடீர் உயர்வு தோன்றியது. கருவிகள் மேன்மேலும் செம்மையும் செயல்திறனும் பெற்றவையாக உருவாக்கப்பட்டன. வாழ்க்கை முறையில் சிரமம் குறைந்தது. ஓய்வு நேரம் கூடியது. வாய் மொழியாக இசையைப் பாடுவதும் கருவிகளைக் கொண்டு வாசிப்பதும் பிறந்தது. மக்கள்தொகை பெருகியது. திடீரென ஏற்பட்ட இந்த மறுமலர்ச்சிக்கு என்ன காரணம் என்பதை ஆய்வர்கள் கண்டுபிடிக்க முயன்றும் முழுமையாக வெற்றிகிட்டவில்லை.

12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மற்றுமொரு புரட்சி தோன்றியது. விவசாயம் செய்து உணவு தானியங்களைச் சாகுபடி செய்யும் முறையைக் கண்டுபிடித்தான். விலங்குகளின் பின்னால் ஓடி வேட்டையாடியும், காய் கனிகளைப் பறித்து அல்லது சேகரித்து உணவுபெற வேண்டிய தேவை மறைந்தது. எல்லாப் பருவங்களிலும் தடையின்றி உணவு கிடைக்க விவசாயம் உதவியது. இரை கிடைக்கும் இடத்தைத் தேடி இடம்பெயர வேண்டிய அவசியம் இல்லாது போயிற்று. ஓரிடத்தில் வீடு கட்டி வாழ்ந்து, விவசாயத்தின் மூலம் உணவு பெறுவது தொடங்கியது. சிறுசிறு குடியிருப்புகள் உருவாயின. ஒரு கிராமத்துக்கான தொடக்கமாக இது அமைந்தது.


## கேள்விக்கு என்ன பதில்?

இத்தகைய சிறு கிராமங்கள் படிப்படியாக நகரங்களாக வளர்ச்சிபெற்றன. மக்கள் அதிக அளவில் பரஸ்பரம் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. அது பேச்சு வடிவ மொழியிலும் எழுத்து வடிவத்திலும் பெரும் முன்னேற்றம் ஏற்படக் காரணமாயிற்று.


சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் ஒரு புதிய புரட்சி தோன்றியது. அது அறிவியல் புரட்சி. உயிரியல், வானவியல், இயற்பியல், வேதியியல் போன்ற துறைகளில் அற்புதமான கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டன. அதையடுத்து, தொழிற்புரட்சி ஏற்பட்டது. மனிதர்களின் உற்பத்தித் திறன் பன்மடங்கு உயர்ந்தது. புதிய புதிய வாகனங்களும், கருவிகளும் உடல் உழைப்புக்கான தேவையைக் குறைத்து, ஓய்வுக்கும் உல்லாசத்துக்குமான அவகாசத்தை அதிகரித்தன. நுண் கலைகள் உத்வேகம் பெற்றன.

பூமியில் மனித இனம் தோன்றிச் சில லட்சம் ஆண்டுகளே ஆன நிலையில், இவ்வளவு குறுகிய காலத்தில் அது சாதித்தவை மிகவும் அற்புதமானவை. ஒவ்வோராண்டும் புதிய புதிய சாதனைகள் நிகழ்த்தப்படுகின்றன. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை பழையன கழிந்து புதியன புகுந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்காவில் இருக்கிற நண்பருடன் சென்னையில் இருந்தவாறு, நினைத்தபோது பேச முடிகிறது. அவரை தொலைக்காட்சித் திரையில் பார்த்துக்கொண்டேயும் அளவளாவ முடிகிறது. இதையெல்லாம் நமது கொள்ளுத் தாத்தா, பாட்டியால் கனவில்கூடக் கண்டிருக்க முடியாது.

ஆனால், எல்லா அறிஞர்களுக்கும் எழுகிற கேள்வி, "எல்லாம் இருந்தும், எல்லாம் கிடைத்தும், எல்லாம் தெரிந்தும்கூட மனிதர்கள் ஏன் ஒருவரையொருவர் கொன்று அழிக்கிறார்கள்?" என்பதுதான் அது. ●



▶ வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 4, 5 ஆம் வகுப்பு மாணவர்களின் ஒவ்வொரு பிரிவுகளிலும் இருந்து இரண்டு மாணவர்கள், அவர்களது ஆசிரியர்கள், பெற்றோருக்கு கருத்தரங்கு ஒன்றிற்காக அண்மையில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு வருமாறு வலயக் கல்விப் பணிமனையால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. வவுனியாவின் செட்டிகுளம், பாவற்குளம், கோமரசன்குளம் என பல பகுதிகளிலும் இருந்து மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் சென்றிருந்தனர். ஆனால் அங்கு கருத்தரங்கு நடைபெறவில்லை. வருகை தந்தவர்கள் ஒரு மணித்தியாலம் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் பாடசாலைகளுக்கு திரும்பினர்.



▶ தீபம் வாரஇதழின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் அரசடி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடந்தன. தீபம் வாரஇதழின் நிர்வாக பணிப்பாளர் புரட்சிதாசன் மற்றும் அலுவலக பணியாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீதர் சுவாமிநாதன்

# எம்.ஜி.ஆரும் என்.டி.ஆரும்!

**எம்.ஜி.ஆர்** மீது மிகவும் மதிப்பு கொண்டவர் என்.டி.ராமராவ். இருவருக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. இரண்டு பேரும் தங்கள் மொழி படவுலகில் சூப்பர் ஸ்டார்களாக விளங்கியவர்கள். இருவரும் அரசியலில் ஈடுபட்டு தனிக் கட்சி தொடங்கி முதல் அமைச்சரானவர்கள். எம்.ஜி.ஆர் என்.டி.ஆர் என்று அழைக்கும்போது ஒலி கூட ஏறத்தாழ ஒரே மாதிரி இருக்கும்.

எம்.ஜி.ஆர் மீது என்.டி.ராமராவ் வைத்திருந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் உதாரணமாக ஒரு சம்பவம். எம்.ஜி.ஆரை வைத்து 'குமரிக் கோட்டம்', 'உழைக்கும் கரங்கள்' படங்களை எடுத்தவர் கோவை செழியன். அதிமுகவில் இருந்தவர். அவரை முதலாளி என்று செல்லமாக அழைப்பார் எம்.ஜி.ஆர்.

கோவை செழியன் தெலுங்கிலும் படங்கள் தயாரித்துள்ளார். தெலுங்கில் என்.டி.ராமராவை வைத்து படம் தயாரிக்க விரும்பினார். ராமராவ் அப்போது மிகவும் பிஸியாக இருந்த நேரம். அவருடன் கோவை செழியனுக்கு நெருக்கமும் கிடையாது. தான் தயாரிக்க இருக்கும் படத்துக்கு திடீரென்று கேட்டால் ராமராவ் 'கால்ஷீட்' கொடுப்பாரா என்று கோவை செழியனுக்கு சந்தேகம்.

எம்.ஜி.ஆரை சந்தித்தார். என்.டி.ராமராவை வைத்து படம் தயாரிக்க விரும்பும் தனது எண்ணத்தையும் அதற்கு உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். உடனே, ராமராவுடன் தொடர்பு கொண்டு எம்.ஜி.ஆர். பேசினார்.



என்.டி.ஆர் - எம்.ஜி.ஆர்.

படத் தயாரிப்பு சம்பந்தமாக ராமராவைச் சென்று சந்திக்கும்படி செழியனிடம் கூறினார்.

அதன்படி, ஐதராபாத் சென்று ராமராவை சந்தித்தார் செழியன். 'எம்.ஜி.ஆர். சொல்லி வந்திருக்கிறேன். உங்களை வைத்து படமெடுக்க...' என்று செழியன் சொல்லி முடிக்கும் முன்பே, சிரித்துக் கொண்டே அவரை கையமர்த்திவிட்டு என்.டி.ராமராவ் கேட்ட கேள்வி, "ஷூட்டிங்கை எப்ப வெச்சுக்கலாம்?"

எம்.ஜி.ஆருக்கு என்.டி.ராமராவ் கொடுத்த மதிப்புக்கும் மரியாதைக்கும் இது சான்று.

என்.டி.ராமராவ் தனிக் கட்சி தொடங்கி முதல்வராகும் முன்பே தமிழகத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சியைப் பிடித்து முதல்வராகிவிட்டார். அவரது பாணியில் தானும் தனிக் கட்சி தொடங்க முடிவு செய்தார் ராமராவ். தனக்கு முன்னோடியாக விளங்கும் எம்.ஜி.ஆரிடம் ஆலோசனையும் ஆசியும் கேட்பதற்காக சென்னை வந்து எம்.ஜி.ஆரை சந்தித்தார்.

அவருக்கு வாழ்த்து தெரிவித்த எம்.ஜி.ஆர். கேட்ட கேள்வி "கட்சிக்கு என்ன பெயர் வைக்கப் போறீங்க?"

**தமிழில் எம்.ஜி.ஆர். நடித்த பல ரீமேக் படங்கள் தெலுங்கில் என்.டி.ராமராவ் நடித்தவை. ராமராவ் நடித்த 'ராமுடு பீமுடு' படம்தான் தமிழில் 'எங்க வீட்டுப் பிள்ளை' ஆனது. 7 சென்டர்களில் வெள்ளி விழா கொண்டாடி புதிய சாதனை படைத்தது.**

"தெலுங்கு ராஜ்யம்"... ராமராவின் பதில். எம்.ஜி.ஆர். சொன்னார். "தெலுங்கு தேசம் என்று பெயர் சூட்டுங்கள். பொருத்தமாக இருக்கும்." அதை ராமராவ் ஏற்றுக்கொண்டார்.

"எம்.ஜி.ஆர் எனக்கு வழிகாட்டி. அண்ணனைப் போன்றவர் அவரைப் பின்பற்றியே அரசியலுக்கு வந்தேன்" என்று அறிவித்த ராமராவ், தெலுங்கு தேசம் கட்சியைத் தொடங்கினார். தமிழகத்தில் தேர்தல் பிரசாரங்களில் திறந்த வேனில் சென்று பிரசாரம் செய்யும் பாணியை முதலில் ஏற்படுத்தியவர் எம்.ஜி.ஆர்.தான். அவரைப் போலவே ஆந்திராவிலும் திறந்த வேனில் சென்று சூறாவளி பிரசாரம் செய்த ராமராவ், மகத்தான வெற்றி பெற்று ஆட்சியையும் பிடித்தார்.

எம்.ஜி.ஆரிடம் ஆசி பெறுவதற்காக மீண்டும் சென்னை வந்து அவரை சந்தித்து மாலை அணிவித்து வாழ்த்து பெற்றார். எம்.ஜி.ஆரும் அவருக்கு வாழ்த்து தெரிவித்ததோடு, ராமராவுக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் தனது வீட்டில் தடபுடல் விருந்தளித்தார்.

எம்.ஜி.ஆர். எதையுமே நுணுக்கமாகவும் தீர்க்க தரிசனத்தோடும் சிந்திக்கக் கூடியவர். விருந்தின்போதே சென்னை நகரின் தண்ணீர் பிரச்சினையையும் ஆந்திராவில் கிருஷ்ணா நதியில் இருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டால் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்றும் ராம ராவிடம் கூறினார். எம்.ஜி.ஆர். சொன்னால் ராமராவிடம் மறுப்பேது? அதன் தொடர்ச்சியாக உருவானதுதான் சென்னைக்கு தண்ணீர் வழங்கும் தெலுங்கு கங்கைத் திட்டம். 1983ம் ஆண்டு ஜனவரியில் ஆந்திர முதல்வராக ராமராவ் பதவியேற்றார். அடுத்த 4 மாதங்களில் தெலுங்கு கங்கை திட்டம் தொடக்க விழா நடந்தது.


தெலுங்கு கங்கை திட்டத் தொடக்க விழாவில் என்.டி.ராமராவ், எம்.ஜி.ஆர்., இந்திரா காந்தி.

1983ம் ஆண்டு மே 25ம் தேதி சென்னையில் நடந்த பிரம்மாண்டமான தெலுங்கு கங்கை திட்ட தொடக்க விழாவில் பிரதமர் இந்திரா காந்தி கலந்து கொண்டார். திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசின் பங்கில் முதல் தவணைக்கான காசோலையை இந்திரா காந்தி மூலம் ராமராவிடம் கொடுக்கச் செய்தார் எம்.ஜி.ஆர்.

1987ம் ஆண்டு எம்.ஜி.ஆர். மறைந்தபோது என்.டி.ராமராவ் சென்னை வந்து கலங்கிய கண்களுடன் அஞ்சலி செலுத்தினார். அப்போது அவர் சொன்ன வார்த்தைகள்...

'எம்.ஜி.ஆர். மறைவின் மூலம் எனது குருநாதரை இழந்துவிட்டேன்'.

எம்.ஜி.ஆர். எதையுமே நுணுக்கமாகவும் தீர்க்க தரிசனத்தோடும் சிந்திக்கக் கூடியவர்.

தமிழில் எம்.ஜி.ஆர். நடித்த பல ரீமேக் படங்கள் தெலுங்கில் என்.டி.ராமராவ் நடித்தவை. ராமராவ் நடித்த 'ராமுடு பீமுடு' படம்தான் தமிழில் 'எங்க வீட்டுப் பிள்ளை' ஆனது. 7 சென்டர்களில் வெள்ளி விழா கொண்டாடி புதிய சாதனை படைத்தது. எம்.ஜி.ஆர். திரையுலகை விட்டு விலகும் வரை 'எங்க வீட்டுப் பிள்ளை'யின் சாதனை முறியடிக்கப்படவில்லை. **தொடரும்...**


திறந்த வேனில் எம்.ஜி.ஆர் பிரசாரம் செய்கிறார். அருகே அவரது மெய்க்காப்பாளர் கே.பி.ராமகிருஷ்ணன்.

# டூரிங் டாக்கீஸ்





## பிசியாக இருக்கும் நிக்கி கல்ராணி

டார்லிங் படநாயகியான நிக்கி கல்ராணி, கோ2, வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன் படங்களைத் தொடர்ந்து மொட்டசிவா கெட்டசிவா, கடவுள் இருக்கான் குமாரு, நெருப்புடா, கீ என பலபடங்களில் பிசியாக நடித்து வருகிறார். மீடியம் பட்ஜெட்டிற்கு ஏற்ற நடிகையாக இருப்பதால் மேலும், சில கம்பெனிகளும் அவரிடம் கதைசொல்லி ஒகே பண்ணி வைத்திருக்கிறார்கள். அதனால் அடுத்த ஆண்டில் நிக்கி கல்ராணி நடிப்பில் அரைடசின் படங்கள் வரை ரிலீசாகும் நிலை உள்ளது. இப்படி தமிழில் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் நிக்கி கல்ராணி, தன்னுடன் நடித்த ஹீரோக்கள் மட்டுமன்றி நடிக்காத ஹீரோக்களிடமும் நட்பு வளர்க்கிறார். இதன் காரணமாக, கோலிவுட்டுக்கு வந்து சில ஆண்டுகளிலேயே பெரும்பாலான ஹீரோ, இயக்குநர்களுக்கு பிடித்தமான நடிகையாகி விட்டார் நிக்கி கல்ராணி.

## ஜோடி இல்லாத நயன்

நயன்தாரா நடிக்கும் 'டோரா' படத்தில் அவருக்கு ஜோடி கிடையாதாம். முன்னணி நடிகையான நயன்தாரா சமீபகாலமாக ஹீரோயினுக்கு முக்கியத்துவம் வாய்ந்த படங்களில் நடித்துவருகிறார். 'நீ எங்கே என் அன்பே', 'மாயா'என நயன்தாராவை மையமாக வைத்து வெளியான படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைக்கிறது. அறிமுக இயக்குநர் தாஸ் ராமசாமி இயக்குகிறார். விவேக் மெர்வின் இசையமைக்கும் இப்படத்தை இயக்குநர் சற்குணம் தயாரிக்க, ஒளிப்பதிவாளராக தினேஷ் கிருஷ்ணன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். 'தனிஒருவன்' புகழ் ஹரிஷ் உத்தமன் பொலிஸ் அதிகாரியாக நடிக்க பெங்களூரைச் சேர்ந்த சுலிலேகுமார் வில்லனாக அறிமுகமாகிறார். ஒருகொலை மற்றும் அதுசார்ந்த விசாரணைகளை சுற்றி நகரும் இக்கதையில் கார் ஒன்று முக்கியப் பங்கைவகிக்கும் என கூறப்படுகிறது.



## பத்மபிரியாவுக்கு வாய்ப்பு வந்தது

திருமணத்துக்குப் பிறகும் நடித்துவருகிறார் பத்மபிரியா. ஆனால் முன்புபோல் தமிழ், மலையாளத்தில் அவருக்கு வாய்ப்புகள் இல்லை. என்றாலும் திறமை இருக்கிற இடத்தை வாய்ப்புகள் தேடிவரும்தானே. இந்தியில் தயாராகும், த ஆர்பன் படத்தில் நடிக்க பத்மபிரியாவுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த இந்திப் படத்தில் நஸ்ருதின் ஷா மகன் விவான் ஷா ஜோடியாக நடிக்கிறார். இந்த படத்தில் கமாலினி முகர்ஜி, மாளவிகா மேனன் நடிக்கிறார்கள். என்றாலும் பத்மபிரியாவுக்குதான் முக்கிய பாத்திரம். ரஞ்சித் பிலிட் இந்தப் படத்தை இயக்குகிறார்.



## கமலின் மனைவி ரம்யாகிருஷ்ணன்

கமலின் சபாஷ் நாயுடு படத்தில் ரம்யாகிருஷ்ணன் முக்கியமான வேடத்தில் நடித்துள்ளார். பல்ராம் நாயுடுவாக நடிக்கும் கமலின் மனைவியாக அவர் வருவதாக தகவல். விரைவில் அவர் ஷங்கரின் 2.0 படத்திலும் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. 350 கோடி பட்ஜெட்டில் தயாராகிவரும் 2.0 படத்தின் பாதிகாட்சிகள் படமாக்கப்பட்டுவிட்டன. இதில் வரும் முக்கியமான கதாபாத்திரம் ஒன்றில் ரம்யா கிருஷ்ணனை நடிக்கவைக்க திட்டமிட்டுள்ளாராம் சங்கர். படையப்பா படத்தில் ரஜினிக்கு வில்லியாக இந்த நீலாம்பரி போட்ட ஆட்டம் 2.0 படத்தில் நிறைய எதிர்பார்க்கவைக்கிறது.



## தல 57 ஒத்திவைப்பு

அஜித் நடிப்பில் உருவாகவிருக்கும் 'தல 57' படத்தின் பூசை சமீபத்தில் சென்னையில் எளிமையாக நடந்தது. இப்படத்தை 'வீரம்', 'வேதாளம்'ஆகிய படங்களை இயக்கிய சிவா இயக்குகிறார். அனிருத் இசையமைக்கிறார். சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் பிரமாண்டமாக தயாரிக்கிறது. இப்படம் முழுக்க முழுக்க வெளிநாடுகளில் படமாகவிருக்கிறது. இப்படத்தின் பூசையைத் தொடர்ந்து இம்மாத இறுதியில் படப்பிடிப்பு தொடங்கும் என கூறப்பட்டது. ஆனால், தற்போது படப்பிடிப்பு திகதியை படக்குழுவினர் ஒத்திவைத்துள்ளதாக கூறப்படுகிறது. ஓகஸ்ட் 10ந் திகதி இப்படத்தின் படப்பிடிப்பை தொடங்கவுள்ளார்களாம். தற்போது இப்படத்தின் கதாநாயகி தேடும் படலம் தீவிரமாக நடைபெற்றுவருகிறது. இதற்காக காஜல் அகர்வாலிடம் பேச்சுவார்த்தை நடத்திவருவதாக கூறப்படுகிறது. காமெடி நடிகர் கருணாகரன் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வில்லியானார் ஜோதிஷா

நலம்தானா என்ற படத்தில் நடிக்க வந்தவர் ஜோதிஷா. அதையடுத்து சில படங்களில் நடித்தவர், தற்போது ஏகனாபுரம், வாத்தியாரும் தலயும், பேய் இருக்கா இல்லையா உட்பட பல படங்களில் நடித்து வருகிறார். அதோடு கன்னடத்தில் அவர் நடித்த படமொன்று தப்புத்தாளங்கள் என்ற பெயரில் தமிழில் வெளியாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், இதுவரை கதாநாயகியாக நடிக்கவேண்டும் என்பதற்கான முயற்சிகளில் தீவிரம் காட்டி வந்த ஜோதிஷா, தற்போது அதற்கான சாத்தியம் குறைந்து வருவதால், ஏகனாபுரம் என்ற படத்தில் வில்லி அவதாரம் எடுத்துள்ளார். அதுவும் சாதாரண வில்லி இல்லையாம். கிட்டத்தட்ட திமிரு ஸ்ரேயா ரெட்டி ரேஞ்சுக்கு அதிரடியான வேடமாம். அதனால் இதுவரை பொசிட்டீவாக நடித்த வேடங்கள் பெற்றுத்தராத பெயரை, இந்த வில்லிவேடம் பெற்றுத்தரும் என்று பெரிய நம்பிக்கையுடன் காத்திருக்கிறார் ஜோதிஷா.

## "எஸ் 3" பெயரில் சிங்கம் 3


சிங்கம் படத்தின் மூன்றாவது பாகம், எஸ் 3 என்ற பெயரில் தயாராகி வருகிறது. வழக்கம் போல் சூர்யா அனுஷ்கா நடிக்கின்றனர். இந்தப் படத்தில் வித்யா என்ற பெயரில் ஸ்ருதி பத்திரிகையாளராக வருகிறார். வில்லனைப் பிடிக்க நாயகன் சூர்யாவுக்கு உதவும் கதாபாத்திரம். சபாஷ் நாயுடுவுக்காக அமெரிக்கா சென்றவர் தற்போது மீண்டும் எஸ் 3 படப்பிடிப்புக்காக திரும்பி வந்துள்ளார். இந்தமாத இறுதியுடன் எஸ் 3 படத்தை நிறைவு செய்துமீண்டும் சபாஷ் நாயுடு படப்பிடிப்பில் இணைகிறார். எஸ் 3 படத்துக்கு ஹரிஸ் ஜெயராஜ் இசையமைத்து வருகிறார்.

## நல்ல ஆண்களை நம்பமாட்டேன்

நான் நல்ல ஆண்களை நம்புவதில்லை என தீபிகா படுகோனேவின் பாதி வரையப்பட்ட புகைப்படத்தில் இந்தவாசகம் இடம்பெற்று அது சமூகவலைத்தளங்களில் அவரது ரசிகர்களால் வைரசாக பரவிவருகிறது. இந்தி திரையுலகில் பட்டையைக் கிளப்பிய தீபிகா தற்போது ஆங்கில திரைப்படங்களிலும் நடித்துவருகிறார். ட்ரிபிள் எக்ஸ் திரிட்டன் ஒப் சான்டர் கேஜ் எனும் ஆங்கிலப் படத்தில் ஹாலிவுட் நடிகர் வின் டீசலுடன் தீபிகா படுகோனே நடித்துவருகிறார். தீபிகாவின் முதல் ஆங்கிலபடமான இதில் சிஸ் பேக் எல்லாம் ட்ரைபண்ணி இருக்கிறார். மேலும் ஜெட்லி, டோனிஜா போன்ற உலக புகழ் பெற்ற நடிகர்களும் இந்த படத்தில் நடிக்கிறார்கள். தீபிகாவின் பாதி வரையப்பட்ட முகத்தின் அருகில் நான் நல்ல ஆண்களை நம்புவதில்லை என்ற ஆங்கில வாசகம் எழுதப்பட்டு இருக்கிறது. இந்த புகைப்படத்தைதான் தீபிகாவின் ரசிகர்கள் பரப்பி வருகின்றனர்.

# சிவமோகன் ஏன் படியேறினார்?

நேருஜி




கடந்த 18 ஆம் திகதி ஊடகங்கள் மற்றும் சில ஊடகவியலாளருக்கு மின்னஞ்சல் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. வவுனியா நகரசசபை செயலாளர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் ஆகிய இருவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த மின்னஞ்சலை அனுப்பப்பட்டிருந்தது தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் பெயரில். அவரது கையொப்பத்துடன் கூடிய கடிதமும் இணைக்கப் பட்டிருந்தது.

வவுனியா நகர அபிவிருத்திக்கு அவர்கள் தடையாக உள்ளனர் என்பது சிவமோகனின் குற்றச்சாட்டு. வர்த்தக நோக்கத்துடன் அல்லது சுயதேவைக்காக கட்டிடம் கட்ட முனைபவர் களிற்கு உடனடியாக அனுமதி வழங்கப்படுவதில்லை, வருடக்கணக்கிலும் இழுத்தடிக்கப்படுகிறது என்பது அவரது குற்றச்சாட்டு. இதனையடுத்து இலஞ்ச ஊழல் முயற்சிக்கான அதிகார துஷ்பிரயோக முயற்சி தொடர்பான வழக்கு என பதியப்பட்டுள்ளது.

வவுனியாவில் பூதாகரமாக உருவெடுத்துள்ள இந்த விடயத்தின் உண்மைத்தன்மை என்பதை அறிய களமிறங்கினோம்.

சொந்தக்கதை சோகக்கதை

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் வவுனியா கற்குழி பகுதியிலும், வவுனியா பிரதான வைத்தியசாலை அருகாமையிலும் 'அபிசா வைத்தியசாலை' என்னும் பெயரில் தனியார் வைத்திய சாலைகள் இரண்டை நடத்தி வருகிறார். 2010 ஆம் ஆண்டு கற்குழி பகுதியிலும், 2012 ஆம் ஆண்டு வைத்தியசாலை அருகாமையிலும் தனியார் வைத்தியசாலைகளை ஆரம்பித்தார். அப்போது மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலம். அகிந்த ராஜபக்சவின் அமைச்சரான திஸ்ஸ கரலியத்த அப்போது அதை திறந்து வைத்திருந்தார்.



பாර்ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

12.07.2016

பணிப்பாளர் நாயகம்
இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள்
புலன் விசாரணை செய்யும் ஆணைக்குழு
36, மலலசேகர மாவத்த
கொழும்பு 07

இலஞ்ச ஊழல் முயற்சி குற்றச்சாட்டு – திருமதி.ஜெ.சுரேந்தி திட்டமிடல் பணிப்பாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபை, கிளை அலுவலகம் வவுனியா. மற்றும் திரு.தர்மேந்திரா செயலாளர், நகரசபை வவுனியா

தொடர்ந்தும் வவுனியா நகர பொதுமக்களின் கட்டட அனுமதிகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் பொருத்தமற்ற இழுத்தடிப்புக்களில் மேற்படி திருமதி.ஜெ.சுரேந்தி மற்றும் திரு.தர்மேந்திரா என்பவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களது நடவடிக்கைகளில் பெருந்தொகையான அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதே நேரம் கையூட்டு வழங்குபவர்கள் எவ்வித இடையூறுகளுமின்றி தமது அனுமதிகளை பெற்று வருகின்றனர்.

மேற்படி உத்தியோகத்தர்கள் அதிகார துஸ்பிரயோகம் மூலம் பொதுமக்களின் மேல் அதிகார மேலாதிக்கம் செலுத்தி அவர்களின் நம்பிக்கைகளை குலைத்து, கையூட்டல் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள், என்றே நான் குற்றம் சாட்டுகின்றேன். மேலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது தனது அதிகாரத்திற்கு மேலாக செயல்பட்டு வருகிறார்கள், தலையிட்டும் வருகிறார்கள். திருமதி.ஜெ.சுரேந்தி என்பவர் தனது அதிகாரத்தை மட்டும் நிலைநிறுத்துவதற்கு நகர அபிவிருத்தி திட்டமிடல் கூட்டத்தில் தனது அதிக்கத்தை நிலைநிறுத்தி வருகிறார். ஏனைய நிறுவனங்கள் முக்கியமாக நகர சபையை தூண்டுதல் செய்தும் வற்புறுத்தியும் கடிதங்கள் மூலம் பொதுமக்களை இக்கட்டில் தள்ளி தனது கையூட்டு நடவடிக்கைகளில் மறைமுகமாக ஈடுபட்டு வருகிறார்.

திருமதி.ஜெ.சுரேந்தி என்பவர் 10 வருடங்களுக்கு மேல் மேற்படி பிரதேசத்தில் கடமையாற்றி வருவதால் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி பொதுமக்களுக்கு இடையூறாக இருந்து வருகிறார். இவர்களது நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கான பின்வரும் விடயங்களை தங்கள் விசாரணைக்காக சமர்ப்பிக்கின்றேன்.

எனது கோரிக்கைகள்

1. சம்மந்தப்பட்டவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, பொதுச்சேவையில் அவர்களது அதிகார துஸ்பிரயோகம் நிறுத்தப்படவேண்டும்

வவுனியாவில் அதிகம் சம்பாதிக்கும் தனியார் வைத்தியசாலை அபிசா என்கிறார்கள். இதன் தொடர்ச்சியாக வவுனியா பிரதான வைத்தியசாலைக்கு அருகில் நிலக்கீழ் மாடி உட்பட மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்றினை தற்போது அமைக்க முயற்சிக்கிறார். அதற்கு அனுமதி கோரியதையடுத்து எழுந்த சிக்கல்களே இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அவரை கடிதம் எழுத வைத்துள்ளது.



வவுனியா நகரத்திலுள்ள அபிஷா வைத்தியசாலை

புதிதாக அமைக்கப்படவுள்ள மூன்று மாடிகளைக்கொண்ட தனியார் வைத்திய சாலையில் 600 படுக்கைகள் கொண்ட 28 நோயாளர் விடுதிகளும், நான்கு சத்திரசிகிச்சை கூடங்களும் அமைக்கப்படவுள்ளது. அது நிறுவப்படுமானால் வவுனியாவில் மட்டுமல்ல வன்னிப்பகுதியிலேயே மிகப்பிரமாண்டமான தனியார் வைத்தியசாலையாக அது உருமாறும்.

இதற்கான அனுமதியை கடந்த மார்ச் 15ம் திகதி (2016) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வவுனியா காரியாலயத்தில் கோரியிருந்தார். அன்றையதினமே அதற்கான விண்ணப்பத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா கிளை பொறுப்பதிகாரியான பெண் உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்திருந்தார். மறுநாள் அந்த விண்ணப்பத்திற்கான நகர அபிவிருத்தி அதிகார சபைக்கான கட்டணம் ஒரு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து அறுபது 60 சதத்தை இலங்கை வங்கியில் வைப்பு செய்து, அதற்கான பற்றிச் சீட்டை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைத்துள்ளார்.

மார்ச் 17 ஆம் திகதி சிவமோகனால் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

நவீனவசதிகள் கொண்ட வைத்தியசாலை என்பதால் வேறு திணைக்களங்களின் அனுமதிக்கடிதங்கள் சிலவற்றையும் நகர அபிவிருத்தி அதிகாரசபை கோரியுள்ளது.

தீயணைப்பு வசதிக்கான அனுமதிக் கடிதம், சுகாதார அமைச்சின் அனுமதிக் கடிதம், பொது சுகாதார பரிசோதகரின் அனுமதிக் கடிதம், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிக் கடிதம் மற்றும் திண்மக் கழிவு வெளியேற்றம் தொடர்பாக வவுனியா நகரசபையின் அனுமதி என்பன கோரப்பட்டிருந்தன. அதனையடுத்து சிவமோகன் சில அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளார். ஆனால் முழுமையான அனுமதிக்கடிதங்களை பெறமுடியவில்லை.

ஏப்ரல் 22ம் திகதி நகரசபையிடம் விண்ணப்பத்தை சமர்த்தார்.

கழிவகற்றல் விடயத்தில்த்தான் சர்ச்சை தோன்றியுள்ளது. அதிக நோயாளர்கள் தங்குவார்கள், சத்திரசிகிச்சைகூடம் அமையவுள்ளது என்பவற்றை கவனத்தில் கொண்டு, கழிகவற்றல் நடைமுறையில் சம்பந்தப்பட்டவர்கள் கறார்தன்மையை பேணியுள்ளனர். ஆனால், ஒரு விடயத்திற்கு இரண்டுவிதமான தீர்வுகளை இரண்டு தரப்பு கொடுத்தது சிக்கலை தோற்றுவித்துள்ளது.

கழிவுகளை அப்படியே அகற்ற முடியாது. அவற்றை சுத்திகரித்து, அதிலிருந்து பெறப்படும் நன்னீரை மட்டமே வெளியிட முடியுமென பொதுசுகாதார பரிசோதகர்கள் தெரிவித்திருந்தனர். மத்திய சுற்றாடல் அதிகாரசபை சொன்னது வேறு தீர்வு. கழிவுகளை நிலத்திற்குள் புகாதவாறு குழி அமைத்து சேமித்து கழிவு பவுசர் மூலம் வெளியேற்ற வேண்டும் என்றார்கள். ஒரு வைத்திய சாலையின் கழிவுகற்றல் தொடர்பாக இரு திணைக்களங்கள் வேறுவேறு பரிந்துரைகள் செய்ததால், இரண்டு திணைக்களங்களும் மீளவும் பரிசீலித்து பதில் தருமாறு மீண்டும் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இரு திணைக்களங்களும் பரிசீலித்து மீள அனுப்பிய கடிதத்தில் கழிவுகளை சேகரித்து அதனை பவுசர் மூலம் வெளியேற்றலாம் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கு இரண்டு அனுமதி வழங்க வேண்டியிருந்தது. ஒன்று உடனே வழங்குவது. மற்றது கட்டிடவேலைகள் முடிந்து வைத்தியசாலை திறக்கும் சமயத்தில் வழங்குவது. ஆனால் நவீன இயந்திர சாதனங்கள் பொருத்துவதால் இராசாயனம் வராது என சிவமோகன் எம்.பி கடிதம் மூலம் குறிப்பிட்டிருந்தார்.

இவ் அனுமதி தொடர்பில் கடந்த 8 ஆம் திகதி நகர திட்டமிடல் பணிப்பாளர் கலந்துகொண்ட கூட்டத்தில் சம்மந்தப்பட்ட திணைக்களங்களுடன் பரிசீலித்தபோது வைத்தியசாலை மற்றும் சத்திரசிகிச்சை கூடம் என்பன அமையவுள்ளதால் இரத்தம், மருத்துகளின் இரசாயனங்கள் என்பன வரும், அது நிலக்கீழ் நீருடன் சேர வாய்புள்ளது, அவ்வாறு கலந்தால் நீரில் பாதிப்பு எற்படும் என தெரிவிக்கப்பட்டு அவற்றை சுத்திகரித்து நன்னீரை மட்டும் வெளியிடும்

செயன்முறை அமைக்கப்பட வேண்டும், அவ்வாறு அமைக்குமாறு தான் யாழ்ப்பாணத்திலும் வலியறுத்தப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது. அவ்வாறான கழிவு வெளியேற்றம் தொடர்பான பொறிமுறை ஒன்றை நிறுவ கிட்டத்தட்ட 60 இலட்சத்திற்கு மேல் செலவாகும். இந்த விடயமே பூதாகரமாக மாறியுள்ளது.

இந்த விவகாரம்தான் இப்பொழுது பூதாகரமாகி இலஞ்சஊழல் ஆணைக்குழுவரை சென்றுள்ளது.

பூமிக்கே முதல் மரியாதை!

600 படுக்கைகள், 28 விடுதிகள், சத்திர சிகிச்சைகூடம் என்பவற்றை கொண்ட வைத்தியசாலை வவுனியாவில் அமைக்கப்படுவது சிறந்த விடயம். ஆனால் அது அமைக்கும்போது அதற்கான கட்டமைப்பு, திண்ம, திரவக் கழிவு வெளியேற்றம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இரத்தம், மருந்துகளின் இரசாயனங்கள், நோயாளிகளின் கழிவுகள் என்பன பாதுகாப்பற்ற முறையில் வெளியேற்றப்பட்டால் தரைக் கீழ் நீர் மாசடையும். சூழலை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு பொறுப்புள்ள மக்களின் கடமை. அதற்காகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் அறிவுறுத்தல்களை கைக்கொள்வதே நாட்டுக்கும், பூமிக்கும் செய்யும் மரியாதை.

ஆனால் அந்த பொறிமுறை மீதே சிவமோகன் குற்றம்சாட்டியுள்ளார். இதனால், இதில் யார் சரி, யார் பிழை என்பதை முறையான விசாரணை மூலமே கண்டறியலாம்.

ஆனால் நகரசபையிடம் ஏப்ரல் 22 விண்ணப்ப படிவம் சமர்ப்பிக்கப்பட்டு, யூலையில் இலஞ்சஊழல் ஆணைக்குழுவிற்கு செல்வது சற்று "ஓவர்" போலத்தான் தெரிகிறது! வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கையில் மட்டுமே குறியாக இருப்பார்கள். பெரும்பாலானவர்கள் பூமியை நினைத்தும் பார்ப்பதில்லை. பூமி எதிர்கொண்டுள்ள மிகப்பெரிய பேராபத்து இது!

பிரமாண்ட வைத்தியசாலை அமைக்கும் போது, கழிவகற்றல்முறையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்றுவது ஒவ்வொருவரின் கடமை. மக்கள் பிரதிநிதிகளிற்கு இன்னும் அதிகமிருக்க வேண்டாமா? ●

---



# யாழ்ப்பாண குடாநாட்டில் காலநிலை மாற்ற பாதிப்புக்களும் தணிப்பு நடவடிக்கைகளும்

## (Climate Change Impacts and Mitigation Measures in the Jaffna District)


(சென்றவார தொடர்ச்சி)

**நா.பிரதீபராஜா**
(முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

**காலநிலை மாற்ற தணிப்புச் செயற்பாடுகள்**

காலநிலை மாற்றம் என்பது இன்றைய மனித குலத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக உள்ளது. இதனைத் தணிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில், தேசிய ரீதியில் மற்றும் உள்ளூர்ரீதியான செயற்பாடுகள் அவசியமானவையாக உள்ளன. அந்தவகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலை மாற்றத்தினைக் குறைப்பதற்கான பரிந்துரைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. **விழிப்புணர்வு:** காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வு மிக அவசியமாகும். மக்கள் காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்களை அறிந்திருத்தல் வேண்டும். மழைவீழ்ச்சி காலங்கள் மற்றும் சராசரி அளவுகள், வெப்பநிலையின் சாராசரி அளவுகள், அதிக வெப்பமான மாதம், வெப்பம் குறைந்த மாதம், காற்று வீசும் திசை, வளிமண்டல ஈரப்பதன், வளிமண்டல அமுக்கம் மற்றம் காலநிலை மாற்ற விளைவுகள் என்பன தொடர்பாகப் போதுமான அறிவு அவசியமாகும். குறிப்பாக விவசாயிகள் காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். அதற்கு ஏற்றாற்போல் தமது பயிர்ச்



செய்கை நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளுதல் அவசியமானதாகும். இத்தகைய விழிப்புணர்வு சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஏற்படல் வேண்டும். காலநிலைமாற்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அச்சு மற்றம் இலத்திரனியல் ஊடகங்கள் பெரும் பங்கினை வகிக்க முடியும். வினைத்திறனான விழிப்புணர்வே காலநிலை மாற்றத்தினைத் தணிப்பதற்கான மிகச் சரியான நடவடிக்கை ஆகும்.

2. **அபிவிருத்தி அனுமதிகள்:** அபிவிருத்திச் செயற்பாட்டுக்கான அனுமதிகளின் போது எதிர்பாராத காலநிலை மாற்றத்தினைக் கருத்திற் கொண்டு அனுமதிகள் வழங்கப்படல் வேண்டும். எமது காலநிலை நிலைமைகளில் தங்கியிருக்கின்ற வளங்களின் மீது அதிகளவு அழுத்தம் தரக்கூடிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்குதல்கூடாது. உதாரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளமானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழைவீழ்ச்சியில் தங்கியுள்ளது. எனவே தரைக்கீழ் நீரினை அளவுக்கு அதிகமாக ஓரிடத்தில் இருந்து மட்டும் பெறும் புதிய தொழில் முயற்சிகளுக்கு போதுமான ஏற்பாடு வரும் வரையில் அனுமதி வழங்குதல் கூடாது. இதன் மூலம் காலநிலை மாற்றத்தின் பாதிப்புக்களில் ஒன்றான கடும் வரட்சியைத் தடுக்க முடியும்.

3. **மரங்களைப் பாதுகாத்தலும் மர நடுகையும்:** யாழ்ப்பாணக் குடாநாட்டின் இயற்கைத்தாவரப் போர்வையை அதிகரித்தல் வெப்பநிலை வேறுபாடுகளின் காரணமாக ஏற்படும் அசௌகரிய நிலைமையைத் தடுக்க முடியும்.


4. **வரட்சியை எதிர் கொள்வதற்கான புதிய தந்திரோபாயங்கள்:** எமது யாழ்ப்பாணக் குடாநாடு எமக்குக் கிடைக்கும் மழைவீழ்ச்சியின் மூலம் உயிர் வாழ்கின்றது. எமக்குக் கிடைக்கும் மழைவீழ்ச்சியானது உரியமுறையில் சேமிக்கப்படவேண்டிய அதேசமயம் வரட்சியை எதிர் கொள்வதற்கான வாழ்க்கை முறையையும் நாம் பின்பற்றுதல்வேண்டும்.எமக்குக்கிடைக்கின்ற மழைவீழ்ச்சியை வைத்துக் கொண்டு நாம் எமக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வரட்சியை அறிந்து கொள்ள முடியும். அதாவது கடந்த ஆண்டின் வடகீழ் பருவ பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் எமக்கு கிடைத்த மழைவீழ்ச்சி 600mm இனை விடக் குறைவாகவும். அதேசமயம் நிகழும் ஆண்டின் மே மாதம் வரை எமக்குக் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி 225mm இனை விடக் குறைவாகவும் இருந்தால் நிகழும் ஆண்டின் ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர்மாதங்களில் நாம் வரட்சியை (தீவகப் பகுதிகளே அதிகம் பாதிக்கப்படும்) எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கும். மே மாதம் 30 ஆம் திகதியே நாம் வரட்சிக்குரிய நிலைமைகளை எதிரி கொள்ள எம்மைத் தயார்படுத்தல் வேண்டும்.

5. **வாழ்க்கை முறை மாற்றம்:** தமிழர்கள் மிக நீண்டகாலமாக காலநிலையுடன் அனுசரித்தே தமது வாழ்க்கை முறையைப்பேணி வந்துள்ளார்கள். தமிழர்களின் பண்டிகைகள் காலநிலைக்கேற்பவே வகுக்கப்பட்டுள்ளன. பண்டிகைகள் மட்டுமன்றி பண்டிகைகள் கொண்டாடும் முறைகள், உணவுப்பழக்க வழக்கங்கள் எனப் பல விடயங்கள் காலநிலை நிலமைக்கு ஏற்பவே காணப்படுகின்றன. தமிழர்கள் ஆண்டின் முதல் ஆறு மாதங்களையும் வெப்ப உலர்பருவமாகவும், பின் ஆறு மாத காலத்தினை வெப்ப ஈரப் பருவமாகவும், வகுத்துக்கொண்டு செயற்பட்டுள்ளனர். இதனால் முதல் ஆறு மாதங்களும் ஒருவகையான வாழ்க்கை முறையும், அடுத்த ஆறு மாதங்களும் இன்னொருவகையான வாழ்க்கை முறையும் வாழ்ந்துள்ளனர். இதனால் தைப்பொங்கல் நிகழ்வை ஒருவகையாகவும், ஆடிப்பிறப்பினை வேறொரு வகையாகவும் கொண்டாடுகின்றனர். எவரும் தைப்பொங்கலுக்கு மோதகமோ கொழுக்கட்டையோ அவிப்பது கிடையாது. அதுபோல் ஆடிப்பிறப்பிற்கு எவரும் பொங்கல் வைப்பது கிடையாது. காலநிலையும் அவ்வாறே இருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் உழவுத்தொழில் வேலைகள் யாவும் ஆடி மாதத்திலேயே தொடங்கிவிடும். தை மாதத்திலே அறுவடை வேலைகள் தொடங்கிவிடும். மழைவீழச்சி வெப்பநிலைக்கேற்றவகையில் தமது வாழக்கை முறையை அமைத்துக் கொண்டார்கள். அத்துடன் யாழ்ப்பாணக்குடாநாட்டு மக்கள் காலநிலையுடன் இணைந்து வாழ்ந்தார்கள் என்பதற்கு இன்னொரு உதாரணத்தையும் குறிப்பிடலாம். அதாவது, யாழ்ப்பாணக்குடாநாட்டின் 90% மான இந்து மற்றும்கிறிஸ்தவ ஆலயங்களின் திருவிழாக்கள் யாவுமே ஆவணி மாதம் முடிவதற்குள் முடிவடைந்து விடும். ஏனெனில் ஆவணிக்குப்பிறகு மழைக் காலம் என்பதனால் மழை வந்தால் ஆலயத்திருவிழாக்களைப் பாதிக்கும் என்ற நிலையில் திருவிழாக்கள் யாவற்றையும் ஆவணிக்கு முன்னர்நிகழ்த்தி விடுவார்கள். இதனால் காலநிலையின் எத்தகைய இடையூறும் இன்றி திருவிழாக்களை செய்ய முடியும் என்பதனை அறிந்திருந்தார்கள்.

(தொடரும்)



சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



# குரு பகவான் பற்றிய சில முக்கிய தகவல்களை அறியுங்கள்.

**2016** ஆகஸ்ட் மாதம் தொடக்கம் வியாழ மாற்றப் பலன்கள் எவ்வாறமையும்? குரு பகவான் பற்றிய சில முக்கிய தகவல்களை அறியுங்கள்.

நவக்கிரக சஞ்சார நிலைகள் பிரகாரம் ஒவ்வொரு மகா தெசையிலும் ஒன்பது புத்திகளும் நடைபெற்றே ஆகும். அவை நடைபெறும் கால அளவு தெசைக்கு தெசை வித்தியாசமானவை ஆகும். சாதாரணமாக குரு தெசை 16 வருடங்கள் நடைபெறும். இதே நேரம் சூரிய தெசை முதல் சுக்கிர தெசை வரையுள்ள தெசா புத்திக் காலங்களில் குரு பகவானுக்குரிய கால அளவினை அறிந்திருப்பது நன்மை பயக்கும்.

சூரிய தெசையில் குரு புத்தி - 00 வருடம் 09 மாதம் 18 நாள்

சந்திர தெசையில் குரு புத்தி - 01 வருடம் 04 மாதம் 00 நாள்

செவ்வாய் தெசையில் குரு புத்தி - 00 வருடம் 11 மாதம் 06 நாள்

ராகு தெசையில் குரு புத்தி - 02 வருடம் 04 மாதம் 24 நாள்

குரு தெசையில் குரு புத்தி - 02 வருடம் 01 மாதம் 18 நாள்

சனி தெசையில் குரு புத்தி - 02 வருடம் 06 மாதம் 12 நாள்

புதன் தெசையில் குரு புத்தி - 02 வருடம் 03 மாதம் 06 நாள்

கேது தெசையில் குரு புத்தி - 00 வருடம் 11 மாதம் 06 நாள்

சுக்கிர தெசையில் குரு புத்தி - 02 வருடம் 08 மாதம் 00 நாள்

மொத்தம் 16 வருடங்கள் கணக்கிட்டு தரப்பட்டுள்ளது.

இவற்றினை ஆதாரமாகக் கொண்டு பார்க்குமிடத்தில் சூரிய தெசையில் குரு புத்தியும், சந்திர தெசையில் குரு புத்தியும் ராகுதெசையில் குரு புத்தியும், குரு தெசையில் குரு புத்தியும், சனி தெசையில் குரு புத்தியும், புதன் தெசையில் குரு புத்தியும், கேது தெசையில் குரு புத்தியும், சுக்கிர தெசையில் குரு புத்தியும், ஆகிய எட்டுப் புத்திகளிலும், குரு பகவான் நற்பலன்களை சாதகர்களுக்கு அளிப்பார். இதே நேரம் செவ்வாய் தெசையில் குரு புத்திக் காலம் மட்டும் சாதகர்களுக்கு திருப்தியற்ற பாதிப்பான பலன்களை அளிக்கும்.

### குருவின் வக்கிர நிலை.

நவக்கிரக நிலைகளை நோக்குமிடத்து சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, கேது, இவை நீங்கலாய் ஏனைய கிரகங்களுக்கு வக்கிர கதி உண்டு. குரு நின்ற ஸ்தானத்திலிருந்து 5 ஆம் இராசியில் சூரியன் சஞ்சரிக்கும் போது குரு பகவானின் வக்கிர கதி காலமாகும். இந்த வக்கிர நிலை காலத்தில் குருவானது தனது ஸ்தானமாகிய தனு, மீனம் நிலைகளுக்கு எத்தகைய பலன்களைத் தருவாரோ அத்தகைய பலன்களையே வக்கிரகதி நிலையிலும் தருவார். சோதிட நூல்களில் குரு பகவானுக்கு வக்கிர கதியின் போது நற்பலன்களை அள்ளித்தரும் சக்தி இல்லை. என்றே கொள்ளப்படுகின்றது.

### குரு சுப ஓரை.

பஞ்சாங்களில் காலவோரை என்ற வகுதி தரப்பட்டுள்ளது. ராகு கேது தவிர ஏனைய ஏழு கிரகங்களும் மாறி மாறி ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை தினமும் வருவதை ஓரை எனச் சொல்லப்படுகின்றது. குரு சுபக்கிரகம் ஆகும். குரு ஓரை நற்பலன் பெறச்செய்யும் காலை 6 மணியிலிருந்து மறுநாள் காலை 6 மணிக்கு இடைப்பட்ட 24 மணி நேர கால எல்லையில் ஒரு கிரகம் 3 அல்லது 4 தடவையில் தனது ஓரை நிலையைப் பெறும். எந்த நாளை நாம் பார்க்கின்றோமோ அந்த நாளில் அவனுடைய ஓரை ஆரம்பமாகும். சாதாரணமாய் ஞாயிறு எனின் சூரியன் ஓரை ஆரம்பிக்கும் இவ்வாறு சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன், சனி, குரு, செவ்வாய், ஏழு கிரக ஓரையும் மாறி மாறி தினமும் வந்த வண்ணம் அமையப்பெறும்.

"நல்ல மனிதர்களால் செய்யத்தவறியதை நல்ல ஓரை செய்யும்."

"சீரைத்தேடின் நல் ஓரையைத் தேடு"

"ஓரை அறிந்து கருமம் ஆற்றினால் ஒப்பற்ற நிலை தரும்"

இவ்வாறு சோதிட மொழியில் ஓரை பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இதை விட குரு வளையம் என அறியப்படும் குரு வட்டமும் இராசி நிலைகளைப் பெறுத்து நல்ல பலன்களை அளிக்கும்.

### குரு வட்டம் அல்லது குரு வளையம்.

ஒருவருடைய பிறப்பு கிரக நிலைகளில் இடபம், சிங்கம், தனு, கும்பம், ஆகிய நான்கு இராசிகளில் ஏதாவதொரு இராசியில் குரு இருக்கப்பிறந்தவர்கள் இந்த குரு வளைய ஆதிக்கத்திற்கு உட்பட்டவராகின்றார். அப்படிப்பட்டவர்கள் நல்ல பாக்கியமான பலன்களைப் பெறுவார்கள். கஸ்டம், நஷ்டம், மாறிமாறி வந்தாலும் நல்ல பொருள் வளம், உயர்மதிப்பு, புகழ், கௌரவம் என்ற அந்தஸ்தை அடைந்தே தீருவார்கள். எனவே உங்கள் சாதக கிரக அமைப்பில் குரு பகவான் எங்கு இருக்கின்றார் என்பதை அறிந்து குரு வளையத்திற்கு நீங்கள் உட்பட்டிருக்கிறீர்களா? என்பதை நீங்களே முடிவு செய்யலாம். மேலும் குரு தெசைக்காலத்தில் ஒவ்வொரு புத்தியிலும் செய்யக் கூடிய சாந்தி பரிகாரத்தையும், அறிந்து வைத்துக் கொண்டு அதனைச் செய்து முடிப்பதும் முக்கியமானதொன்றாகும். அத்துடன் 12 இராசிநிலைகளில் ஒருவரது கிரக அமைப்பில் குரு பகவான் ஏதாவது ஒரு இடத்தை நிச்சயம் பெற்றிருப்பார். இந்த 12 நிலைக்குரிய பலன்களை பொதுவில் எவ்வாறு அமையும் என்பதை சோதிடம் பார்க்கும் பொது சந்தர்ப்ப வேளையில் சோதிடர் அறியத் தருவார். இதை விட கோசரரீதியாக 12 இராசிகளிலும் வருடத்திற்கு ஒரு முறை மாற்றம் பெற்று அமர்வதையே நாம் வியாழ மாற்றம் என அறிய வேண்டும். அக்கால முனிவர்களால் உரைக்கப்பட்ட பாடல்களில் ஒன்று இங்கு தரப்படுகின்றது. மிக எளிதாக கருத்தறிந்து தெளிவு பெறுங்கள்.

**ஜென்ம இராமர் வனத்தில் சீதையை வைத்தும்**

தீதிலாதொரு மூன்றிலே துரியோதனன் படை மாண்டதும்

இன்மை எட்டினில் வாலிபட்டமிழந்து போம்படியானதும்

ஈசனாரொரு பத்தில் தலையோட்டிலே இரந்துண்டதும்

தர்மபுத்திரர் நாலிலே வனவாசம் போம்படியான்தும்

வன்மையுற்றிட இராவணன்முடி பன்னிரண்டின் வீழ்ந்ததும்

மண்ணுமா குரு சாரி மாமனை வாழ்விலாகாதுறு என்பவே.

இதை விட மாவலிச்சக்கரவர்த்தி ஆறிலே சிறைக்கூடம் சென்றார் எனவும் வேறொரு பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள வியாழமாற்றம் பற்றிய பலாபலன்களை தொடர்ந்து வாரா வாரம் இராசிகள் வாரியாக அறியத் தருவோம்.

### குருபகவானால் காணப்படும் யோகங்கள்.

01. கெஜகேசரியோகம்: சந்திரனுக்கு 1, 4, 7, 10 ஆம் நிலையில் குரு இருத்தல். அல்லது குருவுக்கு 1, 4, 7, 10 ஆம் நிலையில் சந்திரன் இருத்தல்.
02. ஹம்சயோகம்: லக்கினத்திற்கும் கேந்திரத்திற்கும் குரு இருத்தல் அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் குரு இருத்தல்.
03. அஷ்டலஷ்மி யோகம்: குரு ராகு சேர்ந்திருத்தல், அல்லது குரு பார்வையை ராகு பெற்றிருத்தல்.
04. அகண்ட சாம்ராஜ்ய யோகம்: 2, 9, 11 ஆம் வீட்டுக்குரிய கிரகம் ஆட்சி உச்சம் பெறுவதுடன் குரு 5 அல்லது 10 ஆம் வீட்டுக்கு அதிபதியாகிய கேந்திர நிலையில் இருப்பது இந்த யோகம் தரும்.
05. குரு சண்டாள யோகம்: ராகு, கேது சனி கிரக சேர்க்கையை குருபகவான் பெறுவது இந்த நிலை தரும்.
06. குரு சந்திரயோகம்: குரு சந்திரன் சேர்ந்திருத்தல்.
07. குரு மங்கள யோகம்: குரு செவ்வாய் சேர்ந்திருத்தல் அல்லது குருவுக்கு 1, 4, 7, 10 ஆம் நிலை கேந்திரத்தில் செவ்வாய் இருப்பின் இந்த யோகம் தரும்.
08. குபேர யோகம்: குரு சனி சேர்ந்திருத்தல் அல்லது குரு சனியைப் பார்வை செய்தல் கேந்திர நிலை இருப்பின் மிகவும் சிறப்பு.
09. விவாக யோகம்: சனி பார்வை பெற்ற குரு அமைப்பு அல்லது சனி பார்வை பெற்ற குரு சுக்கிரன் சேர்க்கை.
10. புத்திர யோகம்: குரு 5 ஆம் நிலையில் தனித்து இல்லாமலிருத்தல், அல்லது குரு 10 ஆம் நிலையில் தனித்து இல்லாமலிருத்தல், சுபக்கிரக சேர்க்கை, சுபக்கிரக பார்வை புத்திர பாக்கியம் தரும்.

### இவ் வாரம் சுபநாள் நேரம்.

(17.07.2016 முதல் 23.07.2016 வரை)

### வாக்கிய பஞ்சாங்கம்.

- கிழக்கு வாசல், மேற்கு வாசல், மனைகளுக்கு கட்டுவதற்கு மட்டும்.
  20.07.2016 புதன் கிழமை பகல் 9.59 முதல் 11.45 வரை.
  21.07.2016 வியாழக் கிழமை பகல் 9.55 முதல் 11.41 வரை.
- விவாகத்திற்கு, விவாகப்பதிவுக்கு, பொன்னுருக்கலுக்கு, விவாக நிச்சயார்த்தம் செய்வதற்கு நாள் இல்லை.
- காதுகுத்துதல், அன்னப்பிராசனம் (சோறு தீற்றுதல்)
  20.07.2016 புதன் கிழமை பகல் 9.59 முதல் 11.45 வரை.
  21.07.2016 வியாழக் கிழமை பகல் 9.55 முதல் 11.41 வரை.
  வியாழக் கிழமை பகல் 11.53 முதல் 01.27 வரை.
- வியாபாரம் செய்தல், புதுக்கணக்கு பதிதல், ஸ்தாபனம் திறத்தல்.
  21.07.2016 வியாழக் கிழமை பகல் 11.53 முதல் 01.27 வரை.

### திருக்கணித பஞ்சாங்கம்.

- கிழக்கு வாசல் மனைகளுக்கு மட்டும் கட்டுவதற்கு 20, 21 ஆம் திகதிகள் மேலே காட்டிய நேரத்தை கடைப்பிடிக்கலாம்.
- விவாகம் தொடர்பான கருமங்கள் எதுவும் இல்லை.
- காது குத்துதல் 20.07.2016 புதன்கிழமை காலை 6.45 முதல் 7.50 வரை
- அன்னப்பிராசனம் 21.07.2016 வியாழக் கிழமை காலை 6.30 முதல் 7.45 வரை
- வியாபாரம் தொடர்பானவை 21.07.2016 வியாழக்கிழமை காலை 6.30 முதல் 7.45 வரை.

### சிரார்த்தம்.

தமிழுக்கு ஆடி மாதம் பூர்வபக்கம் துவாதசி, திரயோதசி திதிகள் இரண்டும் ஆடி அமாவாசைக்கு பின்னர் வருவதை கைக்கொள்ளவும்.

### இவ் வார சந்திராஸ்டமம்.

மேட ராசி 17 ஆம் திகதி.
இடப ராசி 18,19 ஆம் திகதிகள்.
மிதுன ராசி 20,21 ஆம் திகதிகள்.
கடக ராசி 22,23 ஆம் திகதிகள்.

ஏனைய இராசிகளுக்கு இவ் வாரம் சந்திராஸ்டமம் இல்லை.

இந்த சந்திராஸ்டம நாட்களில் நோய், பிணி, துன்பம், துயரம், கஷ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்பு, நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

### வாரம் ஒரு தகவல்

மங்கையர் கவனிக்க வேண்டியவை.

- பூஜை அறை, சமயலறை, சாப்பாட்டு இடம் நாள்தோறும் கூட்டித் தண்ணீரால் சுத்தம் செய்ய வேண்டும்.
- மண் பாண்டங்களை குளிக்கும் முன்பு தொடக் கூடாது.
- தாமிரப் பாத்திரங்களை புளியினாலும், வெண்கலம்பித்தளைப் பாத்திரங்களை சாம்பலினாலும் ஈயப்பாத்திரங்களை சாணத்தினாலும் எவர்சில்வர், பீங்கான், பாத்திரங்களை அரப்புப் பொடியினாலும் சுத்தம் செய்ய வேண்டும்.
- அமாவாசை, பௌர்ணமி, கார்த்திகை, மாதப்பிறப்பு, வெள்ளிக்கிழமை, பிற விஷேச தினங்களில் வீடு முழுவதும் கழுவ வேண்டும்.
- குளித்த பின்பு குடிப்பதற்கான நீரை எடுக்க வேண்டும். தண்ணீர் குடத்தை இடுப்பில் வைத்துவர வேண்டும். தோளிலும், தலையிலும் சுமக்கக் கூடாது.

கந்தையா
சோதிதாசன்
drsothithas@gmail.com.
0776284687





# வைத்தியரிடம் கேளுங்கள்

**எனது குழந்தைக்கு 6 மாதம் ஆகின்றது நான் எப்பொது பால் கொடுப்பதை நிறுத்த வேண்டும்?**

**சிவராசா (40), உடுவில்**

**கேள்வி:** சமீபகாலமாக மலச்சிக்கலினால் அவதிப்படுகின்றேன். இதற்கு பாவிக்கக்கூடிய மருந்து சொல்வீர்களா?

**பதில்:** கடுக்காய்ததூள் 15 கிராம், கராம் புத்தூள் 15 கிராம், எடுத்து சுடுநீரில் அவித்து காலையில் பருக 4,5 தடவை பேதியாகும். தொடர்ந்து மலச்சிக்கல் ஏற்படாதிருக்க திரிபலாகுளிசையை தினமும் இரவில் 2 வீதம் பாவித்து வாருங்கள்.

**வாரித்தம்பி (55), கொக்குவில்**

**கேள்வி:** எனக்கு இரத்த அழுத்தம் இருக்கிறது. இரத்தத்தமளிகளில் கொழுப்பு படிவுகளை நீங்கக் கூடியதும், உணவு சாதாரணமாக சேர்க்கக்கூடிய மூலிகைகள் பற்றிக் குறிப்பிடுவீர்களா?

**பதில்:** இஞ்சி, உள்ளி, எலுமிச்சை, போன்ற சமையலுக்கு பயன்படுத்தப்படும் மூலிகை உணவுகள் இரத்தநாளங்களில் கொழுப்புப் படிவதைத் தடுக்கும் ஆற்றல் உடையது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இஞ்சி, உள்ளி என்பவற்றை துவையல், சம்பல் போன்றவற்றில் சேர்த்துப் பயன்படுத்தலாம். இஞ்சியை தேனில் ஊறவைத்து காலையில் 5 கிராம் அளவில் எடுத்து வரலாம்.எலுமிச்சைப் பானத்தை நீராகாரமாக அருந்தலாம்.

**கண்ணன் (39), அரியாலை**

**கேள்வி:** காலையில் நித்திரை விட்டு எழுந்து நடக்கும் போது பாதங்களில் வலி ஏற்படுகின்றது. காலில் சிறிதளவு வீக்கம் ஏற்படுகின்றது. என்ன செய்யலாம்?

**பதில்:** இதைக் குதிபாதம் எனச் சொல்லுவதுண்டு. நாராயண தைலம் மாஷாத் தைலம், என்பவற்றை வெளிப்பூச்சாகப் பயன்படுத்தலாம். ஆமணக்கு இலை, நொச்சி இலை, சதைகுப்பை, எலுமிச்சை ஆகியவற்றை சட்டியில் வறுத்து அதை வைத்து ஒத்தடம் கொடுக்க வேண்டும். யோகராஜா குக்குலு எனும் மருந்தை சித்தாரத்தை காசாயத்தை எடுக்கலாம். முடக்கத்தான் இரசமும் மிகவும் நல்லது.

**தில்லைநாதன் (42), நீராவியடி.**

**கேள்வி:** எனக்கு இலேசாகத் தொப்பை விழுகின்றது. யோகாசனம் நல்லது என்கின்றார்கள் எத்தகைய ஆசனங்கள் பலன் அளிக்கும்?

**பதில்:** சூரிய நமஸ்காரம், பஞ்சிமோஸ்த்தாசனம், தனுராசனம், புஜங்காசனம், போன்றவை தொப்பையைக் குறைப்பதற்கு உதவும். ஒரு யோகாசாசிரியரிடம் கற்ற பின் செய்வதே சிறந்தது.

**மதிவதனி (34), கொழும்புத்துறை**

**கேள்வி:** எனது குழந்தைக்கு 6 மாதம் ஆகின்றது நான் எப்பொது பால் கொடுப்பதை நிறுத்த வேண்டும்?

**பதில்:** குழந்தைக்கு மிகச் சிறந்த உணவே தாய்ப் பால் இதனைத் தாராளமாகக் கொடுக்கலாம். குழந்தைக்கு 6 மாதம் ஆகிற போது தாய்ப்பால் மட்டுமே போதுமானதாக இருக்காது. எனவே திட உணவுகளைக் கொடுக்க ஆரம்பிக்கலாம். திட உணவு பழகிய பின் குழந்தை தாய்ப்பாலை அருந்துவதைக்குறைத்து விடும். ஒன்றரை வயதில் நீங்கள் தாய்ப்பாலை நிறுத்தலாம். வேறு காரணங்கள் எதுவும் இல்லையாயின் ஒரு வயது வரையாவது தாய்ப்பால் கொடுப்பது சிறந்தது.


**சாளினி (22), ஈச்சமோட்டை**

**கேள்வி:** எனக்கு பீனிசம் இருக்கிறது இதனால் மூக்கடைப்பு ஏற்படுகிறது இதற்கு என்ன சிகிச்சை?


**பதில்:** பீனிசம், ஒவ்வாமை, குளிரான காலநிலை தோன்ற காரணங்களால் மூக்கடைப்பு ஏற்படுகின்றது. இதை நீக்குவதற்குப் பல வழிகள் உண்டு. ஆவி பிடித்தல், ஆவிபிடிப்பதன் மூலம் முக்கடைப்பிலிருந்து விடுபடலாம். எலுமிச்சை இலை, துளசி இலை ஆகியவற்றை அவித்து ஆவிபிடிக்கலாம். இதை விட இஞ்சி தேனீர் குடிப்பதன் மூலம் மூக்கடைப்பிலிருந்து விடுபடலாம் . சுடு நீரில் குளிப்பதாலும் இது நிவர்த்தி ஆகின்றது. ஒரு டம்லர் நீரில் ஒரு தேக்கரண்டி உப்புக் கலந்து அதில் சில துளிகள் மூக்கில் விட மூக்கடைப்பு நீங்கும். ●












## மக்கள் குரல்

அம்பாறையின் ஒலுவில் பகுதி கடலரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அட்டாளைசேனை பிரதேசத்தில் உள்ள இந்த கிராமம் நீண்டகாலமாகவே கடலரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடலரிப்பால் இதுவரை நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் காணாமல் போய் விட்டது.

கட்டடங்கள், தென்னைகள் என பல காணாமல் போய் விட்டன. கடலரிப்பால் கண்முன்னாலேயே கடல் ஊருக்குள் வந்து கொண்டிருப்பதை பார்த்து ஒன்றும் செய்ய முடியாமல் கையை பிசைந்து கொண்டிருக்கிறார்கள் மக்கள்.

ஒரு தேசிய அபாயமாக உருவெடுத்துள்ள ஒலுவில் கடலரிப்பை தடுக்க தேசிய வேலைத்திட்டமே அவசியம். கிழக்கு மாகாணசபையும், மத்திய அரசும் இணைந்து அதனை முன்னெடுக்க வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு.




# குழந்தைப் போராளி

நான் சிறிது தனியாகச் சென்று யோசிக்க வேண்டியிருந்தது. அவர் எனது உண்மையான தாயில்லை என்பதை ஏற்றுக் கொள்ளும் போது அவரின் கோபச் செயல்களும் மூர்க்கமும் என் நினைவில் வந்து போயின. எனது இதயத்தில் தாய் என்பதை மாற்றி வளர்ப்புத் தாய் எனப் பதித்துக்கொண்டேன். இரண்டு நாட்கள் கழிந்து இன்னுமொரு சகோதரியும் வந்து சேர்ந்தாள். இவள் எனக்கு மூத்தவள். அவளின் பெயர் அனெற். எனது தந்தைக்கும் நயின்டோவின் அம்மாவிற்கும் பிறந்தவள் தான் இந்த அக்கா. இவளும் எனது இதயத்தில் ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டாள். மற்றைய எனது சகோதரிகளுக்கு சகோதரி கிறேஸைத் தவிர அனெற் ஒரு வேண்டப்படாதவள். கிறேஸ் அமைதியும், மிக மன உறுதியும் கொண்டவள். யாராவது நியாயத்திற்குப் புறம்பாக நடந்து கொண்டால் மிகத் தீவிரமாகத் தனது எதிர்ப்பைத் தெரிவிப்பாள். மற்றச் சகோதரிகளின் கூட்டான நடவடிக்கைக ளுக்கு எதிராக என்னால் எதுவும் செய்ய முடியவில்ல. ஏன் அனெற்றை அவர்கள் துன்புறுத்துகிறார்கள் என என்னால் சரிவரப் புரிந்து கொள்ள முடியாதிருந்தது. ஒவ்வொரு நாளையும் அனெற் அழுகையிலேயே வாழ்ந்தாள். நானோ ஒன்றும் செய்யமுடியாது தவிக்க வேண்டியிருந்தது. எங்களைக் கவனித்துக் கொண்ட செவிலித்தாய் மேரி அனெற்றுக்கு ஆறுதல் சொல்வது என் மனதிற்குச் சற்றே நிம்மதியைக் கொடுத்தது.

எனது புதிய உலகம் எனக்குப் பிடித்திருந்தது. குறிப்பாக எனது சகோதரனுடன் நல்ல உறவைக் கொண்டிருந்தேன். எனது சகோதரிகள் தங்கள் பாடசாலை விடுதிகளுக்குத் திரும்பிச் செல்ல நான் சகோதரன் ரிச்சட்டுடன் அவன் படித்துக்கொண்டிருந்த பாடசாலையில் முதலாம் வகுப்பை ஆரம்பித்தேன். அங்கு ரிச்சட் என்னை 'பேபி' என்று மற்றவர்களுக்கும் சொல்லி வைக்க பிரச்சினைகள் உருவாகி, என்னை 'பேபி' என்பவர்களுடன் சண்டை பிடித்து அநேகமாக ஒவ்வொரு நாளும் கீறல்களுடனும் காயங்களுடனும் நான் வீடு திரும்ப வேண்டியிருந்தது.



நானும் சகோதரனும் தனியாக நகர வீட்டில் விடப்பட்டிருந்தோம். செவிலித் தாயார் மேரி எங்களை அன்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார். திடீரென அப்பா தன் மனைவியுடனும் அவரின் குழந்தைகளுடனும்வந்துசேர்ந்தார்.இப்போது இன்னுமொரு ஆண்குழந்தை புதிதாக வந்திருந்தது. பாடசாலை முடிந்ததும் புதிய சகோதரனைப் பார்துக்கொள்ளும் வேலை என் தலைமேல் விழுந்தது. விளையாடவோ சண்டையிடவோ நேரமில்லாது போயிற்று. எனக்கு வந்த கோபத்தில் சிறியவனை எங்காவது தொலைத்துவிட வேண்டும் போலிருந்தது. நான் குழந்தையைப் பார்த்துக் கொள்ள முடியாததற்குச் சாட்டுகளை யோசிக்கத் தொடங்கினேன்.

ஒருநாள் குழந்தையுடன் வீட்டிற்குவெளியே உட்கார்ந்திருந்தேன் மற்றக் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். எனக்கு விளையாட முடியவில்லயே என்ற ஆத்திரம்! சின்னவனின் பெருவிரலைப் பிடித்துக் கிள்ளினேன். அவன் வீறிட்டு அழத் தொடங்க எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது. கிள்ளிய அடையாளம் தெரிந்து விடுமோ? அவனது அம்மா வெளியே வந்து பார்ப்பாரோ? மறுபக்கத்தில் அவள் வெளியே வந்து பார்த்துக் குழந்தையை வாங்கிக் கொண்டால் நான் விளையாடப் போகலாம். இரண்டும் நடக்கவில்லை. இம்முறை குண்டிப்பகுதியில் ஒருதரம் கிள்ளக் குழந்தை மீண்டும் அழத் தாயார் வந்து வாங்கிக்கொண்டார். என்னிலும் ஒருபடி அவர் மேலே போய் என்னைக் குழந்தையின் சாணத்துண்டுகளைத் துவைக்கும்படி சொல்லிவிட்டார். எல்லாக் குழந்தைகளும் என்னக் கேலி பண்ணிச் சிரித்தார்கள். இது என்னை மேலும் ஆத்திரமூட்டியது. நான் அவர்கள் எல்லோரையும் வெறுத்ததுடன் ஒரு சின்ன விடயத்திற்கும் மூர்க்கத்தோடு அவர்களுடன் அடிதடியில் இறங்கத் தொடங்கினேன்.


ஒருநாள் சாணத்துண்டுகளைத் துவைத்துக் கொண்டிருக்கும்போது காய்ந்த மலம் கருகப்பொரித்த முட்டைத்துகள்கள் போல எனக்குப் பட்டது. அதில் சிறிதளவு எடுத்துச் சென்று உப்புத்தூவி எனது சகோதரர்கள் இம்மனுவேலுக்கும் ரேய்க்கும் கொடுத்தேன். அவர்கள் இன்னும் வேண்டுமெனக் கேட்க எனது சிரிப்பை அடக்க முடியாது தொடர்ந்து சிரித்துக்கொண்டே நாளைவரைக் காத்திருக்கவேண்டுமெனக் கூறினேன்.

எல்லவற்றிற்கும் மேலாக எனது சகோதரிகள் தங்கள் பாடசாலை விடுதிகளிலிருந்து திரும்பி வந்து எனது வேலையைப் பொறுப்பெடுத்துக்கொள்ள வேண்டுமென்பது எனது ஆசை. அதற்கு இன்னும் சில வாரங்கள் நான் பொறுத்திருக்க வேண்டியிருந்தது.

அப்பாவின் மனைவி தான் சுகயீனமாக இருக்கிறாரெனப் பாசாங்கு செய்து கொண்டு கட்டிலிலேயே காலத்தைக் கழிப்பார். அல்லது அப்பாவைத் தூண்டிவிட்டு அவரது பெண்களுக்கு உதை கிடைக்கும்படி செய்வாள். அனேற்றும் கிறேசும் நல்ல நண்பிகளாகவும் எல்லா நேரமும் ஒன்றாகவே இருந்ததற்கும் இது கூடக் காரணமாயிருக்கலாம். ஒரு சனிக்கிழமை காலையில் அவர்கள் இருவரும் காணாமற் போனார்கள். காத்திருந்துவிட்டு அப்பாவும் அவர்களைத் தேடிப் போனார். அவர்கள் திரும்பி வரவேயில்லை. இப்போதாவது அப்பாவின் கண்கள் திறந்துகொள்ள வேண்டுமென நான் மனதார விரும்பினேன். அவரின் மனைவியின் உண்மையான சொரூபத்தை அவர் கண்டறிய இதுவே பொருத்தமான நேரமாக எனக்குப்பட்டது.

(தொடரும்)





► கரணவாய் மூத்தவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் வெகு சிறப்பாக நடந்தது.

# தென்னை மயிர்க்கொட்டியும், அதனைக் கட்டுப்படுத்தலும்.

ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



தென்னை மயிர்க்கொட்டியும்,
அதனைக் கட்டுப்படுத்தலும்.
விஞ்ஞானப் பெயர் :
Opisina arenasella walker



இவ் தென்னை மயிர்க்கொட்டியானது "நெபன்ரிஸ் செரினோபா" என முன்பு அழைக்கப்பட்டும். தற்சமயம் இவ் மயிர்க் கொட்டியினை "ஒபிசினா அரினோசெல்லா" எனவும் அழைப்பார். இது தென்னையைத் தாக்கும் உக்கிரமான பீடை ஆகும். இப் பீடை வரண்ட வலயத்திலும், இந் நாட்டின் தென்னை வளரும் பிரதேசங்களிலும் பரவிக் காணப்படுகின்றது.

குறிப்பாக பெப்ரவரி தொடக்கம் ஒக்டோபர் மாதங்களுக்கிடையில் இதன் திடீர் பரவுகை நிகழ்கின்றது. இதனால் ஏற்படும் பரந்த ஓலைச் சேதத்தினால் விளைச்சலில் இழப்பினை ஏற்படுத்துகின்றது.

**சேதத்தின் தன்மையும் இனம் காணலும்.**

- சிற்றோலைகளில் காணப்படும் காய்ந்த பகுதி மூலம் தாக்கப்பட்ட மரங்களை இலகுவில் அடையாளம் காணலாம். சிற்றோலையின் கீழ்ப்புறத்தில் காணப் படும் அறை போன்ற அமைப்புக்குள் குடம்பி அல்லது மயிர்க் கொட்டிகள் காணப்படும் இவ் குழாய் போன்ற அறைக ளானது குடம்பியினால் வெளியேற்றப் படும் சிற்றிலை இழைய சிறு துண்டுகளினால் உருவாக்கப்பட்டு அதனுள் குடம்பிகள் பாதுகாப்பாகஇருந்து சிற்றிலைகளின் கீழ்ப்பக்க இழையங்களை அரித்து உணவாக உட்கொள்கின்றன. ஒவ்வொரு பருவத்திலுள்ள குடம்பிகளும், கூட்டுப்புழுக்களும் மற்றும் வளர்ந்த அத்துப் பூச்சிகளும் கூட சிற்றோலையில் காணப்படும்.
- தனி ஒரு சிற்றோலையில் அதிகளவான மயிர்க்கொட்டிகள் உணவு உண்ணும் போது சிற்றோலைகள் முழுவதும் குழாய் போன்ற அறைகளால் மூடப்பட்ட நிலையிலிருக்கும்.
- முழு சிற்றோலையும் நரைநிறம் கலந்த கபிலமாகின்றது. பாரதூரமான தாக்கத்தின் போது இளம் காய்களுக்குத் தாக்கப்பட்டு அறைகள் போன்று காயின் மேற்பரப்பிலும் காணப்படும்.
- முதிர்ந்த அந்துக்கள் 12 மி.மீ நீளமும், சாம்பல் நரை நிறமும் கொண்டன. இவை முட்டையிட்டுப் பொரிக்கும். மயிர்க் கொட்டிகள் இளம் நிலைகளில் வெள்ளை நிற உடம்பும், கடும் கபில நிறத்தினையும் கொண்டிருக்கும்.
- குடம்பி பின்பு, ஓய்வு நிலைக்கு (கூட்டுப்புழு) மாறி அவற்றில் இருந்து அந்துக்கள் வெளிவருகின்றன.
- இதன் வாழ்க்கை வட்டம் 2 - 21/2 மாதகாலமாகும்.
- தென்னோலைக்கு சேதம் விளைவிப்பது புழுப் போன்ற குடம்பிகளாகும்.
- இம்மயிர்க் கொட்டி 30-40 நாட்களின் பின்னர் கூட்டுப்புழுவாக விருத்தியடை கின்றது.
- இக் கூட்டுப்புழு பருவத்தினை புழுக் கூட்டுக்குள்ளேயே 14 - 21 நாட்களுக்கு நீடித்திருக்கின்றது.
- இதன் நிறைவுடலி 7 நாட்கள் வரை வாழும்.
- இதன் முழுமையான வாழ்க்கைச் சக்கரம் 2-21/2 மாதங்களாகும்.

வேறு ஒட்டுண்ணிகளும் உண்டு. இம்முறை யால் தென்னை மயிர்க் கொட்டியின் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம்.

- இந்த ஒட்டுண்ணிகளை தென்னை ஆராட்சி நிலையம் லுணுவில இல் இருந்து தபால் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.
- இவ்விடங்களிலுள்ள பீடை மட்டத்தினை மதிப்பிட்ட பின்னர் மாத்திரமே இரை கௌவிகள் வழங்கப்படும்.

**இரை கௌவிகளை தொற்றுக்குள்ளான மரங்களுக்கு அருகில் விட வேண்டும்.**

குடம்பி ஒட்டுண்ணி பிரகன் ஹிபேடர் எரிபோரஸ்

கூட்டுப்புழு ஒட்டுண்ணி பிரக்கிமேரியா நெபன்ரிடிஸ்

ஒட்டுண்ணிப் பூச்சிகள் சோதனைக் குழாய்க்குள் அடைக்கப்பட்டு தபால் மூலம் உரியவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

**ஒட்டுண்ணிகளை மயிர்க்கொட்டி தாக்கமுள்ள இடத்திற்கு விடுவித்தல்.**

1. ஒட்டுண்ணிகள் கூடியளவு விரைவில் விடுவிக்கப்படல் வேண்டும்.
2. மரம் ஏறுபவர் மரத்தின் வட்டுப்பகுதிக்கு குழாய்களைக் கொண்டு சென்று குழாயின் அடைப்பானை அகற்றி குழாயை ஓர் அளவுசரிக்கப்பட்டுஓலை அடிப்பகுதியில் அரைவாசி பூச்சிகள் விழுமாறு குழாய் கட்டுப்படல் வேண்டும். அப்போது ஒட்டுண்ணி பீடையைத் தேடிப்பறந்து செல்லும். பின்பு குழாய் மூடப்பட்டு எஞ்சியுள்ள ஒட்டுண்ணிகளை வேறு மரத்தில் விடுவிக்கப்பட வேண்டும்.
3. ஒட்டுண்ணிகள் ஒரு மரத்தில் இருந்து மற்றைய மரத்திற்கு பறந்து செல்லும் இயல்பு இருப்பதனால் பீடைகள் தாக்கப் பட்ட முழுப்பரப்பிலும் தெரிவு செய்யப் பட்ட மரங்களுக்கு விடுவிக்கப்பட வேண்டும். மரத்திற்கு மரம் அதிகளவு இடைவெளி இருத்தல் வெண்டும்.
4. மேலும் அனுப்பப்பட்ட ஒட்டுண்ணிகள் பெறப்பட்டவுடன் முன்னர் ஒட்டுண் ணிகள் விடுவிக்கப்படாத மரங்களில் விடுபட வேண்டும்.
5. வெற்றுச் சோதனைக் குழாய்களை அடைப்பானுடன் தென்னை ஆராய்ச்சி நிலையம் லுணுவில இற்கு உடனடியாக திருப்பி அனுப்ப வேண்டும்.
6. ஒட்டுண்ணிகள் விடுபட்ட பின்பும் இரவில் தோட்டத்தில் நெருப்பு எரித்தல் கூடாது.

**தென்னை மயிர்க்கொட்டியின் வாழ்க்கை வட்டம். பண்பாட்டு முறையில் கட்டுப்படுத்தல்.**

குறைந்த குடித்தொகை மட்டத்தில் இப் பீடை இயற்கை எதிரிகளின் தாக்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இருப்பினும் ஒக்டோபரிலிருந்து பெப்பரவரி வரை பரம்பிக் காணப்படும். குறைந்த இரவு வெப்பநிலைகள் பிந்திய காலங்களில் இயற்கை எதிரிகளின் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லவும் இயற்கை சமநிலைகளைக் குழப்பவும் பொருத்தமற்றதாகவும் இருக்கின்றது. இதனால் ஏற்படும் திடீர் பரவுகையினைத் தடுப்பதற்கு ஆரம்ப நிலையிலே இந் நோயினை இனங்காணுதல் வேண்டும்.

அ) பாதிப்பு மட்டம் குறைவாக இருந்தால் (30 மரங்களுக்குக் குறைவாகப் பாதிக்கப்பட்டால்) பாதிக்கப்பட்ட தென்னோலைகள் 5 - 6 ஐ வெட்டி எரிக்கவும்.

**குறிப்பு:** 5 - 6 தென்னோலைகளுக்கு மேல் வெட்டக் கூடாது. நிறைவுடலிகள் தென்னோலைகளில் இருந்தால் தென் னோலைகளை 2 கிழமையின் பின்னரே வெட்ட வேண்டும்.

ஆ) பெருமளவுஎண்ணிக்கையான மரங்கள் தொற்றுக்குள்ளாக்கப்பட்டிருந்தால், இப் பீடையினைக் கட்டுப்படுத்த ஆய்வுகூடத்தில் இனப்பெருக்கம் செய்யப்பட்ட இரை கௌவிகளை தொடர்ச்சியாக வெளியிட வேண்டும்.

**கட்டுப்பாட்டு முறைகள்.**


ஆரம்ப நிலையில் பாதிக்கப்பட்ட ஓலை களை வெட்டி எடுத்துவிடவும். மாலையில் நெருப்பு மூட்டி எரியவிட்டால், வெளிச்சத்தினால் கவரப்பட்டு அந்துக்கள் நெருப்பில் விழுந்து அழிந்துவிடும்.

**இரசாயனக் கட்டுப்பாடு.**

- 20 தென்னோலைகளுக்குக் கூட இம்மயிர்க் கொட்டி காணப்பட்டால் உடன் "உயிர்ப்புள்ள பூச்சி நாசினியை" அதாவது மொனோகுரோட்டோபஸ் ஐ உபயோகிக்கலாம். தாக்கப்பட்ட ஒவ்வொரு மரத்திற்கும் 8 மில்லிலீற்றர் மொனோகுரோட்டோபஸ் பூச்சி நாசினியை மரத்தின் தண்டுப் பகுதியில் நிலமட்டத்திலிருந்து 10 செ.மீ மேலே $45^0$ சரிவில் துறப்பணத்தின உதவி கொண்டு ஒரு செ.மீ விட்டமுள்ளதும் 8 செ.மீ ஆழமுள்ளதுமான துவாரத்தினை ஏற்படுத்தி புனலின் உதவியுடன் அதனுள் விடவும் அல்லது 20 மார்சல் 4 மி.லீ உடன் ஒரு லீற்றர் நீர் கலந்து விசிறலாம்.
- 24 மணி நேரத்தின் பின்பு துவாரத் தினை சீமெந்து அல்லது தார் கொண்டு அடைக்கவும். 34 வாரத்தின் பின்பு, திரும்பவும் அவதானித்தால், மயிர்க் கொட்டிகள் காணப்படமாட்டாது. உயரமான மரங்களுக்கு பூச்சி நாசினியைத் தெளிக்க முடியாது. எனவே தான் உகந்த முறை இதுவாகும். தற்சமயம் மொனோகுரோட்டோபஸ் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் தென்னந் தோட்டங்களில் தென்னை மரத்தின் தண்டுக்கு உட்செலுத்துவதனைத் தவிர ஏனைய தேவைக்குப் பாவிக்கத் தடை செய்யப்பட்டுள்ளது.

**உயிரியல் கட்டுப்பாடு இரைகௌவிகளை தோட்டத்திலிருந்து விடுதல்.**

தென்னை மயிர்கொட்டிக்கு இயற்கை எதிரிகள் (ஒட்டுண்ணிகள்) அனேகம் உண்டு. சில ஒட்டுண்ணிகள் மயிர்க்கொட்டிகள் மேல் தங்கள் முட்டைகளை இடும், இவ் முட்டைகளில் இருந்து விருத்தி அடையும் இனம் மயிர்க்கொட்டியை உணவாக உட்கொண்டு அழிக்கின்றன. தென்னை மயிர்க் கொட்டியின் முட்டை, கூட்டுப்புழு நிலைகளை தாக்கும்.



திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com






# ஹென்னா

ஹியா டையைத் தொடவே மாட்டேன் என்று அடம் பிடிப்பவர்கள் ஹென்னா உபயோகிக்கலாம். ஆனால் ஹென்னாவை அப்படியே உபயோகித்தாலும் அடிக்கடி உபயோகித்தாலும் தலைமுடி வறண்டு கொட்டிவிடும்.

மருதாணியை அரைத்து நேரடியாகப் போடக் கூடாது. அதை பொடி செய்து அத்துடன் கெண்டிசனர் கலந்து உபயோகிப்பதே பாதுகாப்பானது.

ஹென்னா 250கிராம்

முட்டை 1(வெள்ளை மஞ்சள் கரு கலந்தது)

ஒலிவ் எண்ணெய் 2டிஸ்பூன்

கோப்பி அல்லது டீ சாயம் 2டிஸ்பூன்

சிவப்பு நிறத்தை விரும்புபவர்கள் டீ சாயத்தையும் அடர்ந்த ப்ரவுன் நிறத்தை விரும்புபவர்கள் கோப்பி சாயத்தையும் கலக்கலாம். ஏதாவது ஒன்றை மட்டும் உபயோகிக்கலாம்.

இத்துடன் நெல்லிக்காய் பௌடர் 50கிராம்.

தயிர் 2டிஸ்பூன்

எலுமிச்சை பழச்சாறு 5 இலிருந்து 8 சொட்டு

இவையணைத்தையும் கலந்து இரும்புப் பாத்திரத்தில் முதல் நாளே ஊற வைக்க வேண்டும். மறு நாள் இந்தக் கலவையைத் தலைக்குத் தேய்த்து குளித்தால் முடி பளபளப்பாகும்.

இது கெண்டிசனராகவும் உபயோகப்படும்.

மருதாணிப் பொடி 250 கிராம்

டீத் தூள் 4டிஸ் பூன்

கோப்பித் தூள் 4டிஸ் பூன்

எலுமிச்சம் பழச்சாறு 1

தயிர் 1கப்

முட்டை 1

கத்தா பௌடர் 1டிஸ் பூன்

இவை எல்லாவற்றையும் சேர்த்து தேவையான நீரில் கலந்து ஒரு இரும்புப் பாத்திரத்தில் முதல் நாள் இரவே ஊற வைக்க வேண்டும். மறு நாள் காலையில் முடியைப் பிரித்து முடியில் கலவையைத் தடவி அரை மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின் ஸம்போ போட்டு தலைமுடியை அலச வேண்டும்.

இதை சொரசொரப்பான முடி உள்ளவர்கள் பயன்படுத்தக் கூடாது.

### பூச்சி வெட்டிற்கு

சிலருக்கு பூச்சி வெட்டுப் பிரச்சனையால் முடியில் ஆங்காங்கே வழுக்கை விழுந்த இடத்தில் வெங்காயத்தை தேய்த்தால் முடி வளரும்.

வெங்காயச் சாற்றை தலையில் தேய்க்கு முன்பு லேசாக எண்ணெய் தடவிக் கொள்ளவும். முடி உள்ள இடத்தில் சாறைத் தடவினால் முடி கொட்டும்.

### செம்பட்டை மறைய

முட்டை வெள்ளைக் கருவை தலையில் தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவிவிட வேண்டும். இவ்வாறு வாரம் இரு முறை செய்து வந்தால் செம்படை மறையும்.

### பேன் தொல்லை நீங்க

1 வசம்பை தண்ணீர் விட்டு அரைத்து தலையில் நன்றாக தேய்த்து ஊற வைக்க வேண்டும். பின் சாதாரண தண்ணீரில் தலையை நன்றாக அலசி விடவும்.

2 துளசி இலையை நன்றாக மையாக அரைத்து தலையில் தடவி சிறிது நேரம் ஊற வைக்க வேண்டும். பின் வெதுவெதுப்பான நீரில் தலையை கழுவினால் பேன் எல்லாம் செத்து விழுந்து விடும்.

### முடியில் உள்ள பிசுபிசுப்பு நீங்க

அப்பிள் சாறு வெந்தயத் தூள் சீயாக்காய் தூள் ஆகியவற்றை சுடுநீரில் கலந்து தலைக்கு தேய்த்து அலசினால் முடி பிசுபிசுப்பு நீங்கி விடும்.

### நரை முடி கறுப்பாக

சிறிது கருவேப்பளையை எடுத்து காலையில் தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வரவும். மருதானி செம்பரத்தி கருவப்பிளை மூன்றையும் சம அளவில் எடுத்து மையாக அரைத்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் நரை முடி கறுப்பாகி விடும்.

தொடரும்...




# கர்ப்பிணி பெண்கள் புளிப்பு சாப்பிடலாமா?

மாங்காய் சாப்பிடுவது, சாம்பலைருசிப்பது என கர்ப்ப காலத்தில் பெண்களின் வித்தியாச தேடல் காலங்காலமாகத் தொடர்கின்ற ஒன்றே. கர்ப்பிணிப்பெண் கேட்டால் முடியாதெனச் சொல்லாமல் இவற்றை எல்லாம் வாங்கிக் கொடுக்கும் ஆட்கள் நிறைய பேர். மசக்கையின் போது இப்படி காரசார புளிப்பு உணவுகளை உட்கொள்வது சரிதானா?

"கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு உமிழ்நீரின் சுரப்பு அதிகமாக இருக்கும் வாந்தி உணர்வு இருக்கும். மாங்காய்,நெல்லிக்காய் மாதிரி புளிப்புப் பொருட்களை சாப்பிட்டால் வாய்க்கு இதமாக இருக்கும். அதே நேரத்தில் புளிப்புப் பொருட்களை அதிகமாக சாப்பிட்டால் வயிற்றில் அமிலத்தன்மையை அதிகமாக்கி நெஞ் செரிச்சல், எதுக்களிப்பு ஆகிய பிரச்னைகளை ஏற்படுத்தும். கர்ப்பிணிகளுக்கு பொதுவாக இரும்புச்சத்து குறைவாக இருக்கும். இதனால் சிலர் சாம்பல் சாப்பிடுவதை விரும்புவார்கள். சாம்பலை சாப்பிடவே கூடாது.

உப்பும், காரமும் அதிகமுள்ள ஊறுகாயைத் தவிர்க்க வேண்டும். உப்பு அதிக முள்ள உணவுப்பொருட்களை கர்ப்பிணிகள் சாப்பிட்டால் உயர் ரத்த அழுத்தம் உருவாகும் வாய்ப்புண்டு. கர்ப்பிணிகள், ஆசைப்பட்ட உணவுகளை அளவோடு சாப்பிட்டுக் கொள்ளவேண்டும். காரமான உணவுகளை சாப்பிட நேர்ந்தால் கடைசியாக தயிரோ அல்லது நீர் மோரோ எடுத்துக் கொண்டால் வயிற்றில் ஏற்படும் அமிலத்தன்மை ஓரளவு குறையும்.



# புருவ முடியை அகற்றும் பொழுது

குறுகிய நெற்றி உள்ளவர்களுக்கு புருவங்களுக்குள் இடைவெளி அதிகம் இருக்கட்டும். நீண்ட நெற்றி உள்ளவர்களுக்கு புருவங்களுக்குள் நீண்ட இடைவெளி தேவையில்லை.ஓவல் முகமுடையவர்களுக்கு புருவம் சற்று வளைவாக இருந்தால் வசீகரமாகவிருக்கும்.

அகன்ற மூக்கு உள்ளவர்கள் புருவபங்களின் இடைவெளியை அதிகப்படுத்தாதீர்கள்.புருவங்கள் நெருங்கியிருந்தால் முகம் குறுகி கண்கள் சிறிதாக தெரியும். சதுர முகம் உள்ளவர்கள் பெரிய வளைவாக பிறை வடிவில் மாற்றிக் கொள்ளுங்கள். முகம் நீள் வட்டமாக தெரியும்.

புருவத்தின் முடிவு மிகவும் கீழ் நோக்கி இருந்தால் வயதான தோற்றம் தரும். மாற்றிக் கொள்ளுங்கள். வட்ட முகம் உள்ளவர்கள் புருவம் கீழ் நோக்கி வருவதுபோல் அமைத்து கொள்ளவும். நீள் வட்ட முகமுடையவர்கள் சிறிய புருவத்தை அமையுங்கள். நீள மூக்கு உள்ளவர்களுக்கு புருவம் தளைத்தே இருக்கட்டும். தினமும் விளக்கெண்ணெய் தடவுங்கள். முடி நன்றாக வளரும்.



# வீட்டில் அணியும் உடைகள்

வீட்டில் இருக்கும் போது உடை அணியும் விஷயத்தில் அக்கறை செலுத்த வேண்டியது இல்லை என சில பெண்கள் நினைக்கிறார்கள். இது தவறான மனோபாவமாகும். வீட்டில் இருப்பவர்கள் நம்மை சார்ந்தவர்களாகவே இருப்பினும் வீட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப உடை அணிய வேண்டும். வீட்டில் இருக்கும்போது பகட்டாக உடை அணிவது தேவையில்லை என்றாலும் வீட்டிற்கு ஏற்ற மாதிரி உடை அணிவது அவசியமே.

**அதிக உடையும் குறைந்த உடையும்**

பெண்கள் பொதி சுமப்பது போல உடல் முழுவதும் சுற்றிய நிலையில் அதிகமான அளவில் உடை அணிவது அழகைக் கெடுக்கும். அதற்காக அங்கங்கள் தெரியும் அளவுக்கு மிகவும் குறைவான ஆடைகளை அணியக் கூடாது. வெளியில் செல்லும்போது இலேசான நிறம் அமைந்த புடவைகள் அல்லது மெல்லிய பூக்கள் போட்ட புடவை அணிந்து செல்லலாம்.

**புடவைக்குப் பொருத்தமான சோளிகள்**

பெண்கள் அணியக்கூடிய சோளிகளின் கைகளிலும் கழுத்திலும் லேஸ்களை வைத்துத் தைத்துக் கொண்டால் அவை என்ன வண்ணத்தில் புடவை அணிந்தாலும் அதற்கு பொருத்தமாக இருக்கும்.

**அலுவலகப்பெண்கள் அணியும் ஆடை**

அலுவலகங்களுக்கோ கல்லூரிகளுக்கோ செல்லும் பெண்கள் மிகவும் பகட்டாகவும் கண்களைப் பறிக்கும் விதத்தில் ஆடை அணிவதை தவிர்க்க வேண்டும். ஆனால் ஒரேயடியாக மோசமான ஆடைகளைத்தான் அணிய வேண்டும் என கருதிவிடக்கூடாது.

கண்ணியமான தோற்றத்தை அளிக்கக் கூடிய சூழ்நிலைக்கு ஏற்ற உடையை அணிந்து செல்வது மிகவும் அவசியம்.

**மெல்லிய பெண்களுக்கு உடைகள்**

மிகவும் ஒல்லியாக தோற்றமளிக்கும் பெண்கள் இறுக்கமாக உடை அணியக் கூடாது. சோளியின் கைகள்கூட மிகவும் பிடிப்பாக இல்லாமல் சற்று தளர்த்தியாக இருப்பது நல்லது.

**புடவையின் அமைப்பும் உருவத்தோற்றமும்**

பெண்கள் அணியும் அணியக்கூடிய புடவையின் அமைப்பே அவர்களின் தோற்றத்தையே மாற்றியமைக்கூடிய தன்மையுடன் திகழ்கின்றது. புடவையில் உள்ள டிசைன் வெறும் அழகிற்காக மட்டுமே அமைந்திருப்பதாகக் கருதிவிடக்கூடாது. திட்டமிட்டு புடவையைத் தேர்ந்தெடுத்து உடுத்தினால் பெண்களின் உருவ அமைப்பே மாற்றிவிடக்கூடும்.

உதாரணமாக பெண்கள் அணியக்கூடிய புடவையில் அமைந்த கோடுகள் குறுக்கு வாட்டில் அமைந்தால் உயரமான பெண்கள் குள்ளமாக இருப்பது போன்ற பிரமைபார் பவர்களுக்கு தோன்றும். புடவையில் அமைந்த கோடுகள் நேர்வாக்கில் அமைந் தால் குள்ளமானவர்கள் சற்று உயராமாக இருப்பது போல காட்சி தருவார்கள். கடற்கரை போன்ற இடங்களுக்கு சென்றால் கடற்கரை போன்ற பொது இடங்களுக்கு குடும்பத்துடன் செல்லும் போது மிகவும் நெருக்கமாக கட்டம் போடப்பட்ட மிகவும் அழுத்தமான சாயம் கொண்ட கைத்தறி சேலைகளை உடுத்திச் சென்றால் சாந்தமாக இருக்கும். ●

# தொப்பையால் அவதியா



தினமும் கண்ணாடியில் உங்கள் உடல் வடிவத்தை பார்க்கும் போது வருத்தப்படுகிறீர்களா? உங்களுக்கு பிடித்த சட்டையின் பட்டனை போட முடியாத அளவில் பானை போன்று வயிறு வீங்கியுள்ளதா? அதைக் குறைக்க கண்ட டயட்டைப் பின்பற்றுகிறீர்களா? கவலையை விடுங்கள்.

காலை உணவாக கீழே கொடுக்கப்பட்டுள்ளதை உட்கொண்டு வந்தாலே அடிவயிற்றில் தேங்கியுள்ள கொழுப்புக்களைக் கரைக்கலாம். மேலும் இந்த காலை உணவு மிகவும் சுவையாக விரும்பி சாப்பிடும் வகையில் தான் இருக்கும். நீங்கள் அதைத் தெரிந்து கொள்ள விரும்பினால், தொடர்ந்து படியுங்கள்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள காலை உணவு உடலின் மெட்டபாலிசத்தை சீராக்கி, உடலை வலிமையாக்கும். மேலும் இந்த காலை உணவு உடலில் தேங்கியுள்ள நச்சுக்களை வெளியேற்றுவதோடு, குடலையும் சுத்தம் செய்யும். இந்த காலை உணவு மலச்சிக்கல், மோசமான குடலியக்கம் மற்றும் உடல் பருமன் இருப்போருக்கு சிறந்த ஒன்று.

இந்த காலை உணவு மிகவும் ஊட்டச்சத்து நிறைந்தது மற்றும் ஆரோக்கியமானது. ஏனெனில் இதில் தலைமுடி மற்றும் சருமத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்தத் தேவையான கனிமச்சத்துக்களும், வைட்டமின்களும் ஏராளமாக உள்ளது.

இந்த காலை உணவை எடையைக் குறைக்க விரும்புவோர் உட்கொண்டு வந்தால், ஒரு மாதத்தில் 3 கிலோ வரை குறைக்கலாம். மேலும் வயிற்றைச் சுற்றி தேங்கியிருக்கும் கொழுப்புக்கள் குறைந்து தொப்பை மறைவதையும் காணலாம்.

உலர்ந்த ப்ளம்ஸ் 57குறைந்த கொழுப்புள்ள தயிர் 1 கப்ஆளி விதை பவுடர் 1 டேபிள் ஸ்பூன்ஓட்ஸ் பவுடர் 2 டேபிள் ஸ்பூன்கொக்கோ பவுடர் 1 டீஸ்பூன்

இந்த காலை உணவை முதல் நாள் மாலையிலேயே தயார் செய்து கொண்டு, காலையில் சாப்பிட நன்றாக இருக்கும்.

* அதற்கு உலர்ந்த ப்ளம்ஸ் பழத்தை 100 மி.லீ கொதிக்கும் சுடுநீரில் போட்டு, 10 15 நிமிடம் ஊற வைத்துக் கொள்ளவும்.
* பின் ஒரு கிண்ணத்தில் கொக்கோ பவுடர், ஆளி விதை பவுடர் மற்றும் ஓட்ஸ் பவுடரைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

பின்பு அதில் தயிரை ஊற்றி நன்கு கலந்து கொள்ள வேண்டும்.

* பின்னர் அத்துடன் ஊற வைத்துள்ள ப்ளம்ஸை அரைத்தோ அல்லது துண்டுகளாக்கியோ சேர்த்து நன்கு கலந்து, ஃப்ரிட்ஜில் வைத்து விட வேண்டும்.
* மறுநாள் காலையில் இதனை உட்கொள்ளுங்கள். ஆனால் இதனை சாப்பிட்ட முதல் நாள், சற்று வித்தியாசமான உணர்வை உணர்வீர்கள். அதற்கு அஞ்ச வேண்டாம். தைரியமாக உட்கொண்டு வாருங்கள். நிச்சயம் நல்ல மாற்றத்தைக் காண்பீர்கள்.

தொப்பை மற்றும் உடல் எடையைக் குறைக்க நினைக்கும் போது, தினமும் உடற்பயிற்சி செய்து வருவதோடு, உணவுகளில் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். ஆரோக்கியமான பழங்கள் மற்றும் காய்கறிகளை அதிகம் உட்கொள்ள வேண்டும். எண்ணெயில் பொரித்த அல்லது வறுத்த உணவுகளை அறவே தவிர்க்க வேண்டும். தண்ணீர் அதிகம் பருக வேண்டும்.



கலப்பின விதைகளில் இருந்து உருவாக்கப்பட்டது 'ஒக்டோபஸ் தக்காளி மரங்கள்'. ஒரு தண்டில் இருந்து பல கிளைகள் ஒக்டோபஸ் கைகள் போலப் படர்ந்திருப்பதால் இந்தப் பெயர். 40 முதல் 50 சதுர மீட்டர்கள் அளவுக்குப் பரந்து விரிந்திருக்கும் தக்காளி மரத்தில் ஒவ்வொரு சீசனிலும் பல்லாயிரக்கணக்கான கிலோ தக்காளிகள் விளைகின்றன.

அமெரிக்காவின் ப்ளோரிடாவில் உள்ள வேல்ட் டிஸ்னி வேர்ல்ட் ரிசார்ட்டில் விவசாயத்துக்காகத் தனி பசுமைக்குடில் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இங்கேதான் ஒக்டோபஸ் தக்காளி மரங்களும் இருக்கின்றன.

சீனாவில் இருந்து தக்காளி விதைகள் கொண்டு வரப்பட்டு, இங்கே விதைக்கப்பட்டன. ஒரு தக்காளி மரம் வளர்வதற்கு 1.2 முதல் 1.5 ஆண்டுகள் வரை ஆகிறது. 8 மாதங்கள் வரை இந்த மரம் காய்ப்பதில்லை. அதற்குப் பிறகு பூத்து, காய்க்க ஆரம்பித்தால் 14 ஆயிரம் தக்காளிகள் வரை அறுவடை செய்யலாம்! தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் 2 தக்காளி மரங்களில் இருந்து 32 ஆயிரம் தக்காளிகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 522 கிலோ.

டிஸ்னி வேர்ல்டில் 1 மணி நேரம் பசுமைக்குடிலைச் சுற்றிப் பார்ப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அசாதாரணமான செடிகள், காய்கள், பழங்கள் போன்றவற்றை இங்கே பார்க்கலாம். ஒவ்வொரு செடியும் எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு விளைகிறது, எப்படிப் பராமரிக்கிறார்கள் போன்ற தகவல்களை சுவாரசியமாகத் தருவார்கள்.

நோர்வேயின் சான்ட்ஹார்னே தீவில் கட்டடப்பட்ட வீடு. மணல், களிமண், வைக்கோல் வைத்து இயற்கையான முறையில் வீட்டைக் கட்டுவது மோசமான வானிலை காரணமாக அந்த பகுதியில் சிரமம் என்றாலும், மனைவியின் விரும்பத்தை நிறைவேற்ற கட்டி முடித்துள்ளார்.


மண்ணும் மரங்களும் சேர்த்து வீடு கட்டப்பட்டுள்ளது. வீடு பாழாகாமல் இருப்பதற்கு, வீட்டைச் சுற்றி அரைக்கோள வடிவில் ஒரு கண்ணாடிக் கூண்டை உருவாக்கிவிட்டார். கடும் பனிப் பொழிவு அதிகம் நிலவும் இந்த இடத்தில், ஆண்டு முழுவதும் இதமான குளிர் நிலவும் வகையில் வீடு உருவாக்கப்பட்டிருக்கிறது. கண்ணாடிக் கூண்டுக்கும் வீட்டுக்கும் இடையே இருக்கும் பகுதியில் வீட்டுக்குத் தேவையான காய்களும் பழங்களும் விளைவிக்கப்படுகின்றன.


இந்த வீட்டுக்கு ஆழமான அடித்தளம் தேவை இல்லை. சுற்றுச்சூழலுக்கும் தீங்கு இல்லை. 15 மீற்றர் அகலமும் 7.5 மீற்றர் உயரமும் கொண்டது இந்தக் கட்டிடம். 360 கண்ணாடிகளும் 832 மறுசுழற்சி அலுமினியத் தகடுகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வீட்டின் ஆயுள் காலம் 100 ஆண்டுகள்.

"வீட்டிலிருந்து வெளியேறும் தண்ணீர் முழுவதும் தோட்டத்தில் பாய்ச்சப்படுகிறது. எங்களுக்கான உணவை ஆண்டு முழுவதும் நாங்களே தயார் செய்துகொள்கிறோம். நாம் எதை நம்புகிறோமோ, எப்படி வாழ விரும்புகிறோமோ, அப்படி வாழ்வதுதான் சிறந்த வாழ்க்கை! எங்கள் வாழ்க்கை முறை மற்றவர்களுக்குப் பிடிக்காமல் கூட இருக்கலாம். அதற்காக நாங்கள் வாழ்வது தவறாகிவிடாது. 4 குழந்தைகளுடனும் இயற்கையுடனும் சேர்ந்து வாழ்வது மிகவும் அற்புதமானது" என்கிறார் வீட்டுக்காரர்.



## தொழில்நுட்பம்





உலகின் ஆழமான வெப்ப நீர் குளம் இத்தாலியில் அமைக்கப்பட்டுள்ளது.


அமேசன் நிறுவனம் ஊழியர்களுக்கான மர வீடுகளை அமைத்து வருகிறது. சியாட்டிலில் உள்ள அமேசன் தலைமையிடத்துக்கு அருகில் ஒரு ஏக்கர் பரப்பளவில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாவரங்களை மர வீடுகள் அமைப்பதற்காக வளர்க்கிறார்கள்.

அமேசன் நிறுவனம் இண்டர்நெட் ஷொப்பிங், எலெக்ட்ரோனிக் புத்தகம் மற்றும் கிளவுட் கம்ப்யூட்டிங் போன்ற துறைகளில் இயங்கி வருகிறது.

தற்போது அடுத்த கட்டமாக மரவீடுகளை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. சிறிய அளவிலான மரவீடுகளையும் பெரிய அளவிலான மரவீடுகளையும் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்த வீடுகள் அனைத்தும் கோள வடிவில் உள்ளன. மேலும் மேம்படுத்திய தொழிநுட்பங்களுடன் கொண்ட மர வீடுகளாக இருக்கும்.

இது தொடர்பாக அமேசன் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஜெப் பிஜோஸ் கூறுகையில், "இன்று இவை சிறு விதைகளாக உள்ளன. ஆனால் இதுதான் எங்கள் நிறுவனத்தினுடைய மிகப் பெரிய தொழிலாக இருக்கப் போகிறது" என்று தெரிவித்துள்ளார்.






எங்களூர் வேப்பங்குச்சிதான் இது. ஆரோக்கியமாக பல் விளக்க வேப்பங்குச்சி, கருவேலம் குச்சிகள் நம் முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டது. ஆனால் நாகரிக மாற்றத்தில் நம்மவர்கள் மேலைத்தேச உற்பத்திகளை நாட தொடங்கிவிட்டார்கள். இது அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துள்ளது. வேம்பு, கருவேலம் மரக்குச்சிகளை பற்தூரிகைக்கு அளவாக வெட்டி, சிறிய டப்பாவில் அடைத்து விற்கிறார்கள். ஒரு டப்பாவில் ஆறு குச்சிகள். எட்டு டொலர். விரைவில் இங்கும் இவை விற்பனைக்கு வந்தாலும் ஆச்சரியமில்லை. வீட்டிலுள்ள வேம்பு, கருவேல மரங்களை வெட்டிவிட்டு, கடையில் குச்சிகளை வாங்குவார்கள் நம்மவர்கள்.

சில்லரைக் காசுகள் சேர்ந்துவிட்டால் பேர்ஸில் வைப்பதற்கு பெரும்பாடாகிவிடும். சில சில்லரை காசுகளுக்கே பேர்ஸ் புடைப்பாகிவிடும். இந்த கவலையைப் போக்குகிறது இந்த கொயின் ஹோல்டர். காசுகளின் அளவுக்கு ஏற்ப உள்ள இந்த ஹோல்டரில் காசுகளை வைத்தால் பேர்ஸ் புடைப்பாகத் தெரியாது. விசிட்டிங் கார்ட் போல இதையும் பேர்ஸுக்குள் வைத்துக் கொள்ளலாம்.





காலணிகளை லேஸ் கொண்டு முடிச்சிடுவது பலருக்கும் சங்கடமாகத்தான் இருக்கும். அந்த சங்கடத்தை போக்கும் விதமாக வந்துள்ளது இந்த காந்த கருவி. லேஸின் முடிச்சிடவேண்டிய முனை பகுதிகளை இதில் கோர்த்துக் இந்த காந்த கருவியை ஒன்றுடன் ஒன்று இணைத்துக் கொள்ள வேண்டும். கழற்றுவதும், திரும்ப பொருத்துவதும் இலகுவாக இருக்கும்.

# துருக்கியில் ராணுவப் புரட்சிக்குக் காரணம் என்ன?

ஸ்டான்லி ஜானி



துருக்கி ராணுவம் எர்டோகன் ஆட்சிக்கு எதிராக நடத்த முயற்சி செய்த ராணுவப் புரட்சிக்கு வரலாற்று ரீதியான காரணங்கள் உள்ளன.

வரலாற்று ரீதியாக அரசியலில் துருக்கிய ராணுவம் குறிப்பிடத்தகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ராணுவம் மிகவும் ஆச்சரியப்படத்தக்க வகையில் மதச்சார் பின்மை அரசியல் கொண்டது. ஜனநாயகம், அனைவருக்கும் இலவசக் கல்வி, பெண்களுக்கான சம உரிமை, மேற்கத்திய பாணி வாழ்க்கை முறை ஆகியவற்றை தங்களது கொள்கையாக வைத்துக் கொண்டுள்ள கீமலிசம் என்ற கொள்கையை ராணுவம் தூக்கிப் பிடிக்கிறது. மேலும் இவைதான் அரசின் கொள்கையாகவும் இருக்க வேண்டும் எனக் கருதுவது துருக்கிய ராணுவம்.

அதாவது, முஸ்தபா கீமல் அட்டாதுருக் என்பவர் அமல் செய்த கொள்கையே அங்கு கீமலிசம் என்று அழைக்கப்படுகிறது. சமூக, அரசியல், பண்பாட்டு மற்றும் சமயத்துறைகளில் தாராளவாத சீர்த்திருத்தங்களை தங்களது கொள்கைக்கு விளக்கமாக அளிப்பது கீமலிஸம். இதுதான் துருக்கிய ராணுவத்தின் கொள்கையும் ஆகும்.

2002ஆம் ஆண்டு எர்டோகன் ஆட்சியைப் பிடித்த பிறகு ராணுவத்திற்கு அதன் கீமலிச கொள்கைக்காக கடும் சவால்களை ஏற்படுத்தினார். எர்டோகனின் இஸ்லாமிய





அரசு அடிப்படையில் மதச்சார்பின்மைக் கொள்கையைக் கடைபிடிக்கும் கீமலிசத்துக்கு எதிரானது.

எர்டோகன் தன் ஆட்சியில் ராணுவத்தின் செல்வாக்கைக் குறைக்க சிலபல நடவடிக்கைகளை மேற்கொண்டார். ராணுவ நீதிமன்றத்தின் எல்லைகளை வகுத்தார். குடிமைச் சமூக கட்டுப்பாட்டின் கீழ் மூத்த/ உயர் ராணுவ அதிகாரிகளைக் கொண்டு வந்தார். அதாவது, சமூகத்திலும் அரசிலும் ராணுவத்தின் செல்வாக்கை வலுவிழக்கச் செய்யும் திட்டங்களை அரங்கேற்றினார் எர்டோகன்.

கடந்த காலங்களில் நான்கு முறை ராணுவம் வெற்றிகரமாக ஆட்சியைப் பிடித்திருக்கும் வேளைகளில் எர்டோகனின் இத்தகைய நடவடிக்கைகள் ராணுவத்துக்கு கடும் சவால்களை ஏற்படுத்தின. ஆனால் மக்களிடையே புகழ்பெற்ற எர்டோகன் தனது ஆட்சியில் ஓரளவுக்கு பொருளாதார, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியிருந்ததால் இவருக்கு செல்வாக்கு கூடியிருந்தது. இதனை வைத்துக் கொண்டு அவர் சில ராணுவ உயரதிகாரிகளை சதி வழக்கில் உள்ளே தள்ளினார்.

ஆனால் பொதுமக்கள் மற்றும் ராணுவத்தினரின் கடும் எதிர்ப்பையும் மீறி எர்டோகன் 2007ல் அப்துல்லா குல் என்பவர் அதிபராவதற்கு ஆதரவளித்தார். இஸ்லாமியக் கட்சியுடன் குல்லுக்கு இருந்த தொடர்பு காரணமாக அவர் அதிபராவதை ராணுவம் எதிர்த்தது. ஆனால் எப்படியோ ராணுவத்தின் செல்வாக்கைச் சரிவடையச் செய்து, அரசியலில் அதன் செல்வாக்கை முறியடித்து தன்னுடைய சிவில் அரசின் அதிகாரத்தை பலமட்டங்களிலும் நிறுவினார் எர்டோகன்.

ஆனால் கடந்த 2 ஆண்டுகளில் இவையெல்லாம் மாற்றமடைந்தன. துருக்கி வெளியுறவு கொள்கையில் ஒரு சிந்தனை



மாற்றம் ஏற்பட அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. நாட்டில் பாதுகாப்பின்மை அதிகரித்தது, அதே வேளையில் எர்டோகனின் காட்டாட்சியின் போக்கு அதிகரிக்க எர்டோகனின் ஏ.கே. கட்சியின் செல்வாக்கு பலவீனமடைந்தது.

2011ல் சிரியாவில் முதன் முதலாக நெருக்கடி தோன்றிய போது சிரியா அதிபர் பஷார் அல் அசாத்தின் ராஜினாமாவைக் கோரிய முதல் உலகத் தலைவரானார் எர்டோகன். அதன் பிறகு சிரியாவில் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களுக்கு கடுமையாக ஆதரவளித்தார் எர்டோகன். இது அவர் மீதான எதிர்ப்புக்கு அடித்தளமாக அமைந்தது. இவரது இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களுக்கான ஆதரவினால் சிரியாவில் சிவில் யுத்தம் மேலும் விரிவும் ஆழமும் அடைந்தது. இதனால் துருக்கிக்கு பெரிய அளவில் சிரியாவிலிருந்து அகதிகள் குவிந்தனர். இரண்டாவதாக இஸ்லாமிக் ஸ்டேட் என்ற ஐஎஸ்ன் செல்வாக்கும் அதிகரித்தது. ஐ.எஸ். தற்போது எப்போதாவது துருக்கியையும் தாக்கி வருகிறது.

மேலும், சிரியாவில் துருக்கியின் செல்வாக்கு ரஷ்யாவின் விரோதத்தைப் பெற காரணமாக அமைந்தது. துருக்கியின் மீது ரஷ்யாவின் பொருளாதார தண்டகள் துருக்கியை பெரிதும் பாதித்தது. துருக்கி உள்நாட்டு இனப்பதற்றங்களும் சிரியா நெருக்கடியுடன் தொடர்புடையதாயிருந்தது, இதை மேலும் மோசமாக்கியது.

நாட்டின் தென்மேற்கு பகுதியில் குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் மீது எர்டோகன் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டார். அதாவது ஐஎஸ்க்கு எதிராக பெரிய அளவில் குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் எழுச்சியுற்ற போது எர்டோகன் குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் மீது கண்மூடித்தனமான அடக்கு முறையை ஏவிவிட்டார். குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கு சர்வதேச ஆதரவு பெருகியது. மேலும் அவர்களது அரசியல் பிரிவு எர்டோகனின் ஏ.கே. கட்சிக்கு அரசியல் ரீதியாக சவால் விடுத்தது.

இதனையடுத்து, ஐஎஸ், குர்திஷ் கிளர்ச்சியாளர்களினால் நாட்டின் பாதுகாப்புக்கு, குறிப்பாக கிழக்குப் பகுதியில், நெருக்கடி ஏற்பட ராணுவத்துடன் வெள்ளைக் கொடி காட்டி சமாதானம் மேற்கொள்ள முயற்சி செய்தார் எர்டோகன். ராணுவம் இல்லாமல் எர்டோகன் அங்கு என்ன செய்து விட முடியும்? எர்டோகனின் விமர்சகரும் இஸ்லாமிய கல்வியியல் பண்டிதருமான ஃபெதுல்லா குலென் என்பவர் கீமலிச ராணுவத்துடன் சேர்ந்தார். குலெனிய பிரிவை எர்டோகன் “இணை அரசியல் அமைப்பு” என்றே வர்ணித்தார்.

கடந்த சில வாரங்களில் துருக்கிய அரசு தனது அயலுறவுக் கொள்கையில் சில மாற்றங்களைச் செய்தது. விளாதிமிர் புதினைச் சந்தித்தார் எர்டோகன். மேலும் இஸ்ரேலுடன் தனது உறவை இயல்பு நிலைக்குத் திருப்பினார். முக்கியமாக குத்துக்கரணமடித்து சிரியா அதிபர் ஆசாத்துக்கு ஆதரவையும் காட்டினார் எர்டோகன். இதனோடு நிறுத்தாமல் உள்நாட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ராணுவ வீரர்கள் மீது சட்டம் பாயாமல் தடுத்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டார்

ஆனால், இவரது இந்தத் திடீர் மாற்றம் ராணுவத்தினர் மத்தியில் உண்மையான திருப்தியை ஏற்படுத்தவில்லை. ஏதோ ஒருவிதத்தில் எர்டோகன் மீது ராணுவத்துக்கு சந்தேகம் இருந்து கொண்டுதான் இருந்தது. எர்டோகனும் ராணுவத்தை திருப்தி செய்யும் நடவடிக்கையில் வெற்றிபெற முடியவில்லை.

இதனையடுத்து, ராணுவம் எர்டோகனை அகற்ற ராணுவப் புரட்சியில் ஈடுபட்டது. இது குறித்து எர்டோகன் தனது தொடக்க எதிர்வினையில் குறிப்பிடும்போது, “இணை அரசியல் அமைப்பு’ காரணம் என்றார். ஆனால் குலென் என்பவரது ஆலோசனை சார்ந்து இந்த புரட்சி நடந்திருந்தால் அது இப்போதை விட பெரிதாகவே இருந்திருக்கும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

ராணுவக் கிளர்ச்சியாளர்கள் தங்கள் அறிக்கையில் கூறும் போது, “மனித உரிமைகள், மதச்சார்பின்மையைக் காக்க அரசை நாங்கள் கைப்பற்றியுள்ளோம்” என்று கூறியிருப்பது கீமலிச கொள்கையை அடிப்படையாகக் கொண்டதே. வெற்றி பெறாத இந்த இராணுவப்புரட்சியின் உடனடி விளைவுகள் எப்படியிருந்தபோதும், துருக்கியின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஒரு அரசியல் குழப்பமாகும் இது என்பதில் ஐயமில்லை..

## விடுகதை

1. குதி குதியெனக் குதிக்கிறான், கெட்டைப் பல்லால் சிரிக்கிறான். அது என்ன?
2. குழந்தைக்கு எந்தக் கை பலமான கை?
3. குட்டியும் போடும், குவலயத்திலும் பறக்கும் அது என்ன?
4. குட்டைப் பெண்ணுக்கு எட்டு முழச்சேலை அது என்ன?
5. குடுக்கை நிறைய வைரமணி அது என்ன?

விடைகள்

*1) சோளப்பொறி 2) அழுகை 3) வௌவால் 4) நீர் இறைக்கும் வாளி 5) மாதுளம் பழம்.*

## ஆண் பெண் மரபு

ஆண் யானை - களிறு
பெண் யானை - பிடி

ஆண் கோழி - சேவல்
பெண் கோழி - பேடு

ஆண் மான் - கலை
பெண் மான் - பிணை

ஆண் நண்டு - அலவன்
பெண் நண்டு - பெடை

ஆண் குரங்கு - கடுவன்
பெண் குரங்கு - மந்தி

ஆண் மயில் - பேத்து
பெண் மயில் - அளகு

ஆண் ஆடு - கடா
பெண் ஆடு - மறி

ஆண் மாடு - எருது
பெண் மாடு - பசு

**ஆ.நாகவர்சா**
*தரம்3, வ.முருகனூர்*
*சாரதா வித்தியாலயம்.*

**உடுவை எஸ். தில்லைநடராசா**

# மந்திரக் கண்ணாடி




ராமுவும் பாலுவும் ஆளுக்கொரு முத்தாக எடுத்து அவற்றைப் பத்திரப்படுத்திக் கொண்டார்கள்.

அந்த குகையின் மறு பக்கத்தில் இன்னொரு கதவு காணப்பட்டது. அக் கதவை ராமு வெகு சுலபமாகத் திறந்தான். பல படிக்கட்டுக்கள் கதவுக்கு வெளியால் காணப்பட்டன. உடுப்பிட்டிக்கு செல்லும் சுருங்கை என்று படிக்கட்டொன்றில் எழுதப்பட்டிருந்தது. மந்திரக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு வந்து சுரங்கப் பாதை வழியாகவே உடுப்பிட்டிக்கு செல்லாம் என ராமுவும் பாலுவும் யோசித்தனர்.

அவர்களிருவரும் குகையிலேயே வியாழக் கிழமை இரவை கழித்தார்கள். வெள்ளிக்கழமை அதிகாலையில் ராமுவும் பாலுவும் கண் விழித்தெழுந்து குகைக் கதவை முன்பு இருந்த போலச் சாத்திவிட்டு பாறைக்கு வெளியே வந்தார்கள்.

இன்னும் சரியாக விடியாததினால் காட்டிலே இருள் பரந்திருந்தது. ராமுவும் பாலுவும் கடவுளை தரிசித்து விட்டு மின் விளக்கின் உதவியோடு நடந்து சென்றார்கள்.

ஒரு மரத்தில் உள்ள கிளை ஒன்றில் கொடி போல ஒரு பொருள் ஆடியது. பாலு அப் பொருளை நோக்கி சுட்ட பின்பு தான் அது கொடியல் ஒரு பாம்பு என்பதை ராமு அறிந்தான்.

இன்று சாயந்தரத்திற்குள் மந்திரக் கண்ணாடியை எப்படியாவது எடுத்து கொண்டு இருள் சூழ்வதற்கு முன்னால் குகையை அடைந்து விட வேண்டும் என்று திட்டமிட்டுகொண்டே இரண்டு நண்பர்களும் காட்டின் நடுப்பகுதியை நோக்கி வெகு வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள்.

சிறிது தூரம் நடந்து சென்றதும் ராமுவுக்கு பயம் பிடித்து கொண்டது. எப்படி மந்திரக் கண்ணாடியை கைப்பற்றலாம்? என்று யோசித்தான் பாலு .

பாலு ராமுவை எதற்குமத் தயாராக இருக்கும்படி சொல்லி விட்டு மந்திர வாதியின் குடிசையை நோக்கி நடந்தான். அதிக தூரம் நடந்ததும். மந்திரவாதியின் குடிசையை காணாததால் பாலு ஒரு உயர்ந்த மரத்தில் ஏறி காட்டை உற்று நோக்கினான்.

ஒரு கிலோ மீறற்ர் தூரத்தில் இருந்து மந்திர வாதியின் குடிசை பாலுவின் கண்களுக்கு மெதரிந்ததுது. மரத்தை விட்டு இறங்கிய பாலு ராமுவை கூட்டி கொண்டு மந்திரவாதியின் குடிசை பக்கம் சென்றான்.

மந்திர வாதி வசித்து வந்த குடிசை மூடப் பட்டு இருந்தது. குடிசையின் வாயிலில் இரண்டு பெரிய நாக பாம்புகள் படம் எடுத்து ஆடிக் கொண்டிருந்தன.

ராமு படம் எடுத்த பாம்புகளை கண்டதும் பயத்தால் நடுங்கி பின்னுக்கு ஓடினான்.

பாலு தன் கைத் துப்பாக்கியினால் இரண்டு பாம்புகளையும் சுட்டு கொண்டு விட்டு ராமுவை வெளியே நிற்க வைத்து விட்டு உள்ளே சென்றான்.

குடிசை முழுவதும் மந்திரக்கண்ணாடியை தேடி அலைந்தான் பாலு. ஒவ்வொரு பெட்டியாக பார்த்து கொண்டு சென்றான். ராமுவும் குடிசையின் உள்ளே வந்து பாலுவுடன் சேர்ந்து மந்திரக் கண்ணாடியை தேடினான்.

ரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டிருந்த தங்கப் பெட்டியொன்றை ராமுவும் பாலுவும் கண்டனர். அப் பெட்டியின் மேல் புரியாத மொழியில் ஏதோ எழுதப்பட்டிருந்தது.

**தொடரும்...**




மனதை கவரும் வயல் வெளிகளும் மனதை சாந்தி படுத்தும் ஆலயங்களும் கண்ணை பறிக்கும் வண்ண மலர்களும் நிறைந்த அழகிய சிற்றூர் தான் காரை ஊர். அங்கு தான் வேலன் கமலாம்பாள் தம்பதியினர் வாழ்ந்தனர். இவர்களுக்கு ஒரு அழகிய பெண் பிள்ளை இருந்தாள். அவளது பெயர் மதுமதி. அவள் ஒரு பள்ளி மாணவி. வேலன் ஒரு விவசாயி ஆவான். ஆரம்பத்தில் இவர்களது வாழ்க்கை சிறப்பாகவே அமைந்திருந்தது. காலம் செய்த சில கோலங்களாளும் வேலனது சில தவறான நட்பு வட்டாரங்களாளும். மது அருந்துதல் சீட்டாடுதல் போன்ற தவறான காரியங்களில் ஈடுபாடத் தொடங்கினான். வேலன் தவறான வழி நோக்கி செல்ல வேலனது வீட்டு பொருளாதாரமோ வறுமையில் வழி நோக்கி செல்ல தொடங்கியது. அவன் உழைப்பது மது அருந்துவதற்கும் சூதாடுவதற்குமே போது மானதாகவிருந்தது. இதன் காரணமாக குடும்பம் நடத்துவதற்காக அயலவரிடம் கமலாம்பாள் கடன் வாங்கினாள். சூதாட்ட பந்தயத்திற்காகவும் மதுவிற்காகவும் வேலன் கடன் வாங்கினான்.

கமலாம்பா தான் பாவம் தினம் தோறும் வீட்டிற்கு வருபவர்கள் பெரும்பாலானோர் கமலாம்பாளிடம் சொல்வது 'நீ என்ன செய்வாய் உன் தலைவிதி அப்படி ஆகிப் பொய்விட்டது". ஆனால் நீ பாவம் என்று எங்களது காசினை உன்னிடம் தந்து விட்டாள் நாங்களும் தான் யாரிடமும் கையேந்த வேண்டும். என்று தான். சில வேளைகளில் அவளது பிள்ளைகளையும் இழுத்து கதைப்பார்கள். அவள் எரிந்து விழுவாள். என்றோ ஒரு நாள் என் பிள்ளைகளின் வருகைக்காக நீங்கள் ஏங்கிக் கிடப்பீர்கள் என்று கொந்தளிப்பாள். அவள் அப்துள் கலாமின் சிஸ்யையோ தெரியவில்லை. அவள் கனவு காண்பது அதிகம்.

ஆனால் அவளது கனவுகள் கனவாகவே கலைந்தன நினைவாகவில்லை. அவளது கனவன் வேலன் புற்று நோய் வந்து இறந்தான். குடும்ப சுமை முழுதும் மதுமதி தலையில் விழுந்தது, அவளுக்கு அப்போது 18 வயது. தான் செய்வதே சரி என்று நினைப்பவள் அவள். தந்தையின் கடனை அடைப்பதற்கு உழைக்க வேண்டும். அதற்காக வேலை தேடி அலைந்தாள் அவள்.

உலக மேடையில் நடனமாடிய ஆபாசம் இலங்கை மேடையிலும் நடனமாடியது. இதற்கான மேடைகள் விபச்சார விடுதி என்னும் பெயரில் அமைக்கப்பட்டிருந்தன. விபரம் தெரியாத பெண் அவள். அவளுக்கு அங்கு வேலை கிடைத்தது. தாயை அவமானப்படுத்தியவர்களின் முகத்தில் காசை தூக்கி எறிய வேண்டும் என்ற எண்ணம் அவளிடம் இருந்தது. அபணமாக அங்கு 1லட்சம் வாங்கிய காரணத்தால் வேலை பற்றி அறிந்தும் வேலை செய்ய வேண்டிய் நிலையில் இருந்தாள். மகளுக்கு இவ்வளவு சம்பளம் கொடுக்கின்றார்களே அந்த புன்னியவதிகள் யார் என்று பார்க்க வேண்டும் என்ற ஆசை கமலாம்பாளிடம் இருந்தது. என்ர பிள்ளை 10 லட்சத்திற்கு மேல உழைக்கிறால் இந்த கடன் எல்லாம் முடிந்த பிறகு நான் மகாராணி போல இருப்பன் என்று ஊருக்குள் சொல்லி திரிவாள். இப்படி சொல்லி திரிபவளுக்கு விபச்சாரமி என்றால் என்னவென்றே தெரியாது. அவளுக்கு அயலவர்கள் தான் சொல்லி புரிய வைத்தனர். அவர்கள் விளக்கம் சொல்லும் பொழுது வெந்த புண்ணில் வேல் பாய்ந்த போல் இருந்தது கமலாம்பாலுக்கு. தன் பிள்ளையா இது என்று ஒரு நிமிடம் ஆடிப் போய் விட்டாள்.

கொடுமை கொடுமை என்று கோயிலுக்கு போனால் கோயிலில் கொடுமை தலை விரிச்சு ஆடுது என்பதை போல கணவனை சொன்னால் குடிகாரன் என்பார்கள் மகளை சொன்னால் வேறொரு பெயரால் சொல்கிறார்கள். தன் தலையெழுத்தில் நின்மதிக்கே இடமில்லையா என்று நினைத்த கமலாம்பாள் தனது மகள் வரும் வேளையில் சுழமும் மின் விசிறியில் சுழன்று கொண்டிருந்தால். பிறப்பு கொடுத்தவளுக்கே இறப்பு கொடுத்திருந்தால் மதுமதி.

**துர்க்கசியா பிரபாகரன், 10A**
**யா/வேம்படி மகளீர்**
**உயர்தரப் பாடசாலை.**

## மாணவர் மலர்

**மாணவ, மாணவியரே உங்கள் ஆக்கங்கள் எதுவானாலும் தீபத்திற்கு அனுப்பி வையுங்கள். பெயர், பாடசாலை என்பவற்றை தெளிவாக குறிப்பிடுங்கள். புகைப்படங்களையும் சேர்த்து அனுப்பி வைக்கலாம்**






சேலம் மாட்டத்தில் அருகருகே வளர்ந்திருந்த அரச மரத்திற்கும், வேப்ப மரத்திற்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. திருமண தடை, கிரக தோஷங்கள் நீங்க இந்த விசித்திர திருமணம் நடத்தப்பட்டுள்ளது. அரச மரம் சிவனாகவும் (ஆண்), வேப்ப மரம் சக்தியாகவும் (பெண்) கருதப்படுகிறது. நன்கு வளர்ந்த இரு மரங்களுக்கும் திருமணம் செய்து, பிரம்மமுகூர்த்தத்தில் மங்கள வாத்தியம் முழங்க, மந்திரம் ஓதி, அரசுவுக்கும், வேம்புவுக்கும் முறைப்படி தாலி கட்டி திருமணம் செய்து வைக்கப்பட்டது. இதில் 500க்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றனர்.

வீடுகளில் ஆடு வளர்ப்பதை பார்த்திருப்பீர்கள். செல்லப்பிராணியாக வளர்ப்பதை பார்த்திருக்கிறீர்களா? பிரித்தானியா வாசியொருவர் வீட்டில் செல்லப்பிராணியாக வளர்க்கிறார். பிறக்கும்போது இறந்ததாக நினைத்து தாய் ஆட்டால் கைவிடப்பட்ட குட்டியை எடுத்து வளர்க்கிறார். நாய், பூனைகள் செய்யும் குறும்பை செய்வதாக கூறுகிறார். குறும்பு வீடியோக்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட,ஆடு இப்பொழுது உலகப்புகழ் பெற்றுவிட்டது. உடைகளிலும் அதன் படத்தை பயன்படுத்துகிறார்களாம்.வீட்டையே கழிவறையாக மாற்றுவதை விட வேறெந்த சங்கடமும் கிடையாதென்கிறார்!





குடும்பங்களில் மூத்த சகோதரர்கள் திருமணம் செய்யாமல் இருந்தால் பின்னால் இருப்பவர்கள் அவருக்காக காத்திருப்பார்கள். அவருக்கு திருமணமானால் 'றூட் கிளியர்' என உற்சாகமாவார்கள். அப்படி உற்சாகமானவர்களாக இருக்க வேண்டும். இந்தியாவில் ஒட்டப்பட்ட சுவரொட்டி. இணையங்களில் வெளியாகி சக்கைபோடு போட்டது.









2ம் ஆண்டில் கால்பதிக்கும் தமிழின் முதல்தர தீபம் வாரமலருக்கு எமது வாழ்த்துக்கள்...

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

# த சசிகா லேணர்ஸ்

THE SASIKA LEARNERS ද ශශිකා ලර්නර්ස්



கிளைகள் Govt Regt No - DS 882

மல்லாகம் சந்தி,மல்லாகம்.
021 224 3393
070 301 3014

ஓடக்கரை வீதி, சங்கானை.
021 225 1664
070 301 3016

வங்களாவடிச் சந்தி, வேலணை.
021 221 5472
070 301 3012

தலைமைக் காரியாலயம் : இல. 57, வேம்படி வீதி,யாழ்ப்பாணம். T.P : 0777 226 247,0212 217 678,0776 140 361

## த சசிகா லேணர்ஸ்

THE SASIKA LEARNERS

ද ශශිකා ලර්නර්ස්

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
Govt Regt No - DS 882

மல்லாகம் சந்தி, மல்லாகம். T.P - 021 224 3393, 070 3013014





சிறுவர்கள், பெரியவர்களுக்கான ரெடிமெட் ஆடைகள், அனைத்து விதமான பாதணிகள் என்பவற்றை பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்...

வவுனியா

UNLIMIT Fashion

நகரசபை சந்தை கட்டிடம், ஹொரவபொத்தான வீதி,
சின்னப் புதுக்குளம், வவுனியா.
தொ.பே : 024 2052579

2ம் ஆண்டில் கால்பதிக்கும் தீபம் வாரமலருக்கு எமது வாழ்த்துக்கள்...

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு தேவையான ஆவணங்கள், பொருட்கள் என்பவற்றை குறகிய நாட்களில் ஆகாய மார்க்கமாக அனுப்புவதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்...

## சஜீஸ் கொமினிகேசன்

வெளிநாட்டு பார்சல் சேவை



HOT LINE 024 222 2166

இல. 22, பஸ் நிலையம்,
வவுனியா.

கிளைகள்

சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை
ஏ9 வீதி, கிளிநொச்சி.

சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை
தபாற்கந்தோர் அருகாமை, தண்ணீரூற்று,
முள்ளியவளை.

M.S.K என்டர்பிறைசஸ்
கந்தசாமி கோவில் முன்பாக,
கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.

M.S.K என்டர்பிறைசஸ்
7ம் வட்டாரம், முல்லை வீதி,
புதுகுடியிருப்பு.

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 24.07.2016 அன்று வெளியிடப்பட்டது.